செ. கணேசலிங்கன்

# அந்நிய மனிதர்கள்



பரதன்
பதிப்பகம்

43-22
ணேச
L|PR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதன் பதிப்பகம்
63, தையப்பன் தெரு,
சென்னை-600 001
அளிக்கும்

செ. கணேசலிங்கன்
எழுதிய

# அந்நிய மனிதர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : மே, 1982
(c)

விலை ரூ. 4-50

அச்சிட்டோர் : லீப்ஸிக் பிரிண்டர்ஸ், சென்னை-600 014

## சில கருத்துகள்

'இன்றைய சமுதாய அமைப்பில் குடும்பங்களில் ஒற்றுமையில்லை; அமைதியில்லை; மகிழ்ச்சியில்லை. வறுமையும் துன்பமும் போராட்டமுமே நிறைந்துள்ளது, என்று பொது மையாக யாவரும் கூறுவதைக் கேட்கலாம்.

மனிதன் பிறக்கும்போது நல்லவன்; இரக்கம். அன்பு உடையவன், களங்கமற்றவன், என்று கூறுபவர் பின் சமுகத் துன்பங்களைப் பார்த்துவிட்டு மனிதனது தலைவிதி, விலங்குச் சுபாவம், அறியாமை, கடவுளை மறந்தமை, முற்பிறவிப் பயன் என்றெல்லாம் விளக்கம் கூற முனைகின்றனர். இந்நிலை ஏற்பட்ட தற்குரிய அடிப்படைக் காரணங்களை சமுக விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து பார்ப்பவர், தீர்வுகாண முயல் பவரே உயர்ந்த மனிதராவர்.

குடும்பங்களில் அமைதியின்மையையும் மனத்துன்பங்களை யும் உழைக்கும் தொழிலாளர்களது வாழ்வில் மட்டுமல்ல உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட முதலாளிகள், சிறு உடைமையாளர் குடும்ப வாழ்விலும் காணலாம்.

உடலுழைப்பில் ஈடுபடாத முதலாளிகள், பணத்தையும் ஆதிக்கத்தையும் வைத்துக் கொண்டு இன்பத்தைத்தேடி அலைகிறுர்கள். அவர்கள் நிரந்தரமான மகிழ்ச்சி (Happiness) யையோ, அமைதியையோ தம் வாழ்விலும் காண்ப தில்லை. அவர்கள் இன்பமென்று காண்பதெல்லாம் ஒருவித சென்சேஷனே (Sensation)-உணர்வுக் கிளர்ச்சியே. அதையே மகிழ்ச்சி யென்று எண்ணி மயங்குகின்றனர். நிரந்தர சந் தோசம் வேறு, சென்சேஷன் வேறு என்பதை அவர்கள் உணரத் தவறி விடுகின்றனர்.

முதலாளிகளும் தொழிலாளரது சமுதாயத்திலேயே வாழவேண்டிய வராகின்றனர். சமுதாய அமைப்பிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடுகளிலிருந்து அவர்களும் தப்பிவிடமுடியாது. ஏழைகளது அசுத்தம், நோய்கள், துன்பங்கள் அவர்களையும் பாதிக்கவே செய்யும். நசிந்த வர்க்கத்தவரும் பணக்காரரை, முதலாளிகளை அமைதியாக வாழவிடப் போவதில்லை. சுவாசிக்கும் காற்றையும் தண்ணீரையும் தாமே அசுத்தப் படுத்தும் போது முதலாளிகளும் அவற்றால் ஏற்படக்கூடிய தீமைகளிலிருந்து தப்பிவிடமுடியாது. பண்ட உற்பத்தியிலும் போட்டா போட்டி முதலாளிகளிடமே ஏற்படுகிறது. பெரிய மீன் சிறிய மீனை விழுங்கும் போட்டி. இதனால் ஏற்படும் பொறாமை, கழுத்தறுப்பு அவ்வர்க்கத்தவரிடையேயும் பொச்சரிப்பையும் அமைதியின்மையையும் ஏற்படுத்துகின்றன.

சமுதாயத்தில் சமத்துவமும் சம நீதியுமின்றி சுதந்திரமும் மகிழ்வும் ஏற்படமுடியாது. உழைப்பிலே, உற்பத்தி உறவிலே இன்றைய சமுக அமைப்பில் சமத்துவத்தையும் சம நீதியையும் காணமுடியாது. வேலைப் பிரிவினையால், வர்க்கப் பிரிவினையால் ஏற்பட்ட இந்த ஏற்றத் தாழ்வு குடும்பங்களின் மகிழ்வையும் அமைதியையும் பூரணத்துவ வாழ்வையும் பாதிக்கிறது.

'ஒரு சமுதாயத்தின் தன்மையை அளவிடவேண்டுமாயின் அங்குள்ள பெண்களின் நிலைமையை அறிந்தாலே போதும்' என்று ஏங்கெல்ஸ் கூறினார்.

பெண் 'பின் தூங்கி முன் எழுபவள்'- ஆண்தலையெடுத்த சமுதாயத்தில் அதிகநேரம் உழைக்க வேண்டியவளாகிறாள். இங்கும் வேலைப் பிரிவினையைக் காணலாம். வீட்டைப் பேணல், சமையல் செய்தல், குழந்தை வளர்ப்பு, துணி தோய்த்தல் ஆகியவை பெண் இனத்திற்குரிய வேலைகளாக திணிக்கப்படுகின்றன. முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த மேல் நாடுகளிலும் இதே நிலைமையே உள்ளது. பெண் வெளியே சென்று உழைக்கும் போதும் இவ்வேலைகள் அவளது 'கடமைகள்' ஆகவே ஒதுக்கப்படுகின்றன.



இவ்வாறு பெண்களின் உழைப்பு வீட்டு எஜமானனை கணவனால், குடும்பத்தால் சுரண்டப்படுகிறது. உழைப்பு சுரண்டப்படும்போது ஏற்படும் உறவை பகைமை உறவு என்று நாம் கொள்கிறோம். இந்நிலையில் கணவன மனைவி உறவும் சுமுக உறவாக இருக்க முடியாது.

இரண்டாவதாக, வாழ்நிலையே சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்ற கோட்பாட்டைக் கொண்டவர்கள் நாம். குடும்பத்தில் கணவனது உற்பத்தி உறவு, உற்பத்தி முறை ஒன்றாக இருக்கும். கணவன் தொழிற்சாலையிலோ, வாணிப நிலையத்திலோ, அரச நிறுவனங்களிலோ தன் உழைப்பு நேரத்தைக் கூலிக்கு விற்பவனாக இருக்கலாம். அவனது சிந்தனை, உணர்வு நிலைகள் வேறாக இருக்கும். குடும்பத்திற்கும் மதத்திற்கும் அடிமையாக வீட்டிலே 'கடமை' களைப் புரியும் மனைவியின் சிந்தனை, உணர்வு நிலை வேறாக இருப்பது தவிர்க்கமுடியாது. இவ்வாறு வேறுபட்ட உற்பத்தி உறவு, உற்பத்தி முறைகளினாலும் சிந்தனைகள் வேறுபட்ட நிலையில் குடும்பங்களில் ஒற்றுமை, அமைதி ஏற்பட முடியாது.

தொழிலாளர்கள் பலநூறுபேர் ஒரே தொழிற்சாலையில் வேலை செய்வதால் ஒன்று திரண்டு தம் கூலி அடிமை நிலைக்கு எதிராக வர்க்க உணர்வும் பெற்றுப் போராட முடிகிறது. பெண்கள் தனித்தனி குடும்பங்களில் பிரிந்து கிடப்பதால் ஒன்றுதிரண்டு போராட முடியாதவர்களாகின்றனர். மேல் நாடுகளில் பெண்களின் விடுதலை இயக்கங்கள் அரசிடம் சில உரிமைகள் வேண்டியே குரல் எழுப்புகின்றன. தம் அடிமைத் தனத்தை முற்றாக ஒழிக்கத் தக்க புதிய சமுதாயத்தை வேண்டிய போராட்டத்தை நடத்த அவர்கள் முயல்வதில்லை.

மூன்றாவது, கூலிக்காக உழைப்பைச் சந்தையில் விற்க நேரும் நிலையில் விருப்பமில்லாத, கட்டாய உழைப்பில் ஈடுபடுவதால் ஏற்படும் அந்நிய மாதல் நிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மனிதன் முதலாளியின் குறிக்கோள்களை நிறைவு செய்யும் சாதனமாக மாறிவிடுகிறான். குறிக்கோள்களை படைப்பாளி தீர்மானிப்பதாக இல்லை. தொழிலாளி உற்பத்தியின் ஓர் அம்சமாகிறான்; பண்டம், உபரி மதிப்பை உற்பத்தி செய்யும் சாதனமாகிறான். உற்பத்திச் செயலிலிருந்தே பிரிக்கப்படுகிறான்; யந்திரத்தின் ஒரு பகுதியாகி விடுகிறான்.

நாள் முழுவதும் உழைத்த போதும் உழைப்பிற்கேற்ற பண்டங்கள், தான் உற்பத்தி செய்த பண்டங்களே கிடைக்காததாலும் அந்நியமாகிறான். மனித உழைப்பை உறிஞ்சிய பண்டமே சமூக உறவுகளைத் தீர்மானிப்பதாக மாறி விடுகிறது.

இத்தகைய நிலையைக் கீழ்க் காணும் கதை நன்கு விளக்கும்.

''அப்பா, குளிர் தாங்க முடியவில்லை, அடுப்பில் கொஞ்சம் நிலக்கரி போடு''

''கரி இல்லை, மகனே''

''ஏன் கரியில்லை, அப்பா''

''கரி வாங்கப் பணமில்லை''

''ஏன் பணமில்லை அப்பா''

''வேலையில்லை. அதனால் பணமில்லை''

''ஏனப்பா, வேலையில்லை''

''அதிக கரி உற்பத்தி செய்து விட்டோம். விற்க முடியவில்லை என்று முதலாளி வேலையிலிருந்து நீக்கி விட்டான்''

தொழிலாளி அதிகம் உற்பத்தி செய்ய, அவன் நுகர்வது குறைந்து கொண்டே போகிறது. அவன் உற்பத்தி செய்த பண்டத்திற்கே அவன் அந்நியமாகிறான்.

போட்டா போட்டியே முதலாளித்துவ அமைப்பின் 'தனிச்சிறப்பு' நிலை என்று கூறுவர். இப் போட்டாபோட்டி



சமுதாயம் முழுவதும் ஊடுருவி நிற்கிறது. முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் உபரி மதிப்பில் பெறும் பங்கிற்காக நடைபெறும் போட்டி, உபரி மதிப்பை ஏகபோகமாக்கிக் கொள்ள பேராசைக்காரர்களான முதலாளிகளிடையே நடைபெறும் போட்டி, வேலையற்ற பட்டாளம் நிறைந்த சமுகத்தில் உழைப்புச் சக்தியை விற்பதற்குப் பாட்டாளிகளிடையே நடைபெறும் போட்டி. கல்வியில், விளையாட்டில், பண்ட விற்பனையில், கலை இலக்கியப் படைப்புகளில் எல்லாம் போட்டா போட்டி நிகழ்வதைக் காணலாம். இந்நிலைகளால் இன்றைய சமுக அமைப்பில், உற்பத்தியில், விநியோகத்தில், பரிமாற்றத்தில் கூட்டுறவு ஏற்படுத்த முடியாது உள்ளது. போட்டா போட்டி, பகைமை, பொறாமை, பேராசை ஆகியன சமுகத்தில் நிலவுகின்றன. அடுத்த வீட்டுப் பொருட்களைப் பார்த்து அவற்றிலும் சிறப்பாகத் தான் பெற வேண்டும் எனப் பொறாமையோடு மனைவி போட்டி போடுகிறாள். கணவனுக்கு இவற்றைக் காட்டிப் பகைமையை மேலும் வளர்க்கிறாள்.

இத்தகைய நிலைகளினால் மனித வாழ்வின் நிறைவை, பூரண மகிழ்ச்சியை, மனித சாரத்தை உழைப்பவன் மட்டுமல்ல உழைக்காத முதலாளிகளும் காண முடியாதவர்களாக உள்ளனர்.

இயற்கையிலேயே மனிதன் சுயநலமானவன், தனிமையானவன், உலக வாழ்வே வேதனை மிக்கது, வாழ்க்கைப் பாதை கரடு, முரடானது என்று பரவலாகப் பொதுமைப் படுத்திக்கூறப்படுவதையும் நாம் கேட்கிறோம். முன் கூறியபடி இன்றைய சமுக அமைப்பிலுள்ள குறைகளாலும் மனிதன் அந்நிய நிலைக்கு ஆட்படுத்தப் பட்டதாலுமே மனித வாழ்வு கசப்பானது என்று கூறுகின்றனர்.

இச்சமுதாய அமைப்பு பாட்டாளி வர்க்கத்தால் நிட்சயமாக உடைக்கப்படும். தனிச் சொத்துடைமை அழிக்கப்படும். கூலி உழைப்பு என்ற அந்நிய நிலை அழிக்கப்படும். மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுகம் மீண்டும் கூட்டு உற்பத்தியில் ஈடுபடும். கூட்டு விநியோகமும் கூட்டு பரிமாற்றமும் ஏற்படுத்தப்பட்டு மனித வாழ்வு பற்றிய இழிநிலைக் கூற்றுகள் ஒழிக்கப்படும். இன்றைய இக்கேவல நிலையிலும் அருகிக் காணப்படும் உயர்ந்த மனித உணர்வுகளாகிய அன்பு, கருணை, இரக்கம், காதல், கூட்டுணர்வு ஆகியவை புதிய சமுதாயத்தில் முழுமை பெறுவதைக் காணலாம்.

விரைவாக எழுதிய இந்நாவலை வெளியிட உதவிய திரு. பரதன், விரைவில் அச்சிட்டு உதவிய திரு. அந்தோணி, அச்சகத்தொழிலாளர் அனைவர்க்கும் என் அன்பும் நன்றியும்.

செ. க.

---

## ஆசிரியரின் பிற நூல்கள்

**நாவல்கள்**

வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க் கோலம்
தரையும் தாரகையும்
செவ்வானம்
சடங்கு
நீண்ட பயணம்

**சிறுகதைகள்**

கொடுமைகள் தாமே அழிவதில்லை
ஒரே இனம்
சங்கமம்
நல்லவன்

**கட்டுரை**

கலையும் சமுதாயமும்

# அந்நிய மனிதர்கள்

## 1

ஆனந்தி சொன்ன அந்த வார்த்தைகள் மனோகரனை ஒரு கணம் அதிர்ச்சியடையச் செய்தது. மனோகரன் தன் திகைப்பை வெளியே காட்டாது நகைத்து, உதட்டிலே ஒரு புன்னகையை வரவழைத்தான். முதல் சந்திப்பு. எத்தனை துணிச்சலாக இவள் கேட்கிறாள்.

ஆனந்தியைப் பற்றி அவன் ஓரளவு அறிந்திருந்தான். நண்பர்கள் சிலர் பேசும் போது அவளது பெயர் பேச்சுவாக்கில் அடிபட்டது. ஆனால் அவளே இப்படிக் கேட்பாளென அவன் கனவிலும் கருதியிருக்கவில்லை.

''மனோ, நீ ஆனந்தியை ஒரு நாளைக்குப் பார்க்க வேண்டும். வட் எ நைஸ் கேள்.''

நண்பன் சொய்சா ஒருநாள் கூறியது மனோகரனின் நினைவில் நின்றது.

''நீ அவளை ஒரு தடவை காட்டியிருக்கலாமே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காட்டுவதென்ன அறிமுகப்படுத்தியே வைக்கலாமே. சென்ற வாரம் ஒபரேயில் நடந்த அன்டனின் கலியாணத்திற்கே வந்திருந்தாளே.''

''காலை பத்து மணிக்கு கலியாணம்! எனக்கு எங்கேயப்பா நேரமிருக்கும்?''

''கொழும்பில் நடக்கும் முக்கியமான பார்ட்டிகளில் எல்லாம் அவனைக் காணலாம். இல்லாவிட்டால் 'ரகர்மாச்'சிற்கு ஒரு நாள் போனால் சரி. அவளுக்கு ஏற்கனவே உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். உங்கள் குடும்பம் பற்றியே எல்லாம் அறிந்து வைத்திருக்கிறாள்.''

மனோகரனை அன்று தன் வீட்டில் நடைபெற்ற பார்ட்டிக்கு வற்புறுத்தி வரச் செய்தான், சொய்சா.

ஆனந்தியின் கணவனான டாக்டர் சுந்தரத்தை மனோகரன் நன்கு அறிந்திருந்தான். தாயாருக்கு கழுத்திலே ஒரு கழலை வளர்ந்து வந்தது. அதை ஆபரேசன் செய்து விடும்படி குடும்ப டாக்டர் அறிவுரை கூறினார். டாக்டர் சுந்தரத்திடம் காட்டி அவரைக் கொண்டே ஆபரேசன் செய்யும்படியே நண்பர்களும் சிபார்சு செய்தனர். தான் பணியாற்றும் அரசு ஆஸ்பத்திரியிலேயே ஆபரேசன் செய்யலாம் என்று சுந்தரம் கூறினான். ''உங்களுக்கு வசதியான நர்ஸிங் ஹோமில் செய்வதையே நாங்கள் விரும்புவோம்' என்று மனோகரன் நயமாகக் கூறினான். அதன்படியே ஆபரேசன் நடைபெற்றது.

தாம் அன்றாடம் செய்யும் ஆபரேசன், கண்டு பழகியவர் பற்றி மனைவியிடம் கூறும் டாக்டர்கள் குறைவு. டாக்டர் சுந்தரம் தன் மனைவியிடம் இந்த ஆபரேசன் பற்றியெல்லாம் கூறியிருந்தான்.

''உங்கள் கணவரை நன்கு அறிவேன். என் அம்மாவிற்கு அவர்தான் ஒரு ஆபரேசன் செய்தார்.''



''எனக்குத் தெரியுமே. மூன்று மாதமாவது இருக்க வேண்டும். இல்லையா? அவர் என்னிடம் சொல்லியிருந்தார்''

''நாள்தோறும் தான் பார்க்கும் நோயாளிகள் பற்றியெல்லாம் உங்களிடம் சொல்லுவாரா?''

''அவரின் நாளாந்த வேலையைப் பற்றியெல்லாம் நான் கேட்பதுமில்லை. அவராகச் சொல்லுவதுமில்லை. உங்க அப்பா 'கொலாபரேட்டட் கம்பெனி' — கூட்டுக் கம்பனிகளின் நன்மை பற்றி அரசாங்கத்தையும் புகழ்ந்திருந்தாரே. பேப்பரில் படத்தோடு முதல் பக்கத்தில் செய்தி வந்ததே. அதைப் பார்த்தபோதுதான் ஒரு நாட்காலை சாப்பிடும் போது உங்க அம்மாவின் ஆபரேசன் பற்றிச் சொன்னார். இப்ப நல்ல சுகந்தானே.''

பிறர் ஒருவரைப் புகழ்ந்து கூறும் போது மனதில் ஏற்படும் படிமம் பெரிதாக இருப்பது போன்ற உருவத்தையே மனோகரனும் வைத்திருந்தான். நேரில் காணும்போது அவ்வாறு இருப்பதில்லை. ஆனால் ஆனந்தியை சொய்சாவின் அந்த சிறு 'கார்டின் பார்ட்டி'யில் கண்டபோது அவனது உணர்ச்சிகளில் ஒருவித கிளுகிளுப்பு ஏற்பட்டது. ஆயினும் புறப்படும் வேளை அவள் இப்படிப் பச்சையாகவே கேட்பாள் என அவன் கனவிலும் நினைத்ததில்லை,

பொது நிறமா?...கறுப்பி என்றே கூறலாம். முழங்கால் வரை சாதாரண சட்டை மட்டும். கூந்தலை அள்ளி முடிந்திருந்தாள். நெற்றியில் நிறத்தோடு ஒட்டிய சிறிய கரிநிறப் பொட்டு. இடது கையில் தங்க வளையல்கள். கவர்ச்சியான உருண்ட விழிகள். புருவம் நெருங்கிய மயிரினால் கருமையாக வளைந்திருந்தது. தடித்து சிவந்த உதடுகள். உதடுகளின் ஓரத்தில் புன்னகை. கணீரென்ற உதாரமான பேச்சு.

இரண்டு பிள்ளைகளின் தாய் என்று எவரும் மதிக்க முடியாத இளமைத் தோற்றமும் பருமனற்ற உடற்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மீட் மிஸ்டர் மனோகரன், மை பிரெண்ட், யங் இன்டஸ்ரியலிஸ்ட்''

சொய்சா ஆனந்திக்கு அறிமுகப்படுத்தினன்.

மொத்தமாக பதினைந்து பதினறு பேரே அந்த சிறிய 'பார்ட்டி'க்கு வந்திருந்தனர். ஆறு பெண்கள். அரச சட்ட வல்லுனர் அலுவலகத்தில் கிடைத்த பதவி உயர்வை ஒட்டி, 'பார்ட்டி எப்ப' என்று கேட்டுக் கொண்டிருந்த நண்பர்களுக்காகவே ஏற்பாடு செய்திருந்தான். சிற்றுண்டி கள், சில பாட்டில்கள் அவ்வளவே. வீட்டின் முன்புற பூங்காவில் நாலு மேசைகள். சுற்றிவர நாற்காலிகள். ஆயினும் யாவரும் நின்றபடி, அங்கும் இங்குமாக உலாவிய படி, கையில் கிளாஸ்களுடன் உரையாடலில் ஈடுபட்டிருந் தனர். அரசியல், சினிமா, அண்மையில் உலகெங்கிலுமிருந்து வந்து கடைகளில் குவிந்திருக்கும் நவீன நுகர் பண்டங்கள், அவற்றின் விலைகள், விலைவாசி ஏற்றம், உபாலியின் வளர்ச்சி... இவ்வாருக எல்லா விஷயங்களும் பேச்சில் அடிபட்டது.

ஆனந்தியும் மனோகரனும் ஏதோ ஒரு கவர்ச்சியால் உந்தப்பட்டவர்களாக உலாவியபடி உரையாடிக்கொண் டிருந்தனர்.

''யு லுக் வெரி யங் அன் சுவீட்'

''தாங்யு''

''டாக்டரைப் பார்த்தால் வயசில்!...லவ் மரேஜா''

''இல்லை அவருக்கும் எனக்கும் 12 வயசு வித்தியாசம். படித்துக் கொண்டிருக்கும் போதே அப்பா ஏற்பாடு செய்து கட்டி வைத்து விட்டார். டாக்டர் என்று ஒரு ஸ்ரேட்டஸ் இருக்கல்லவா? 'படித்து என்ன செய்யப் போகிருய்?' என்று தோழிகள் கூட கலியாணத்தையே வற்புறுத்தினர்கள்...''



''அதிலென்ன. டாக்டருக்கு கொழும்பில் நல்ல பெயர். நல்ல பிராக்டிஸ் என்றே எல்லோரும் பேசிக் கொள்ளு கிருர்கள்.''

''இதில் குறைவேயில்லை. அவர் ஒரே பிஸி.''

''நல்ல வருமானம் கிடைக்கிறது என்றும் வேறு டாக்டர்கள் பொருமையோடு பேசியதைக் கேட்டேன்''

''உண்மையே. தாராளமாகச் செலவு செய்கிருேம். வீட்டைப் பற்றியே கவலைப்பட வேண்டியதில்லை. ஒரு சமையற்காரி. ஒரு டிரைவர். அவர் ஒரு 'பேயோ 404' வைத்திருக்கிருர். பார்த்திருப்பீர்களே. என்னிடம் ஒரு ரொயட்டா. அதோ நிற்கிறதே. வாங்கி ஒரு வருஷம் தான். பிள்ளைகள் கான்வெண்டில் படிக்கிருர்கள். பார்த்துக் கொள்ள ஒரு ஆயா இருக்கிருள். சமையல் கூட பெரும்பாலும் பிள்ளைகளுக்காகத் தான். காலையில் மட்டும் வீட்டில் எல்லோரும் ஒருமித்துச் சாப்பிடுவோம். அவர் ஏழரைக்கே காலையில் புறப்பட்டு விடுவார்.''

''மத்தியானம் வருவதில்லையா!''

''பெரும்பாலும் வருவதில்லை. வீட்டில் ரொம்பச் சாப்பிட்டால் மாலையில் ஆபரேசன் வேளையில் தூக்கம் வரப் பார்க்கிறதாம். கட்லெட் ஏதாவது வாங்கிக் கடித்துவிட்டு இரவில்தான் வருவார். 'வைட் ஹோஸ்' அவருக்கு நல்லாய் பிடிக்கும். சாப்பிட்டு விட்டுப் படுத்து விடுவார். ஏதாவது முக்கிய பார்ட்டி என்ருலும் தட்டிக் கழித்து விடுவார். மிக வற்புறுத்தித்தான் சில வேளை அழைத்துச் செல்ல வேண்டும். இரவிலும் டெலிபோன் அடித்துக் கொண்டேயிருக்கும். வீட்டில் நிம்மதியே இருக்காது. என் பிள்ளைகளை ஒருபோதும் டாக்டருக்கு படிக்க வைக்க மாட் டேன்''

''அப்ப என்னத்திற்குத்தான் படிக்க வைக்கப் போகிறீர்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மெடிசின் ஒன்றைத் தவிர அவர்களுக்குப் பிடித்த எந்தத் துறையிலும் படிக்கட்டும்.''

ஆனந்தியின் கலகலப்பான பேச்சும் ஒளிவு மறைவு இன்றி செய்திகளைக் கூறும் முறையும் மனோகரனை மிகவும் கவர்ந்தன, பேச்சுக் கொடுத்து அவளது நீண்ட பதில்களைக் கேட்டுக்கொண்டேயிருந்தான்.

''நீங்கள் என்ன குடிப்பீர்கள். விஸ்கி அராக்... விரும்பினதைக் கேட்கலாம். சொய்சா வீடென்றால் எங்க வீடுமாதிரித்தான். பார்ட்டிக்கு வேண்டியதெல்லாம் நானே வாங்கினேன்,''

''கோக் மட்டும் போதும் கூலாக...அவன் ஏன் இன்னும் கல்யாணமே கட்டாமலிருக்கிறான்?''

ஆனந்தி ஒரு கிளாஸில் ஐஸ் போட்டு கொக்கோ கோலாவைக் கொடுத்துக் கொண்டே சிரித்தபடி கூறினாள்,

''வழக்கமாக அரசாங்க வேலையில் இருப்பவருக்குள்ள பயந்தான். நல்ல மனைவிகிடைப்பாளா? சம்பளத்துக்குள்ளே சமாளிக்கத்தக்கவள் வருவாளா என்ற பயந்தான். அதோ 'ரெட் சாரி'யோடு நிற்கிறாளே மல்லிகா. அவள் தான் இப்பொழுது பின்னால் திரிகிறாள். சொய்சா இன்னும் முடிவே செய்யவில்லை.''

மனோகரன் அந்தப் பெண்ணை ஒரு தடவை திரும்பிப் பார்த்தான். நெட்டையான சிவப்பான பெண். கழுத்திலும் காதிலும் நகை தொங்க, பெரிய கொண்டை போட்டிருந்தாள்.

''அந்தப் பெண்ணை எனக்கு அவன் அறிமுகம் செய்யவேயில்லை. இதற்குள் ஏதோ இருக்கவேண்டும்.''

''அறிமுகப்படுத்தினால் அவள் உங்கள் பின்னால் வந்து விடலாம் என்று சொய்சா பயந்திருப்பான்''



ஆனந்தி கூறிக்கொண்டே சிரித்தாள்.

''ஏனப்படிச் சொல்லுகிறாய்?''

''ஏனென்றால் யு ஆர் வெரி ஹான்சம் அன் யங்''

ஏற இறங்கப் பார்த்துக் கொண்டே கூறினாள், அவனது சூட் வெளிநாட்டில் தைக்கப்பட்டது போல இருந்தது. மனோகரன் சிரித்தான். அவளின் துணிச்சலான பேச்சையும் அசைவுகளையும் அவன் முன்னர் எப்பெண்ணிடமும் கண்டதில்லை. நகங்களில் கியூடெக்ஸ் பூசியிருந்தாள். வளர்ந்த நகங்கள். உயரத்தைக் காட்ட சிறிது குதி உயர்ந்த சிலிப்பர் காலில் போட்டிருந்தாள். இவள் ஏதாவது உதவி பெறுவதற்குத்தான் இப்படியாகப் பேசுகிறாளோ என்றும் மனோகரன் எண்ணிக் கொண்டான். பரவாயில்லை. இவளுக்கு உதவி செய்தாலும் எப்பொழுதும் பயன்படும். கணவன் டாக்டர். எப்பொழுதும் தேவைப்படக் கூடியவன் என்று எண்ணிக் கொண்டே அவளைப் பார்த்து தான் புறப்படப் போகும் செய்தியைக் கூறினான்.

''ராத்திரிக்கு இன்னோர் நண்பன் டின்னருக்கு வருவதாக இருக்கிறான். சொய்சாவிடமும் சொல்லி விட்டுப் புறப்பட உள்ளேன். உங்களை மீண்டும் சந்தித்துப்பேச விருப்பமே. உங்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் எப்பொழுதும் டெலிபோன் செய்யலாம்.''

நயமாகக் கூறி விடைபெற அவளது கைகளைக் குலுக்கினான்.

அப்போது அவள் கூறியதே அவனை ஒருகணம் அதிரச் செய்தது,

''ஐ லைக் ரு சிலீப் வித் யு வன்டே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

சந்திரன் சிறிது நேரம் கடலையே பார்த்துக் கொண்டு நின்றான். தூரத்தே துறை முகத்தை நோக்கிக் கப்பல்கள் ஒன்றன்பின் ஒன்றாக நின்றன. அலைகள் கரையோர மணலோடு விளையாடிக் கொண்டிருந்தன. குழந்தைகள் ஈரமண்ணில் தம் பாதங்களைப் பதிய வைத்து, அவற்றை அலைகள் அழிப்பதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். இவை எதுவும் அவன் மனதில் குதூகலத்தை ஏற்படுத்த வில்லை.

கதிர்களை இழந்த சூரியனின் செவ்வடிவம் கடல் நீரில் மறைந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் நின்று பார்த்தான். சூரியன் மறைந்ததும் மீண்டும் கடலோரமாக நடந்தான்.

வீடு செல்லும் ஆர்வமேயில்லை. பார்வையை கடலிலிருந்து இடதுபுறமாக திருப்பினான்.

காலி முகத்திடலின் தெரு ஓரமாக கார்களெல்லாம் நிரையாக அடுக்கப்பட்டிருந்தன உலகத்தில் உற்பத்தி செய்யப்படும் கார்களெல்லாம் பரந்து கிடந்தன. எத்தனை மாடல்கள்? வர்ணங்கள்?

உலாவுவதும் விளையாடுவதுமாக ஆண்கள், பெண்கள், குழந்தைகள் கூட்டம்.

இத்தனை கார்களெல்லாம் அவசியமா? சில ஆயிரம் செல்வந்தர் சுகமாக வாழ்வதற்கு எத்தனை கோடி வெளி நாட்டுப் பணம் விரயமாக்கப்படுகிறது. இவற்றிற்கு எண்ணெய் வேண்டாமா? தன்னையே கேட்டுக் கொண்டான்.

வீடு செல்லும் ஆர்வமேயில்லை. கால்களில் வேகமில்லை,



அரசின் ஆதரவை வைத்து தொழிலதிபர்கள் தொழிற் சங்கங்களை எவ்வாறு நசுக்கி விட்டார்கள் என்று எண்ணிய போது அவனது இரத்தம் கொதித்தது. அரசு ஊழியர்கள் எத்தனை மோசமாகத் தண்டிக்கப்பட்டனர்.

எத்தனை ஆண்டுகளாக, அயராது உழைத்து, போராட்டங்கள் நடாத்தி, வென்றெடுத்த தொழிற்சங்கம் ஒரே தடவையில் முறியடிக்கப்பட்டு விட்டது. அவன் வேலை செய்த தொழிற்சாலையில் சங்கத்தைச் சார்ந்த முக்கிய பதவி வகித்த எட்டுப்பேர் வெளியே தள்ளப்பட்டனர்.

விலைவாசி ஏற்றத்தை எதிர்த்து யூலை 18 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் என தொழிற்சங்கங்கள் அறிவித்தன. அரசாங்க தொழிற்சங்கங்களும் சேர்ந்து கொண்டன.

அரசு அவசர கால நிலைமையை பிரகடனம் செய்தது. யூலை 18 அன்று வேலைக்குச் செல்லாதவர் யாவரும் வேலை நீக்கம் செய்யப் படுவர் என அறிவித்தது.

அரசின் அச்சுறுத்தல் எனக்கூறி பெரும்பாலோர் வேலை நிறுத்தத்தில ஈடுபட்டனர். ஆனால் மறுநாள் வேலைக்குச் சென்றவர்களை அரசு ஏற்கவில்லை. வேலை நீக்கம் செய்தனர்.

தனியார் நிலையங்களும் அவ்வாறே கூறினர். வேலை வேண்டியோர் புதிதாக விண்ணப்பிக்கும் படி கூறி தமக்கு வேண்டிய திறமை மிக்கவர் யாவரையும் எடுத்துக் கொண்டனர். தொழிற்சங்கத் தலைவர்களை, வேலை நிறுத்தத்தைத் தூண்டியவர்களை ஏற்க மறுத்து விட்டனர்.

சந்திரனுக்கும் வேலையில்லை என்பது அன்று உறுதியாகக் கூறப்பட்டு விட்டது.

அரசின் ஆதரவு தொழிலதிபர்களுக்கு இருந்தது.

தொழிற்சங்கத்தை இயக்க முடியவில்லை. 'மில்' லுக்குள் நுழையவும் முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அரச ஊழியரே 80 000 பேர் பழிவாங்கப் பட்டு விட்டனர். எங்களில் எட்டுப்பேர் தானே. பின்னர் போராடு வோம்''

மீண்டும் போராட 'மில்' தொழிலாளர் அவ்வேளை தயாராக இல்லை.

அரச ஊழியர் சங்கக் கட்டடம் வரை சென்று நிலமையைப் பார்க்கலாம் என்று சந்திரன் சென்ருன். அங்கே இராணுவமும் பொலிசாரும் தெருவிலேயே நின்றனர்.

வீடு செல்லும் ஆர்வமின்றி காலி முகத்திடலை நோக்கி நடந்தான். அவ்வேளை சோமதாச வந்து தோளில் கை போட்டான்.

''சந்திரன், என்ன சேதி''

''தோல்விதான்''

''முதலாளிகளை எதிர்க்க எவருமில்லையா?''

''குட்டி பூர்ஷ்வா எண்ணங்களே தொழிலாளரிடை மலிந்துள்ளன. சம்பள உயர்வை வைத்தே பெரும்பாலும் சங்கங்களைக் கட்டி விட்டோம். புரட்சி அரசியலை வளர்க்காது சங்கங்களைக் கட்டியெழுப்பின் இப்படித் தோல்விகள் தான் ஏற்படும்.''

சந்திரன் சோர்வோடு சொன்ஞன்.

இருவரும் தெருவோர சிறு ஓட்டலில் நுழைந்து தேநீர் அருந்தினர். சந்திரன் சில்லரை கொடுத்தான்.

''நான் வேலையில் சேரும் போது ஐந்து சதமாக இருந்த பிளெயின் டீ இன்று அறுபது சதம். பன்னிரண்டு மடங்கு உயர்ந்திருக்கிறது. தொழிலாளர் சம்பளம் ஒரு மடங்கு உயர்ந்திருக்குமா?''

வெளியேறும் போது சந்திரன் கேட்டான்.



''தொழிற்சங்க உரிமைகளெல்லாம் முதலாளித்துவம் காட்டும் பொய்மைத் தோற்றங்கள் என்பதை நாம் மறந்து விடுகிருேம். இப்போது தான் கண் விழித்துப் பார்க்கிருேம்.''

சோமதாச கூறினுன்.

சோமதாசாவைப் பின்னர் காண்பதாகவும் ஞாயிறு நடைபெறும் தொழிற்சங்க சம்மேளன கூட்டத்திற்கு வருவதாகவும் கூறி விட்டே காலிமுகத்திடலை நோக்கி நடந்தான்.

குளிர்ந்த கடற்காற்றும் அவன் கொதிப்பைத் தணிக்கவில்லை.

மாதத்தில் ஒழுங்காகச் சம்பளம் பெற்றே குடும்பத்தைச் சமாளிக்க முடியவில்லை. தற்போது வேலையே இல்லாத போது எப்படிச் சமாளிப்பது?

தொழிலாளர் யாவரும் சம்பளம் பெறும்போது பட்டியல் போட்டு சேரும் தொகையை வேலை இழந்தவர்களுக்குப் பகிர்வதாகத் தீர்மானித்தனர். அவர்களே தற்போது கிடைக்கும் சமபளத்தோடு வாழ்க்கைப் போராட்டம் நடத்தும் போது மேலும் எட்டுக்குடும்பங்களை முழுமையாகக் காப்பாற்ற முடியுமா?

காலிமுகத்திடலின் எதிரே இருந்த ஓட்டல் சமீபித்து விட்டது. கடற்கரை ஓரத்தெருவை விட்டு புற்றரையால் நடந்து ஓட்டலின் எதிரே உள்ள பஸ் நிலையத்திற்குச் செல்வதற்குத் திரும்பினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

சந்திரன் புல்வெளியைக் கடந்து தெருவை அண்மித்த போது ஒரு பெண் குரல் கேட்டது.

''சந்ரா''

கனவில் கேட்ட குரல் போல இருந்தது.

திரும்பிப் பார்த்தான்.

ஆனந்தியா? ஆனந்திதான்!

எத்தனை ஆண்டுகள்? அவளில் அதிக மாற்றமில்லை. அதே சிரிப்பு. அவள் ஆர்வத்தோடு நெருங்கி வந்தாள்

''எத்தனை வருஷமாகிறது. சந்திரன் நீ எவ்வளவு மாறி விட்டாய்''

''உடலமைப்பிலென்ன, கருத்துகளே காலத்தோடு மாறிக் கொண்டு தானே இருக்கும். பத்து வருஷமாச் செல்லோ. பள்ளியில் பார்த்த பிறகு இப்பொழுதுதானே பார்க்கிறேன். ஏதோ நீ மறக்காமலிருந்தாயே அதுவே போதுமே.''

''ஏன் சந்திரன் அப்படிச் சொல்லுகிறாய் உன்னால் தானே என் படிப்பையே நிறுத்தி அப்பா பதினேழு வயதிலேயே கலியாணத்தையே கட்டிவைத்தார்.''

''அதிலென்ன தவறு. நல்ல கலியாணம் தானே. டாக்டர் எல்லா வேலையும் கிடைக்குமா? நீ இப்ப நல்ல நிலையில்தானே இருக்கிறாய்''

''அதுவல்ல. நான் உன்னை ஏமாற்றியதாக ஒரு குற்ற உணர்வு என் நெஞ்சை நெடுக அரித்துக் கொண்டே இருக்கிறது. என் கலியாணத்திற்கு நீ வருவதையே நான் விரும்பவில்லை. அதனாலேயே 'கார்ட்' கூட அனுப்பவில்லை. உன் முகத்தில் சாகும் வரை விழிக்கப் படாது என்று நான் அப்போது எண்ணினேன். அப்பாவுடன் எவ்வளவு போராடினேன் தெரியுமா? இரவு பகலாக திட்டிக் கொண்டே இருந்தார். பின்னர் வேண்டா வெறுப்பாய் தலையசைத்ததும் அப்பா பதிவுத் திருமணத்தை முடித்து விட்டார். அதன் பின் நான் இரவு பகலாக சாப்பிடாது அழுதுகொண்டேயிருந்தேன்.என் கண்ணீரால் எதுவும் சாதிக்கமுடியவில்லை.''

ஆனந்தியின் கண்கள் கலங்கின. மேலும் பேச முடியவில்லை. கைக்குட்டையால் வாயைப் பொத்தினாள்.

''ஆனந்தி, இந்த கதையெல்லாம் இப்ப எதற்கு? நீ நல்லாய் வாழுகிறாய்.உன் கணவர் பெரிய டாக்டர்.உங்களைப் பற்றிய செய்தியெல்லாம் கல்லூரி நண்பர்களையும் உன் பழைய தோழியரையும் காணும் போது நான் விசாரிக்காத போதும் அவர்களே சொல்லி விடுகிறார்கள். அங்கே நிற்பவர்கள் தானா உன் பிள்ளைகள்?''

பட்டம் விட்டுக் கொண்டிருந்த பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டே கேட்டான். இரண்டு பெண்கள். வயசு எட்டும் ஆறும் இருக்கலாம். காதுவரை மயிர். வானத்தில் மிதக்கும் பட்டத்தின் அசைவைப் பார்த்து, மகிழ்ந்தபடி நின்றனர். முகங்களைப் பார்க்க முடியவில்லை.

''அவர்களை அழைத்து அறிமுகப் படுத்துகிறேனே''

''இப்போது வேண்டாம். அவர்கள் விளையாடட்டுமே''

''வேறு என்ன, என்னைப் பற்றிக் கேள்விப்பட்டாய்? ரொம்ப உன்னோடு கதைக்க வேண்டும். அவசரமாக வீட்டுக்குப் போவதென்றாலும் நானே காரில் அழைத்துப் போகிறேனே. இப்படி உட்காரேன்.''

அவனது கையைப் பிடித்து இழுத்து ஆனந்தி உட்காரச் செய்தாள். கல்லூரி நாட்களில் நடந்த காதல் பற்றியெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் நினைவூட்டினுள். சந்திரன் அவை பற்றி ஆர்வம் காட்டவில்லை.

''நீ அவற்றையெல்லாம் மறந்து விட்டாயா?''

ஆனந்தி கேட்டாள்.

''இடையிடையே தனிமையில் நினைவு வரவே செய்யும். ஆனுல், நல்ல வேளை, நீ என்னைக் கட்டவில்லை''

''ஏனப்படிச் சொல்லுகிருய்?''

''இத்தனை சொகுசான வாழ்க்கை உனக்குக் கிடைத்திருக்காது. என் மனைவிபோல நீயும் கஷ்டப்பட்டிருப்பாய்.''

''பணம் மட்டுந்தான் வாழ்க்கைக்கு வேண்டியது என்பதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். எங்களிடம் எல்லாம் இருக்கிறது. ஆனுலும் வாழ்க்கையில் அமைதி இல்லை. என் காதலை இழந்ததுகூட எனக்கு துன்பமாகவே இருக்கிறது. உன் மனைவியை நான் ஒருதடவை பார்க்க வேண்டும். அவள் என்னிலும் பார்க்க அழகாயிருப்பாளா?''

ஆனந்தியின் வார்த்தைகளில் ஒருவித பொருமையும் தொனித்தது.

''அழகான மனைவியின், அல்லது கணவனில் தான் அமைதியான வாழ்க்கை இருக்கிறது, காதல்தான் வாழ்க்கைக்கு அஸ்திவாரமாக இருக்கிறது என்று எண்ணுவதிலெல்லாம் எத்தனை பங்கு உண்மை இருக்கிறது, நிஜ வாழ்க்கையில்தான் இந்த உண்மையை அறிய முடியும். நீ கூட இப்பொழுது காதலைப் பற்றிப் பேசுகிருய். இது விசித்திரமாக இல்லையா?''

கடைசி வார்த்தைகளின் அழுத்தம், தன் ஒழுக்கத்தைப் பற்றி அவன் அறிந்திருப்பானு என்ற சந்தேகம் ஆனந்தி மனதில் எழுந்தது.



''என் தோழிகள் என்னைப் பற்றி என்ன சொன்னுர்கள்? நான் ஆடித் திரிகிறேன் என்று சொல்லியிருப்பார்கள் என நினைக்கிறேன்.''

''உயர்மட்டத்தில் வாழ்பவரது வீடுகள், உடை, நாகரிகம், ஒழுக்கம் பற்றி குசுகுசுத்து மற்றவர்கள் பேசுவது வழமை தானே. ஏழைகளைப் பற்றியா பேசுவார்கள்.''

''சந்திரன், உனக்கு நான் எதையும் ஒளிக்க விரும்பவில்லை. பணத்திற்காக நான் வேசையாடவில்லை. எனக்குப் பிடித்தவர்களுடன் ஆடித்திரிகிறேன்தான். அதற்குரிய காரணத்தை ஒருவரும் அறியமாட்டார்கள். உனக்கு மட்டும் இன்று உண்மையைக் கூறவிரும்புகிறேன். நான் சுதந்திரமாகத் திரிவதைப் பற்றி என் கணவரேகவலைப் படுவதில்லை. அப்பாதான் மனமுடைந்து திட்டிக்கொண்டு திரிகிருர். என் காதலைக் கொன்ற அவரைப் பழிவாங்க வேண்டும் என்று என் நெஞ்சின் அடியில் எங்கோ எரிந்து கொண்டிருக்கிறது. அதற்காகவே அவருக்குத் தெரியத்தக்கதாகவே நான் விரும்பியவர்களுடன் சுற்றித் திரிகிறேன்''

உணர்ச்சிவசப்பட்டுப் பேசிய ஆனந்தியின் கண்களில் நீர் அரும்பியிருந்தது. அதனுல் சந்திரன் அசைந்து விடவில்லை.

''உன் காரணத்தை நான் முற்றுக ஏற்கத்தயாரில்லை. உன்னுடைய செயல்களுக்குரிய காரணத்தை நான் அறிவேன்.''

''உனக்கு என் பேச்சு கேலியாக இருக்கிறது. எங்கே உனக்கே தெரிந்த காரணத்தைச் சொல்லு.''

''மற்றெரு முறை சொல்லுகிறேன். நாங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருப்பதைப் பற்றி உன் பிள்ளைகள் வீட்டில் ஒன்றும் சொல்ல மாட்டார்களா''

''எதுவுமே சொல்ல மாட்டார்கள். அவர் இப்போது கண்டாலோ, அறிந்தால் கூட எதுவுமே கேட்கமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கல்லூரிக் காதல் பற்றியெல்லாம் அவர் எங்கள் கலியாணத்தின் பின்னர் அறிந்துவிட்டார்.'' —புன்னகை யோடு ஆனந்தி கூறினாள்.

''பிறகு சண்டைபோடவில்லையா?''-சந்திரனின் குரலில் வியப்பும் பயமும் தொனித்தது.

''வீட்டில் ஏதாவது வேறு சண்டைகள் ஏற்படும்போது இதையும் சொல்லிக் காட்டுவார். எல்லாம் நாலு ஐந்து வருடந்தான். இப்பவெல்லால் இவற்றைப் பற்றிப் பேச்சே யில்லை''

''ஆச்சரியந்தான். நாலு ஐந்து வருடத்திலேயே 'கல்ச் சேட்மன்' ஆகிவிட்டார்.'' —சந்திரன் புன்னகையோடு சொன்னான்.

''அப்படியொன்றுமில்லை. அவர் என் கல்லூரிக் காதல் பற்றியோ, என் ஒழுக்கம் பற்றியோ வாய் திறந்தால் உடனே நான் நர்சுகள், லேடி டாக்டர்களையெல்லாம் இழுத்துப் பேசிவிடுவேன். அதனால் அவர் எனக்குப் பயம் கூட.''

''நல்லவேளை நான் உன்னிடமிருந்து தப்பினேன்''

சிரித்தபடியே சந்திரன் நளினமாகக் கூறினான்.

''உன்னைக் கட்டியிருந்தால் இப்பிடி ஒன்றும் நடந் திராது''

''உனக்கு கார், பணம் ஒன்றும் கிடைத்திராது. வீட்டிலேயே சமைத்துப் போட்டுக் கொண்டிருந்திருப்பாய்''

''ஏனப்பிடிச் சொல்லுகிறாய், நான் கலியாணம் கட்டும் போது அவர் கூட சாதாரண டாக்டராகத்தான் இருந்தார். என் அதிர்ஷ்டத்தால் தான் எவ்.ஆர்.சி.எஸ் எல்லாம் பாஸ் செய்து இன்று பிரபல டாக்டராகி பணம் உழைக்கிறார். உங்களைக் கட்டியிருந்தால் என் அதிர்ஷ்டம் முழுவதும் உங்களுக்குக் கிடைத்திருக்கும்''



ஆனந்தியின் சிறுபிள்ளைத் தனமான பேச்சைக் கேட்ட போது சந்திரனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவளுடைய குடும்பத்தைப் பற்றி எண்ணிப் பார்த்தான். பணக்கார வர்க்கத்தவரின் வாழ்க்கை அமைப்பு தமது வளர்ச்சிக்கு அவர்கள் கூறும் காரணங்கள் விசித்திரமாகவே தோன்றின. அவள் மட்டும் தமது வளர்ச்சிக்கு மற்றவர் போல் தெய்வத் தின்மேல் காரணம் சுமத்தாதது ஆச்சரியமாகவே இருந்தது. குடும்பத்தில் எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் அவை உடையாது சமுதாய சக்திகள் இணைத்து வைத்திருப்பதை யும் எண்ணிப் பார்த்தான்.

''என் மனைவி அதிர்ஷ்டமில்லாதவள் என்று சொல்லு கிறாய். அப்படித்தானே''

''எனக்குக் கிடைக்கவேண்டிய உங்களைப் பெற்றதில் அவள் அதிர்ஷ்டக்காரிதான். அவளை ஒரு தடவை பார்க்க வேண்டும்''

''எங்கள் வீடெல்லாம் நீ நுழையத்தக்க வீடாக இருக் காது.''

''நீங்கள் இருக்கும் இடமெல்லாம் சிறிதானாலும் எனக்குப் பெரிதாகவே இருக்கும்.''

''தமிழ் சினிமா, கதைகளில் பேசுவது போல நீ பேசு கிறாய்.''

''உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்று கேள்விப் பட்டேன்''

''வேறென்ன கேள்விப்பட்டாய்''

''நீங்கள் ஒரு கம்பனியின் மில்லில் சுப்பவைசராக வேலை பார்க்கிறீர்கள்.''

''வேறென்ன''

''நீங்கள் ஒரு கம்யூனிஸ்டு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

பொழுது கருகிவிட்டது. ஆனந்தியின் பெண்கள் இருவரும் பட்டத்தை இறக்கிவிட்டு நூலைச்சுற்றினர்.

தாயாரைத் தேடி வந்தனர்.

''மம்மீ...வீட்டுக்குப் போகலாம்''

கா ரில் போய் இருங்கள். நான் வருகிறேன்''

கட்டளையிடும் உறுதியான குரல். அவர்கள் எதுவும் பேசாது திரும்பிச் சென்றனர்.

''கண்களும் நிறமும் உன்னுடையவை.முகம்அப்பாவைப் போலவோ?''

''சிலபேர் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.''

''நான் உன் டாக்டரை ஒரு நாளும் காணவில்லை.''

''ஒரு நாளைக்கு வீட்டுக்கு வாறது தானே''

''அதெல்லாம் எதற்கு.''

''நீ வராவிட்டாலும் நான் உன் வீட்டுக்குக் கட்டாயம் வருவேன். விலாசம் என்ன;''

இரத்மலானையில் உள்ள அவன் விலாசத்தைக் கேட்டறிந்த பின்னர் அவனது தொழிற்சாலை விபரத்தைக் கேட்டாள்.

''அங்கே நான் இப்போது இல்லை''.

''அப்ப எங்கே?''

''நடுத் தெருவில். வேலையில்லை''

''ஓ. நோ''

ஆனந்தி தன் ஏமாற்றத்தைக் குரலிலேயே வெளிப்படுத்தினாள்.

''எந்தக் கம்பனியில் இதுவரை நாளும் வேலை செய்தீர்கள்''

''தீபா டெக்ஸ்டைல் மில்ஸ்''

''அங்கே வேலையிலிருந்து ஏன் நீக்கினார்கள்?''

''யூலை, வேலை நிறுத்தம்.''

''அவர்கள் எனக்குத் தெரிந்தவர்களே. நான் சொல்லி வேலை வாங்கித் தருகிறேனே''

''ஒன்றும் நீ செய்ய வேண்டாம். இதெல்லாம் தொழிற்சங்க விஷயம்''

''எனக்கு வேலையைத்தந்து விட்டுத்தொழிற்சங்க வேலையில் ஈடுபட வேண்டாம் என்றும் சொல்லுவார்கள். எங்கள் தொழிற்சாலையில் எட்டுப் பேருக்கு வேலையில்லை. யூனியன் தலைவர் நானே. என்னைக் கருங்காலியாக மாற்றப் போகிறாயா''

''வேலையில்லாமல் மனைவி குழந்தையோடு எப்படித் தான் சமாளிக்கப்போகிறாயோ''

''நான் மட்டுமா. அரசாங்க வேலையிலிருந்து எண்பதினாயிரம் பேர் நீக்கப் பட்டிருக்கிறார்கள். அவ்வளவு பேருக்கும் வேலை வாங்கித்தர உன்னால் முடியுமா? இவர்கள் குடும்பங்களெல்லாம் உயிர் வாழவில்லையா!''

ஆனந்தி சிறிதுநேரம் மௌனமாக இருந்தாள். பின்னர் கேட்டாள்:

''நான் எல்லா வசதிகளோடும் வாழுகிறேன். சந்திரா, உனக்கு நான் என்ன விதமாக இவ்வேளை உதவி செய்யலாம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு ஒரு உதவியுமே வேண்டியதில்லை. என்னை விட்டால் போதும்''

''வா அந்த ஓட்டலில் டீ சாப்பிடுவோம்''

''அங்கே ஒரு டீக்கு ஐந்து ரூபா வாங்குவார்கள். இந்த ஆடம்பரமெல்லாம் எனக்குச் சரிவராது. உங்கள் ஓட்டல் அது. எங்களுக்குத் தெரு ஓர டீக்கடை இருக்கிறது''

''நானும் நீயும் ஐஸ்கிரீம் சாப்பிட்ட கடைகள், சினிமா பார்த்த தியேட்டர், சுற்றித்திரிந்த கடற்கரை எல்லாம் என் நினைவில் இன்றும் பசுமையாகவே உள்ளன. பத்து வருஷத்தில் எங்கள் வாழ்க்கையில் இத்தனை மாற்றங்கள் ஏற்படும் என நான் கனவிலும் எண்ணியிருக்க வில்லை.''

''தூரத்துச் பச்சை எப்பொழுதும் அழகாகத்தான் இருக்கும். அதைப் பார்த்து ஓடி ஏமாறுவதிலேயே பலரது வாழ்க்கை முடிந்து விடுகிறது. அவரவர் அண்மையிலே வாழும் மக்களுடைய வாழ்க்கையைப் பார்ப்பதில்லை''

''நான் என் வாழ்க்கையைப் பற்றிக் கூட இப்பொழுது கவலைப்படவில்லை. உன் வாழ்க்கையைப் பற்றியே கவலைப் படுகிறேன்''

''என்னைப் போன்று துன்பப்படும் தொழிலாளர் வாழ்க்கையைப் பற்றி யெல்லாம் நான் கவலைப் படுகிறேன். இன்று எமக்குச் சிறிது பின்வாங்கல் ஏற்படலாம். எதிர் காலத்தில் நாம் எல்லோர் துன்பங்களையும் துடைக்க வழி தேடாமலா போகப் போகிறோம்''

சந்திரனின் குரலில் துன்பத்தை மறந்த நம்பிக்கை எதிரொலித்தது.

''சந்திரா, உன்னைக் காரிலேயே கொண்டுபோய் வீட்டில் விடுகிறேனே''

''வேண்டாம். நான் பஸ்ஸிலேயே போய்விடுவேன்''



உறுதியான குரல். அவன் எடுக்கும் முடிவை எளிதில் மாற்றிவிட முடியாது என்பதை அவள் அறிவாள். அவன் எழுந்து புறப்பட்டான். சிறிது நேரம் அவனது கவலைகள் சிறிது ஆறி இருந்தன.

''ஆனந்தி உன்னை எதிர்பாராது கண்டதிலும் மகிழ்ச்சி. ஆனால் நாங்கள் இருவரும் இரு துருவங்களை நோக்கிப்போகி றோம் என்பதை நீ மறந்து விடப்படாது''

''சந்திரா, நீ என்ன கூறினாலும் என் பிடியிலிருந்து தப்பி விடுவாய் என்று மட்டும் நினைக்காதே. 14, ஸ்டேசன் ரோட்டை மறக்க மட்டேன்.''

''உன் ஞாபக சக்தி எனக்குத் தெரியாதா''

''அதுவல்ல சந்திரன். என் நெஞ்சின் அடியில் பத்து வருடங்களாக எரிந்து கொண்டிருக்கும் தீயை ஒரு நாளாவது உன்னைக் கொண்டு அணைக்காமல் விடமாட்டேன்''

ஆனந்தியின் உறுதியான குரல். எதுவும் புரியாதவனாக சந்திரன் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தான்.

# 5

''அன்று நான் கேட்டதும் பயந்து விட்டீர்கள்போல் தெரிந்தது. ஒன்றுமே பேசாது போய்விட்டீர்கள். இன்று காலையில் டெலிபோனில் சொன்னபோதுதான் நான் ஏமாற வில்லை என்று தெரிந்தது.''

''ஒரு பெண் வாய்விட்டுக் கேட்டால் எந்த ஆணும் இந்த விஷயத்தில் மறக்க மாட்டான்; மறுக்க மாட்டான்.''

''அது எனக்கும் தெரியும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் ஓட்டியபடி ஆனந்தி மனோகரனிடம் சொன்னாள். தனக்கு வெற்றி நிச்சயம் கிட்டும் என்பதை முன்பே அறிந்திருந்தவளாகவும் அவள் பேச்சு இருந்தது.

''எங்கே, எந்த வேலை அழைப்பது என்பதுதான் எனக்குப் பெரிய பிரச்சனையாயிருந்தது, இப்பொழுதுகூட''

''இரவு பதினொன்று, பன்னிரண்டுக்கு முன் வீட்டுக்குப் போக வேண்டும். அவ்வளவுதான். எந்த இடமானாலும் எனக்குப் பரவாயில்லை.''

''இப்பொழுது மவுன்லெவினியா ஓட்டலா அல்லது கிக்கடுவைப் பக்கம் போகலாமா''

மனோகரன் தயக்கத்தோடு கேட்டான்.

''இந்த சின்ன அலுவலுக்கு கிக்கடுவ வரை போக வேணுமா? மவுன் லெவினியா ஓட்டலே போதுமே. அங்கேயே போவோம்.''

காரை காலிவீதி வழியாக ஓட்டினாள். மனோகரன் முன் சீட்டில் அவளருகே சிறிது பதட்டத்தோடு இருந்தான். பிரபல டாக்டரின் மனைவி என்பதே அவன் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. அவள் சிறிய விஷயமாக எண்ணுவது அவனுக்கு மிகவும் பெரிய விஷயமாகத் தெரிந்தது.

''ஓட்டலில் ரூம் ஏதாவது புக் பண்ணியிருக்கிறீர்களா?'' ஆனந்தி கேட்டாள்.

''இல்லை. அங்கே என் நண்பன் ஒருவன் தங்கியிருக்கிறான். பத்தரைக்கு ஒரு கொன்பரன்சுக்குப் போய் விட்டு மாலை ஆறுக்குத்தான் திரும்புவான். சாவியை என்னிடம் தந்துவிட்டுப் போவதாகக் கூறியிருந்தான்''.

''ஓ நல்ல ஏற்பாடெல்லாம் செய்திருக்கிறீர்கள். இந்த அலுவலில் ஆண்களுக்கு மூளை நுட்பமாக வேலை செய்யும்''.

ஆனந்தி கேலியாகக் கூறியபடியே கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள். மணி 10.



''அதிகமாகி எல்லா ஓட்டலிலும் எங்களை ஓரளவு தெரியும். உங்களையும் தெரியுமென்று நினைக்கிறேன். எதற்கு நேரடியாக ரூம் கேட்டு, பொய்ப் பெயர்களைக் கொடுத்துப் போகவேண்டும்.''

''அது சரிதான்''

அவ்வார்த்தையும் அவளின் உதட்டோரச் சிரிப்பும் அவனைக் கேலியே செய்தன.

ஓட்டலிலே கார் 'பார்க்' பண்ணப்பட்டு விட்டது. இருவரும் வரவேற்பு மண்டபத்தில் நுழைந்தனர்.

''நீங்கள் கான்டீனில் டீ ஏதாவது சாப்பிடுங்கள். நான் அவனிடம் சாவியை வாங்கி வருகிறேன். உங்களை அவன் பார்க்கவேண்டிய அவசியமிருக்காது''

'அத்தனை பயமா? என்ற வார்த்தைகள் உதட்டளவில் வந்தன. அடக்கிக்கொண்டு 'சரி' என்று கான்டீனை நோக்கி நடந்தாள்.

'நட் ஸ்பெஷல்' என்ற ஐஸ் கிரீமுக்கு ஆர்டர் கொடுத்தாள். அது வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே மனோகரன் சாவியுடன் வந்துவிட்டான்.

''நீங்க என்ன சாப்பிடுவீங்க. விஸ்கி, பிராண்டி...''

''இங்கேயே பிறகு உணவு சாப்பிடுவோம். அப்போது பார்ப்போம்''.

மனோகரனின் அவசர உணர்வுகளைப் புரிந்துகொண்டாள். ஐஸ்கிரீமை விரைவாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்தாள். மூலையில் சஞ்சிகைகள் விற்கும் கடையில் இரண்டு சாக்லெட் வாங்கிக் கொண்டாள்.

அந்த அறை கடலைப் பார்த்த படி இரண்டாவது மாடியில் இருந்தது. அங்கிருந்து பார்த்தபோது கடற்கரையும், கரையோர ரெயில் பாதையும், சரிந்த தென்னைகளும் வளைவுகளும் அழகாக இருந்தன. சன்னலோரமாக நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வழகை ஒரு கணம் ரசித்தாள். வெயிலும் கருமேக நிழலும் விளையாடின. கடலின் குளிர்ந்த காற்று உடலுக்கு இதமூட்டிக் கொண்டிருந்தது.

மனோகரன் கட்டிலிலிருந்து அவளது அழகையும் அசைவு களையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''புரெட்டெக்ஷன் எதுவும் தேவையில்லையா?''

தயக்கத்தோடு மனோகரன் கேட்டான்.

''அதைப் பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்படவே வேண் டாம். எனக்கு அவை யெல்லாம் பிடிக்காது. நான் பில்ஸ் சாப்பிடுகிறேன். இரண்டு பிள்ளைகளுக்கு மேல் வேண்டாம் என்று நான் தீர்மானித்து விட்டேன். என் கணவர் ஒரு டாக்டர் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை''

'இப்படியெல்லாம் இங்கு நீங்கள் வருவதை டாக்டர் அறிந்தால் ஒன்றும் சொல்லமாட்டாரா?''

''ஆரம்ப காலத்தில் இவற்றால் சிறு சிறு சல சலப்புகள், சண்டைகள் வீட்டில் நடந்தன. இப்போது எதுவும் கிடை யாது. என்னுடைய சுதந்திரத்தில் அவர் தலையிட மாட்டார்.''

''அவர் இப்படி நடந்தால்...''

''அவர் பற்றியே நான் கவலைப்படுவதில்லை. எந்த நர்சோடோ, எந்த லேடி டாக்டரோடோ அவர் போகலாம். அது பற்றி நான் கவலைப்படுவதுமில்லை. ஆராய்ச்சி நடத்து வதுமில்லை.''

''இவைபற்றிச் சண்டை போடாத குடும்பமென்றால் ஆச்சரியமே''

''சண்டை அடிக்கடி நடைபெறும். அது பிள்ளைகளைப் பற்றி, பணச் செலவு, வீடு நடத்துவதைப் பற்றியே பெரும் பாலும் இருக்கும். என்ன சண்டை இருந்தாலும் நான் அவரோடும் படுப்பதில்லை என்று நினைத்து விடவேண்டாம்.''



மனோகரனுக்கு அவள் கூறுவதெல்லாம்விசித்திரமாகவே தோன்றியது. தங்கள் வீட்டில் தாயார் ஒழுக்கத்தில் கட்டுப் பாடாக இருக்க, தந்தையார் நினைத்தபடி சுற்றித் திரிவதை எண்ணிப் பார்த்தான்.

''உங்கள் அப்பா, அம்மா எங்கே?''

''வேறு வீட்டில் வசதியாக இருக்கிறார்கள். அப்பா விற்குத்தான் என்னில் ஒரே கோபம். தன், மானமெல்லாம் போகிறது, மருமகன் ஒரு மடையன், என்னைக் கட்டி வைத்திருக்கத் தெரியவில்லை என்று கத்திக் கொண்டு திரி கிறார். என்னிடம் வருவதேயில்லை. இன்று உங்களுக்கு வேறு வேலை யொன்றுமில்லையா?''

திடீரென பேச்சை மாற்றிச் சிரித்த படியே அவனை நோக்கி வந்தாள்.

''இதிலும் பார்க்க முக்கியமானது என்ன இருக்கிறது?''

''ஓ, அப்படியா? அலுவலகத்தில் என்ன பொய் சொல்லி விட்டு வந்தீர்கள்.''

''ஜெர்மனியிலிருந்து கூட்டுக் கம்பனி ஆரம்பிக்கும் விஷயமாக சிலர் வந்திருக்கிறார்கள். வெளியே வேலையிருக் கிறது. முடிந்தால் நாலு மணி வரையில் வருகிறேன் என்று செக்கிரிட்டரியிடம் டெலிபோனில் சொல்லிவிட்டு வந் தேன்.''

''சுதந்திர வர்த்தக வலயத்தில் நீங்கள் எதுவும் ஆரம் பிக்கவில்லையா?''

ஆனந்தி கேட்டாள்.

''ரெடிமேட் காமென்ட் பக்டரி வைத்திருக்கிறோம். அமெரிக்காவிற்கு சேட், பான்ட், லேடீஸ் காமென்ட் ஏற்றுமதி செய்கிறோம். ஒரு நாளைக்கு வாருங்கள். எல்லா வற்றையும் காண்பிக்கிறேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கட்டாயம் வந்து பார்க்க வேண்டும்''

ஆனந்தி கூறியபடி அவனருகே சென்று அவனது மயிரை வருடி, முகத்தை இருகைகளாலும் பிடித்துக் கொண்டு சொன்னாள்;

''நீ இன்னும் அப்பாவிப் பொடியனாக இருக்கிறாயே''

தன் ஆண்மையை அவள் கேலி செய்வதுபோல எண்ணி, உள் உணர்வு உந்த அவளைத் தூக்கி கட்டில் மெத்தைமேல் போட்டான். 'ரிங்ரிங்' என கட்டிலின் ஸ்பிரிங் ஒலி தொடர்ந்து கேட்டது.

''என்ன சாப்பிடுவீங்க. இங்கே வரவழைப்போமா? கீழேபோவோமா.''

மனோகரன் கேட்டான்.

''கீழேயே போய் விடுவோம். ஒரு ஷவர் எடுத்துவிட்டு வருகிறேன்''

பதினைந்து நிமிஷத்தில் கீழே செல்ல அவள் தயாராகி விட்டாள்.

ஓரமாக ஒரு மேசையில் உட்கார்ந்தனர். அங்கிருந்த 'மேனுகார்ட்'டை இருவரும் நோட்டம் போட்டனர்.

''என்ன சாப்பிடுவீர்கள்?''

''இருபத்து மூன்று பிரைட் ரைஸ், முப்பத்தெட்டு லொப்ஸ்ரேர்ஸ்''

''லொப்ஸ்ரேர்ஸ் உங்களுக்கு அவ்வளவு பிடிக்குமா? வெள்ளைக்காரர்தான் இங்கே வந்ததும் அதையே கேட்கிறார்கள்''

''அதன் சுவையே ஒரு தனி சென்சேஷன். என் பணத்தைக் கொடுத்து வாங்கிச் சாப்பிட மனம் வராது. நீ தானே பில்லுக்கு பணம் கொடுக்கப் போகிறாய், ரூம் வாடகையிலும் ஐநூறு ரூபா லாபந்தானே''



செக்ஸ்தொடர்பு ஏற்படுத்திய பிணைப்பு ஆனந்தியின் பேச்சில் ஒலித்தது.

''செலவைப் பற்றிப் பரவாயில்லை. உங்க ரேஸ்டுகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். குடிப்பதற்கு...''

''ஏதாவது புருட் ஜூஸ் இருந்தால் போதும். நீங்க பிளாக் அன் வைட்டா, வைட் ஹோஷா? உடன் ஆர்டர் செய்யலாமே, நீ தான் ரொம்ப களைத்து விட்டாய்''

''ரகர்மாச் ஒழுங்காய் பார்ப்பீர்களா?''

''ஏனோ அந்த விளையாட்டிலுள்ள முரட்டுத்தனம் எனக்குப் பிடிக்கிறது''

சாப்பாடு வரும் வரை இருவரும் பலவிஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

''சாப்பிட்டதும் புறப்படலாம், உங்க அலுவலக வேலைகளையும் கவனிக்கலாமல்லவா''

மனோகரன் எதுவும் பேசவில்லை. உணர்ச்சி வசப்பட்டு ஆனந்தியைப் பார்த்த படியே இருந்தான்.

''அடுத்த சந்திப்பு...''

''எப்பொழுதும் டெலிபோன் செய்யலாம். வசதியைப் பொறுத்து சந்திக்கலாம்.''

''ஒவ்வொரு நாளும் நான் சந்திக்க வேணும் என என் மனம் சொல்லுகிறது''

''டோன்ட் பி சில்லி. ரேக் இட் ஈசி. கொஞ்சநாளைக்கு அப்பிடி இருக்கலாம், பிறகு எல்லாம்சரியாய்ப் போய்விடும்''

மனோகரனின் முதுகில் தடவி விட்டு, பின்நகத்தால் முதுகெலும்போடு மேலிருந்து கீழே கீறினாள்.

கூச்சம் தாங்காது சிரித்தபடி மனோகரன் முன்னே குனிந்தான்.

''தீபா ரெக்ஸ்ரையில் மில்லில் உங்களுக்குப் பங்கு இருக்கிறதா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம். உங்களுக்கு ஏதாவது பங்குகள் வேணுமா? அதில் நான் ஒரு டைரக்டராயிருக்கிறேன்"

"அங்கே ஏதாவது வேலை நிறுத்தம் நடைபெற்றதா?"

"யூலை 18-ல் அங்கேயும் வேலைநிறுத்தம் நடந்தது. மிகவும் பயங்கர தொழிற்சங்கம் இருந்தது. எல்லாம் உடைத்துவிட்டோம். இந்த அரசாங்கம் தான் எங்களுக்கு வாய்ப்பான அரசாங்கம். தொழிற்சங்கத்தை யெல்லாம் உடைத்தெறிய வசதி செய்து தந்தார்கள்."

"எப்படித் தொழிற் சங்கத்தையெல்லாம் உடைத்தீர்கள்."

"அரசாங்கம் செய்தபடி யூலை 18ல் வேலைக்கு வராதவர்களெல்லோரையும் வேலையிலிருந்து நீக்கி விட்டோம். பின்னர் எமக்குத்தேவையானவர்களை மட்டும் எடுத்துக் கொண்டோம். இப்பொழுது யூனியன் தொல்லை எதுவுமின்றி வேலை நடைபெறுகிறது. அடுத்த ஜனவரியில் 25 வீத டிவிடென்ட் கொடுக்கப் போகிறோம்."

"அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் யார். என்ன அரசியல் கட்சிக்காரர்?"

"புரட்சிக் கம்யூனிஸ்டு என்று ஒரு கட்சி. அதன் தலைவனோடு என்ன பேசியும் சமரசம் செய்ய முடியாது. எங்களையே மதிக்க மாட்டான். அவனையும் ஒழித்து விட்டோம். தற்போது ஒரே நிம்மதி"

மனோகரனின் வேலைகள் விஷயமாகக் கேள்வி கேட்டதில் ஒரு திருப்தி. தன் வீரப்பிரதாபங்களைப் பற்றி மனோகரன் அளந்து கொட்டினான்.

சாப்பாட்டிலும் விஸ்கியிலும் பார்க்க தன் கம்பனிகளின் நிர்வாகம் பற்றிச் சொல்வதிலேயே அதிக ஆர்வம் காட்டினான்.



சாப்பாடு முடிந்து பில் வந்தது. நாலு நூறுரூபா நோட்டுகளை பில்மேல் வைத்து விட்டு எழுந்தான். ஆனந்தியும் எழுந்து நடந்து கொண்டே கேட்டாள்:

"அந்தப் பயங்கர தொழிற்சங்கத் தலைவனின் பெயரென்ன?"

"சந்திரன்"

# 6

ஆனந்தி காரைத் தெருவோரத்தில் நிறுத்தினாள். தயக்கம் சிறிதுமின்றி, உரிமையுள்ள வீட்டில் நுழையும் உணர்வோடு சந்திரனின் அச்சிறு வீட்டுள் நுழைந்தாள்.

அடக்கமான குடும்பப்பெண்போலத் தன்னைக் காட்டிக் கொள்ளும் விதத்தில் உடையணிந்திருந்தாள். வோயில்சேலை, முழங்கை வரை வரும் ஜாக்கெட். நெற்றியில் குங்குமம். முடிந்த கொண்டை. காலில் சாதாரண சிலிப்பர்.

வாயிற்கதவு சிறிது திறந்திருந்தது. கதவைத்தட்டி எவரையும் அழைக்காமலே திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள், சந்திரனைத்திகைப்படையச் செய்யவேண்டும்! ஞாயிற்றுக்கிழமை காலை. இவன் எங்கே போகமுடியும்.

"சிறிய ஹால். ஒரு மேசை. நாலு நாற்காலிகள், புத்தகங்களும் பத்திரிகைகளும் சிதறிக் கிடந்தன. சுற்று முற்றும் பார்த்தாள். எவரையும் காணவில்லை. சிறுபையன் மட்டும் ஒரு புத்தகத்தைப் பிரித்து, கிழித்து விளையாடிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தி அவனருகே சென்று தலையையும் முதுகையும் வருடிவிட்டாள். புத்தகத்தை வாங்கி வைத்து விட்டு அவனது கையைப் பிடித்து நடத்தி வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

தான் கொண்டுவந்த சாக்லெட்டில் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். அவன் உடைத்துப் பிரிக்காது அப்படியே கடிக்க ஆரம்பித்தான். ஆனந்தி அதைப்பெற்று பிரித்துக் கொடுத்தாள். பற்களைக் காட்டிச் சிரித்தபடி சாக்லெட்டைக் கடித்தான்.

''அப்பா எங்கே, அப்பா.''

''ஊ ஊ'' என்று கூறியபடி கதவைக் காட்டினான். ஆனந்திக்கு ஏமாற்ற மாயிருந்தது.

''அம்மா எங்கே, அம்மா''

''ஊ, ஊ'' என்றபடி மறுபக்கமாகப் பார்த்தான்.

அது குசினியாக இருக்கவேண்டும். கார்விடும் ஷெட்டை குசினியாக்கியதுபோலத் தெரிந்தது. ஹாலின் மேற்கு ஓரமாக இருந்த அப்பகுதியை திரைச்சீலை ஒன்று மறைத்துக் கொண்டிருந்தது. கிழக்குப் புறமாக படுக்கையறை.

இப்படியான சூழலில், தான் வாழ்வதை ஒருகணம் எண்ணிப்பார்த்தாள். நான் ஒருபோதும் இந்தச் சூழ்நிலையில் சந்திரனை வாழவிட்டிருக்க மாட்டேன்!

நானும் சேர்ந்து உழைத்தாவது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருப்பேன். அவன் மனைவி நாகரிகம் தெரியாத கிராமத்துப் பெண்ணாயிருப்பாள். வில்லேஜ் புருட்டோ?

மேசைமேல் சிதறிக்கிடந்த நூல்களைப் பிரித்துப் பார்த்து ஒழுங்காக அடுக்கினாள்.

நூல்களின் பெயர்களை அவள் முன் பார்த்ததில்லை. மார்க்ஸ். லெனின். ஸ்டாலின், மாவோ... அவள் அறிந்த



பெயர்களே. நூல்களிடை குறிப்பு எழுதிய சில துண்டுகள் இருந்தன. அவற்றைப் படித்துப் பார்த்தாள். சந்திரனின் எழுத்துகள் அவளுக்குப் பழக்கமாயிருந்தன. எழுதப்பட்ட விஷயங்கள் அவளுக்குப் புரியவில்லை. மற்றொரு துண்டை எடுத்தாள்: ''மார்க்ஸியம் என்பது 1) அந்நியமாதல் 2) விலை மதிப்புக் கோட்பாடு 3) வரலாற்றுப் பொருள்முதல் வாதம்.'' படித்துப் பார்த்தாள். தெரியாத விஷயங்கள்.

ஏதோ சொற்பொழிவுக்கோ கட்டுரை எழுதவோ தயாரிக்கப்பட்ட குறிப்புகள் போலத் தெரிந்தது. கல்லூரியில் படிக்கும் போதே நூல்கள் கற்பதில் அவனுக்கிருந்த ஆர்வத்தை எண்ணிப் பார்த்தாள்.

அவனுடைய டயரி ஒன்றும் மேசைமேலிருந்தது. பிரித்தாள். ஆங்காங்கே குறிப்புகள் எழுதப்பட்டிருந்தன. பிறர் டயரியை படிப்பது நாகரிகமில்லை என்ற நினைவு. டயரியை மூடிவிட எண்ணினாள். இதுயார் டயரி. சந்திரன் டயரிதானே.

''ஆனந்தி... பணக்கார வர்க்கம்...பணத்தைவைத்துக் கொண்டு இன்பத்தைத்தேடி அலைகிறாள். கிடைப்பது நிரந்தர மகிழ்ச்சியல்ல. வெறும் நுரை. சென் ஸேஷன்...'' மற்றோர் நீண்ட குறிப்பு. படிக்கமுடியவில்லை.

'ம்மா' என்ற குரலைக்கேட்டு திருப்பினாள். டயரியை மூடி மேசையில் வைத்தாள்.

திரையின் பக்கமிருந்து மாலதி தயக்கத்தோடு நடந்து வந்து கொண்டிருந்தாள். கசங்கிய டிரைஸ்ஸிங்கவுன். நன்கு வாராது பின்னிய கூந்தல். சந்திரனின் நிறம். நெற்றியில் கருமை நிறப்பொட்டு. பொலிவான மார்பு. இளமையான தோற்றம்.

அவளது இளமையும் நிறமும் ஆனந்திக்குப் பொறாமை ஊட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சந்ரா...மிஸ்டர் சந்திரன் இல்லையா? அவரைத் தேடிவந்தேன்''

எதிர்பாராது வந்த வார்த்தையைச் சமாளித்துக் கொண்டே சொன்னாள்.

''நீங்க ஏதாவது யூனியனிலிருந்து வந்தீர்களா?''

அவள் வினா ஆனந்தியை ஒரு கணம் குழப்பமடையச் செய்தது. சமாளித்துக் கொண்டே சொன்னாள்.

''நான் ஆனந்தி. அவர் என்னைப் பற்றி உங்களிடம் எதுவும் சொல்லவில்லையா!''

''இல்லையே''

ஆனந்திக்கு ஒரே வியப்பாக இருந்தது. சாக்லெட்டைச் சாப்பிட்டு, வாணீராக வடித்துக் கொண்டிருந்த குழந்தையை மாலதி தூக்கி, வாயைத் துடைத்துவிட்டு சாக்லெட்டைப் பறித்தாள். சாக்லெட்டை மீண்டும் பெற பையன் அடம் பிடித்தான். ஆனந்தி, தான் கொண்டு வந்த சாக்லெட் பார்சலை நீட்டினாள். பையன் பெற்றுக் கொண்டு சிரித்தான்.

''மாதவனல்லவா, நல்ல பெயர். அப்பாவைப் போலவே இருக்கிறான்.''

ஆனந்தி கதையை மாற்றி தனக்கும் அவன் குடும்பத்திற்கும்நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் காட்ட முயன்றாள்.

''நீங்க மாலதி, இல்லையா? இன்றுதான் முதன் முதலாகப் பார்க்கிறேன். ரொம்ப அழகாயிருக்கிறீர்கள்.''

மாலதி பதிலே பேசவில்லை. வெட்கத்தால் தலைகுனிந்தாள். அவளை வென்றுவிட்டதாக ஆனந்தி எண்ணிக் கொண்டாள்.

'மிஸ்டர்' சந்திரன் எங்க ஃபமிலி பிரெண்டு. அவர் கிளாஸிலே தான் படித்தேன். படித்துக் கொண்டிருக்



கும்போதே எனக்குத் திருமணமாகி விட்டது. எனக்கு எட்டு வயதிலும் ஆறு வயதிலுமாக இரண்டு பெண்கள் இருக்கிறார்கள்.''

சந்தேகம் எதுவும் ஏற்படாத விதமாக ஆனந்தி பேசினாள்.

''ரொம்ப நாளாய் அவரை நான் காணவில்லை. அன்றொருநாள் பிள்ளைகளோடு கடற்கரையில் நிற்கும் போது அவரைத் தற்செயலாகக் கண்டேன். அப்போது தான் உங்க விலாசம் பெற்றேன். வேறு அலுவலாக இந்த வழியால் வரவேண்டியிருந்தது.''

தன் வரவைப் பற்றி சந்தேகம் ஏற்படாதபடி விளக்கம் கூறிவந்த ஆனந்தி திடீரென நிறுத்தி விட்டுக் கேட்டாள்.

''உங்க மரீஜ் லவ் மரீயா?''

மாலதி வெட்கத்தால் தலையைக் குனிந்து சிரித்தாள்.

அவள் 'இல்லை' என்று சொல்ல வேண்டும். என்னைத் தவிர சந்திரன் வேறு எந்தப் பெண்ணையும் காதலித்திருக்க முடியாது. ஆனந்தியின் அடி மனம் சொல்லிக் கொண்டிருந்தது.

''அப்படி ஒன்றுமில்லை''

''அப்ப, யாராவது கலியாணத் தரகர் பேசிச் செய்தார்களா?''

''அப்படியுமொன்றுமில்லை.''

''உங்க பதில் விசித்திரமா யிருக்கிறதே.''

''அது ஒரு கதை''

மாலதி வெட்கம் மேலிடச் சிரித்தாள்.

''நல்ல கதையாயிருக்க வேண்டும். சொல்லு மாலதி. எனக்கும் அறிய ஆவலாயிருக்கு. ஏன் நிற்கிறீங்க? உட்கார்ந்தே சொல்லுங்களேன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தோடும் மாலதியோடும் நெருங்கிப் பழகி விட்டவள் போல ஆனந்தி கேட்டாள். மாலதி ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''அப்பா கிராமப் பாடசாலை ஆசிரியர். இவர் ஆரம்பக் கல்வியை அப்பாவிடமே கற்ருர். அதனுல் பின்னர் கொழும்பில் படித்த போதும் கிராமத்துக்கு விடுமுறையில் வரும் போது அப்பாவிடம் வந்து போவார். இருவரும் அரசியலில் ஒரே போக்கு. பின்னர் இவர் படிப்பு முடிந்து வேலை தேடிக் கொண்டிருந்த போதும் இடையிடை வந்திருந்தார்.

''நான் 10-வது முடித்து விட்டு வீட்டில் இருந்தேன். அதே வேளை ஒரு ஆசிரியரைக் கலியாணம் பேசி முற்ருக்கி இருந்தனர். சீதனப் பேச்சில் ஏதோ குறைந்ததாக கடைசி நேரம் அது குழம்பி விட்டது. அப்பா 'சீதனம் கேட்டுவரும் எவனுக்கும் என் பெண்ணைக் கட்டிக் கொடுக்கமாட்டேன்' என்று கூறி விட்டார். சீதனத்தால் கலியாணம் குழம்பிய தென்பதை அறிந்த இவர், தன் அரசியல் தோழர் மூலம், தான் என்னைக் கட்டுவதாக அப்பாவைக்கேட்டார். அவரின் குடும்பத்தவரின் எதிர்ப்பிடையே இவர் என்னைக் கொழும்புக்கு அழைத்து வந்தார்.''

மாலதி தன் கதையைச் சுருக்கமாக நாணத்தோடு கூறினுள்,

''உங்க அப்பாவிடம்வரும்போதேல்லாம்நீங்க அவரைப் பார்த்திருக்கிறீங்க இல்லையா?''

''டீ கொடுப்பேன்''

''அப்போது அவரும் பார்த்திருக்கிருர்.''

''சாதாரணமாகப் பார்த்தோம். வேறும் தோழர் பலர் அப்பாவிடம் வருவார்கள். நான் டீ கொடுப்பேன்''

''கலியாணத்திற்கு முன் அவர் உங்களைப் பார்க்க வில்லையா''



''ஒரு தடவை மட்டும் பார்த்தார்''

''அப்பொழுது காதலிப்பதாகச் சொல்ல வில்லையா?''

''இல்லை''

''அப்ப என்ன பேசினுர்?''

''என்னைக் கலியாணம் கட்டிக் கஷ்டப்படுவதற்கு நீ தயாரா? என்ருர். நான் 'ம்ம்' என்றேன்''

மாலதியின் பதில் ஆனந்திக்கு ஏமாற்றமாயிருந்தது. சிறிது நேரம் அவளால் எதுவும் பேசமுடியவில்லை.

''எப்படியும் நீங்க அதிர்ஷ்டக்காரிதான்''

ஆனந்தியின் உதடுகள் முணுமுணுத்தன, மாலதி எதுவும் பேசவில்லை.

''இப்போது கஷ்டப்படுகிறீர்களா?''

''உண்மையில் பெரிய கஷ்டம். அவருக்கு வேலையுமில்லை. யூனியன் வேலை என்றே திரிவார். ஆனாலும் அவரிடம் என் கஷ்டம் பற்றி எதுவும் கூறமுடியாது. கூற ஆரம்பித்தால் அன்று ஒப்புக் கொண்டதை நினைவூட்டுவார்.''

''அவர் சும்மா அப்ப சொன்னுர். உங்களைக் காதலித்தே கலியாணம் கட்டினுர்''

''இல்லை. அவர் தனக்குக் காதலில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவார்.''

''காதலில் ஒரு தடவை தோல்வியடைந்தவர்களும் இப்படித்தான் சொல்லுவார்கள்''

ஆனந்தி தன் அனுபவ சித்தாந்தத்தை அவளிடம் கூறினுள்.

மாலதி திடீரென எழுந்தாள்.

''உங்களோடு பேசிக் கொண்டேயிருக்கிறேன். கொஞ்சம் பொறுங்கோ. டீ போட்டுக் கொண்டு வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நண்பரைப் பார்த்து விட்டு மார்கெட்டுக்கும் போய் விட்டு வருவதாகக் கூறினர். இனி வந்துவிட வேண்டும்.''

மாலதி சுறுசுறுப்பாக நடந்து குசினியை நோக்கி நடந்தாள்.

ஆனந்தி குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்தாள். குழந்தையின் அழுக்கு சேலையில் படுவதைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. அவள் அந்தச் சேலையை என்றுமே உடுப்பதேயில்லை. அடிப் பெட்டியில் கிடந்தது. அங்கு வருவதற்கு எளிமை வேஷம் போடுவதற்காகவே எடுத்து உடுத்தாள். இரண்டு காப்பை மட்டும் போட்டுக் கொண்டு, வழமையாக அணியாத தாலிக் கொடியைப் போட்டு மார்பில் தெரியத்தக்கதாக விட்டுக்கொண்டே வந்தாள்.

தான் ஒரு சாதாரண எளிமையான பெண் என்பதை மாலதிக்குக் காட்ட விரும்பினுள். ஆனந்தி எதிர்பார்த்ததிலும் பார்க்க சந்திரனின் வீட்டு வாழ்க்கைத்தரம் குறைவாகவே இருந்தது.

சந்திரனின் டயரிக் குறிப்பில் படித்த சில வரிகளும் முற்ருகச் சரியாகவே தோன்றின. என் அனுபவமே அவ்வாறே. முழு உண்மை. அந்த டயரியை எடுத்து முழுவதும் படிக்க வேண்டும் போலத் தோன்றியது. திடீரென மாலதி வந்தால்...தன்னைக் குறைவாக எண்ணி விடலாம் என்ற எண்ணம் அவளைத் தடுத்தது. குழந்தையோடு உலாவுவது போல படுக்கையறை உட்பட அச்சிறு வீட்டைப் பார்த்துக் கொண்டாள்.

மாலதி டீயுடன் வந்தாள். வாங்கும் போது 'தாங்யூ' என்ற வார்த்தை வந்து விட்டது. சமாளித்துக் கொண்டாள்.

''சாமான் எல்லாம் விலை ஏறிக் கொண்டேயிருக்கிறது. 80 சதமாயிருந்த பிரெட் 2·80. இரண்டு ரூபா விற்ற சீனி 16 ரூபா. பால்மா 4 மடங்காகி விட்டது. எல்லாம் ஏறிக்



கொண்டேயிருக்கிறது. எப்படித்தான் குடும்பம் நடத்துகிறதென்றே தெரியவில்லை,''

மாலதி கூறுவதற்கு ஆனந்தி தலையசைத்தாள். இந்த விலைகளையெல்லாம் அவள் இப்போதுதான் கேள்விப்பட்டிருந்தாள்.

'நாலு ரூபா விற்ற பெற்ருேல் கலன் நாப்பது ரூபாவாகி விட்டது' என்பது அவள் உதடுவரை வந்துவிட்டது.

''சம்பள உயர்வு கேட்டு அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். அநியாயமாக எல்லோரையும் வேலை நீக்கி விட்டார்கள். எப்படியாஞலும் மிஸ்டர் சந்திரன் அதிர்ஷ்டக்காரன். உங்களைப் போல ஒரு பெண் கிடைத்து இந்தக் கஷ்டத்துக் கிடையேயும் சமாளித்துக் குடும்பம் நடத்துகிறீர்கள், பாருங்கள்''

ஆனந்தி யாவும் அறிந்து,தொழிலாளர்களுக்கு இரங்குவதாகக் கூறி, மாலதியைப் பாராட்டினுள்.

மாலதி உள்ளூற மகிழ்ந்தாள்.

'டீ நல்லாயிருக்கிறது' என்று பிடிக்காத போதும்பாராட்டினுள். மாலதிக்கு ஆனந்தியைப் பிடித்துக் கொண்டது.

''நீங்க இவரை சந்ரா என்று கூப்பிடுவீர்களா?''

ஆரம்ப வார்த்தையை நினைவுபடுத்தி மாலதி கேட்டாள்.

''நான் மட்டுமல்ல. கல்லூரியில் எல்லோருமே அப்படித்தான் கூப்பிடுவோம். இப்போது மிஸ்டர் சந்திரன் என்று சொல்லவேண்டிருக்கிறது''.

ஆனந்தி சிரித்துக்கொண்டே கூறினுள்.

''இவர் இப்படித்தான். வெளியே போனுல் எத்தினை மணிக்குத் திரும்புவார் எனறே சொல்ல முடியாது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பரவாயில்லே. நான் போய் விட்டு இன்ெனுரு முறை வருகிறேன்.''

ஆனந்தி எழுந்தாள்.

''பக்கத்திலே தமிழ் வீடுகளே குறைவு. கலவரம் வரும் வேளே வெளிக்கிடுவதே பயம். உங்களே எனக்கு நல்லாய் பிடித்துவிட்டது. உங்க விலாசத்தைத் தந்தால் உங்க வீட்டுக்கு நாங்க ஒரு தடவை வருவோமே.''

''கட்டாயம் நீங்கள்மாதவனேயும் கூட்டிக் கொண்டு வர வேண்டும். அவருக்கு விலாசம் எல்லாம் தெரியுமே''

வாசல் வரை குழந்தையையும் தூக்கிக் கொண்டு மாலதி வந்தாள். இந்த மாமிக்கு 'டட்டா' சொல்லு என்று குழந்தையின் கையையும் தூக்கி விட்டாள்.

'உங்கள் அவர் என்ன வேலே செய்கிருர்' என்பதைக் கேட்க மாலதியின் நா எழவில்லே.

''நீங்க எப்படிப் போகப் போகிறீர்கள்?''

மாலதியின் குரல் கேட்காதது போல நடித்துக் கொண்டே சென்று ஆனந்தி காரில் ஏறிஞள். கார் புறப் படும் போது கையை உயர்த்தி விரல்களே ஆட்டிஞள்.

ஆனந்தி தானே ஓட்டி, காரில் வந்தது மாலதிக்கு வியப்பாயிருந்தது.

இவள் இத்தனே பணக்காரியா?

இவள் கணவன் யார்? இவரைத் தேடி ஏன் வர வேண்டும்?

# 7

''மனே, நீ ரொம்ப உணர்ச்சி வசப்படுகிருய். நீ விரை வில் திருமணம் செய்து கொள்வது நல்லது.''

''உன்னே மறந்து எப்படி நான் இன்ெனுரு பெண்ணே மணக்க முடியும்?''

ஆனந்தியை மனேகரன் கேட்டான்.

பீகசுஸ் ஓட்டல் அருகே உள்ள கடற்கரை ஓரமாக இருவரும் நடந்து கொண்டே உரையாடிக் கொண்டிருந்தனர். ஆனந்தி கண்டிப்பான குரலில் பேசிஞள்.

''கல்லூரிப் பையன்கள் காதல் பற்றிப் பேசுவது போல நீ பேசுகிருய். நீ எவரையாவது காதலித்தோ, காதலியாமலோ கலியாணம் செய்து கொள். அதன் பின்னர் தான் காதலேப் பற்றி, செக்ஸைப் பற்றி, வாழ்க்கையைப்பற்றி நீ நன்கு அறிய முடியும்.''

''முதல் நாள் உன்னேப் பார்த்ததுமே என் நெஞ்சைப் பறிகொடுத்து விட்டேன். அப்போதும் மௌனமாக சென்று நான்உன்னே மறந்திருப்பேன். ஆனுல் நீயும்என் நிலேயிலேயே இருப்பதுபோலச் சொல்லி விட்டாய். இப்ப நீ பேசுவதை என்னுல் தாங்க முடியாது. ஏன் இப்படியெல்லாம் பேசுகிருய் என்றுதான் தெரியவில்லே''

''உனக்கு நல்லாய் தெரியும் நான் கலியாணமானவள். எனக்கு ஒரு கணவன் இருக்கிருன். இரண்டு பிள்ளேகள் இருக்கின்றன. உன்னிலும் பார்க்க நான் 2,3 வயசு மூத்தவள். உன் அழகைப் பார்த்து ஆசைப்பட்டு ஒரு தடவை கேட்டேன். ஒரு புதிய அனுபவம். சென்சே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷன். உனக்கும் தேவையாயின் எப்பொழுதாவது இடையிடை வரலாம். இதை நீ காதல் என்று சொல்லி இல்லாத தொன்றைக் கற்பனையில் பேசுவது, உன் அனுபவமின்மையையே காட்டுகிறது. அதைவிட நீ அடிக்கடி டெலிபோன் செய்து'என்னை நாள்தோறும் பார்க்காமல்இருக்க முடியாது' என்றெல்லாம் பேசுவது குழந்தைப் பிள்ளைத்தனமாக இருக்கிறது''

''நான் தொல்லை தந்ததற்கு வேணுமானுல் மன்னிப்புக் கேட்கிறேன். நீ என்னை ஒதுக்கப் பார்க்கிருய். அதுதான் என்ருல் தாங்க முடியாமல் இருக்கிறது. இதிலிருந்து விடுபட ஒரு வழி சொல்லு ஆனந்தி''

''கலியாணம் தான் நல்ல வழி. சிறிது சிறிதாக என்னையும் மறந்து விடலாம். சொய்சாவே அந்த மல்லிகாவைக் கட்ட ஒப்புக் கொண்டு விட்டான்.''

''அது அவன் முடிவு. என்னுல் மட்டும் உன்னை மறக்க முடியாமல் இருக்கிறது. ஏன்?''

''சரி மனோ, நீ என்னை மறக்க வேண்டாம். நல்லது. ஆனுல் என்னை விபசாரி போல நினைத்து ஒவ்வொரு தடவையும் பரிசு தருவது, வீணுகப் பணம் செலவழிப்பது எல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை''

''நான் அப்படி உன்னைக் குறைவாக நினைக்கவேயில்லை. காதலித்து விட்டேன். அதற்காகத் தரும் அன்பளிப்பு—''

''எனக்கு இதெல்லாம் பிடிக்காது. எனக்கு இனிமேல் எவ்வித பரிசும் வேண்டாம். அவற்றைத் தந்து விட்டு என்னை உன் சொத்தாக எண்ணப் பார்க்கிருய். என் கணவர்கூட அப்படித்தான் ஆரம்பத்தில் என்னைத் தன் சொத்தாக எண்ணப் பார்த்தார். நான் அதிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக வாழப் பார்க்கிறேன். தற்காலிக வடிகாலான செக்ஸ் உறவை வைத்துக் கொண்டு ஒரு பெண்ணை அடிமையாக்கி விடமுடியாது. செக்ஸ் ஒரு தீராத



கெடு. சென்சேஷன். பூரணத்துவமான மகிழ்ச்சிதரும் இன்பமல்ல''

தன் அனுபவ முடிவைக் கூறுவது போலிருந்தது.

ஆனந்தியின் பேச்சு மனோகரனது கருத்துகளைச் சிதற அடித்தது. இவள் துணிச்சலான, ஓர் மர்மமான பெண் தான். ஆனுல் இப்படியான சிந்தனையையும் கொண்டவளா? எங்காவது படித்த அறிவை வைத்துச் சொல்லுகிருளா? அல்லது சொந்த அனுபவத்தை வைத்துக் கூறுகிருளா? மனோகரனின் சிந்தனை குழம்பியது.

''உன் கருத்துகளைப் பற்றி நான் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆனுல் என் சொத்து என்று உன்னை நான் என்றும் எண்ணவில்லை''

''நீ இப்போது மறுக்கலாம். நினைவில் அப்படியான எண்ணம் இருக்கிறது. அன்றொரு நாள் யோகநாதனோடு நான் காரில் போனதைப் பார்த்து விட்டு நீ கேட்ட கேள்விகளை நான் இன்னும் மறக்கவில்லை. 'அவனும் பழைய ஃபிரெண்டா? வயசானவன். ஒழுக்கமில்லாதவன். இவர்களோடு ஏன் பழகுகிருய்?'' என்றெல்லாம் கேட்டாயல்லவா. அப்போது உனக்குள்ள பொருமையைப் பார்த்தேன். உன் சொத்துப் போல நினைத்து என்னைக் கட்டுப்படுத்தும் நோக்கம் உன் மனதில் இருந்தது. நான் அன்று பேசாது விட்டேன்.

''உன்னுடைய தற்போதைய காதலி யார்? எத்தனை பெட்டைகள் உங்க தொழிற்சாலைகளில் வேலை செய்கிருர்கள்? அவர்களில் எத்தனை குமரிகளை நீ கூட்டித்திரிகிருய் என்றெல்லாம் நான் ஆராய்ச்சி பண்ணுகிறேனு! உனக்கு விருப்பமானுல் இடையிடை நீ அழைக்கும் போது வருகிறேன். முகத்துக் கஞ்சியல்ல. எனக்கும் தேவையிருந்தால், விருப்பமிருந்தால் வருவேன். இன்றும் வந்திருக்கிறேன். நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியவர்களுடன் போவேன். உனக்கு விருப்பமில்லா விட்டால் நான் இப்பொழுதே போய் விடுகிறேன்''

ஆனந்தி உறுதியாகவே சொன்னாள். தேவையில்லாது இப்படியான விஷயம் பற்றி பேச்சை ஆரம்பித்துவிட்டதற்காக மனோகரன் தன்னையே கடிந்து கொண்டான்.

''ஆனந்தி, ஐ ஆம் சொரி. அப்படி ஆசையில்லாமலா உன்னை அழைத்து வந்தேன். கலியாணம் கட்டு என்று நீ சொன்னதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. வேறு பெண்ணைக் காதலிக்க முயற்சி செய் என்று சொல்லியிருந்தாலும் நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன். அதற்காக இப்படியெல்லாம் நீ பேசுவது எனக்கே கவலையாயிருக்கிறது''

மனோகரன் பணிவாகக் கூறினான்.

''மனோ, அங்கேயும் நீ பிழையே விடுகிறாய். காதல் என்று நினைப்பது வெறும் பொய்மை. நானும்ஒரு காலத்தில் இந்தக் கானல் நீரைத் துரத்திக் கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் அனுபவத்தின் மூலம் உண்மையைக் கண்டு உனக்கும் சொல்லுகிறேன். செக்ஸ் உந்தலால் ஏற்படும் மென்மையான உணர்வைத்தான் 'காதல்' என்று சொல்லி அளவுக்கு மீறிய உயர்வுகொடுத்து எங்களைநாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். இது தற்காலிக இன்பம் தரும் உணர்வு. இதற்கு சமூகத்தில் அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் இருப்பதனால் நாமும் அளவுக்கு மீறிய மதிப்புக் கொடுக்கப் பார்க்கிறோம். நீ எப்படியாயினும் கலியாணம் செய்து கொள். அதன் பின்னர் தான் காதல், குடும்பம், செக்ஸ், மகிழ்ச்சி பற்றியெல்லாம் அனுபவபூர்வாக அறிந்து கொள்ள முடியும்.''

''சரி ஆனந்தி. அம்மாவும் இதைப் பற்றியே சொல்லிக் கொண்டிருக்கிறாள். பிறகு யோசித்துப் பார்ப்போம். இப்போது வேறு விஷயம் பற்றிப் பேசுவோம்''



''உங்க மில், தொழிற்சாலைகளின் வளர்ச்சி பற்றிச் சொல்லுங்களேன். கேட்டு ரொம்ப நாளாய் விட்டது''

''சுதந்திர வர்த்தக வலயத்தில் இரண்டு சிப்டில் உற்பத்தி ஆரம்பித்துவிட்டோம். அமெரிக்காவிற்கு சேர்ட், லேடீஸ் காமென்ஸ் விமானத்தில் ஏற்றுமதி செய்கிறோம். நீ தானே இன்னும் வந்து பார்க்கவில்லையே''

''எத்தனைபேர் வேலை செய்கிறார்கள்?''

''அறுநூறு பெண்கள் வேலை செய்கிறார்கள். பெரும்பகுதி சிங்களப் பெட்டைகளே. மாதம் 500, 600 ரூபா வரை சம்பளம் கொடுக்கிறோம். வீட்டிலே வேலையில்லாமல் இருக்கும் பெண்களெல்லாம் பிழைக்க முடிகிறது''

''உங்க சொந்தமா? கூட்டுக் கம்பனியா?''

''யப்பானிய கம்பனியோடு கூட்டுக் கம்பனி. எமக்கு 55 பங்கு, அவர்களுக்கு 45. இதைப்போல மேற்கு ஜர்மனியுடன் ஒரு கூட்டுக் கம்பனி. பஸ், லாரிக்கு கூடாரம் கட்டுவது, போல்ட், நட்ஸ் தயாரிப்பதும் ஆரம்பித்து விட்டோம். 'கன்டிராக்' எடுத்து கட்டிடங்கள் கட்டுகிறோம்.''

''எப்படித்தான் இவ்வளவு வேலைகளையும் பார்க்கிறீர்களோ தெரியாது''

''நாங்களா வேலைகளைச் செய்கிறோம். எல்லாவற்றையும் செய்ய கூலியாட்கள் இருக்கிறார்கள். தீர்மானம் எடுப்பது, அதனால் எதிர்பாராது ஏற்படக்கூடிய நட்டத்திற்குப் பொறுப்பேற்பது மட்டுமே எங்கள் வேலை. மானேஜர்கள், இஞ்சினியர், அக்கவுண்டன்,வேலையாட்கள் எல்லோரும் கூலியாட்களே.சம்பளத்தைக்கொடுத்தால் செய்துவிட்டுப் போகிறார்கள். பணம் வேணுமென்றால் பாங்குகள் இருக்கின்றன''

''எவ்வளவு பணமும் தருவார்களா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாங்குகளென்றால் வட்டிக்கடைகள் தானே. எங்கள் தேவைக்கு அளவாக வாங்கிக் கொள்கிறோம்''

''தீபா டெக்ஸ்டைல் மில் பற்றி முன்னர் ஒரு தடவை சொன்னாயே. பொல்லாத யூனியன், அசையாத தலைவன் என்றெல்லாம் சொன்னாய், அவர்களைக்கலைத்துவிட்டீர்களே. இப்ப ஒரு பிரச்சனையும் இல்லைத்தானே''

ஆனந்தி சந்திரனைப் பற்றி அறியும் ஆவலோடு கேட்டுக் கொண்டே கடற்கரையில் மேற்கே மறையும் சூரியனின் செவ்வண்ண அழகைப் பார்த்துக் கொண்டே ஓட்டலுக்குத் திரும்பும் நோக்கோடு காதைக் கூர்மைப் படுத்திக் கொண்டு நின்றாள். இனிய கடற்காற்று அவளது மயிரோடும் சட்டையோடும் விளையாடிக் கொண்டிருந்தது.

''பிறகும் கரைச்சல் வந்தது. வேலை நீக்கிய எட்டுப் பேரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று 'கோ சிலோ', தாமத வேலை, சட்டப்படி வேலை என்று கரைச்சல் கொடுத்தார்கள். எங்கள் கம்பனியைப் பற்றி இழிவாக போஸ்டர் அடித்துத் தெருவெல்லாம் ஒட்டி விட்டார்கள். பிறகு எட்டுப்பேரையும் சென்ற வாரம், வேலையில் சேர்த்து விட்டோம்.''

''யார் சந்திரனையுமா?''

திரும்பி ஓட்டலை நோக்கி நடந்த ஆனந்தி ஆச்சரியம் மிக்கவளாக அவன் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

''உனக்கு அவனைத் தெரியுமா?''

மனோகரன் வியப்போடு கேட்டான்.

''நீ தானே போனதடவை அவனது பெயரைச் சொன்னாயே.''

''அந்தப் பெயரை இன்னும் நினைவு வைத்திருப்பது ஆச்சரியந்தான்.''

''சந்திரனைப் பெரிய இமேஜாக்கி உன் எதிரிபோல நீதான் அன்றைக்குச் சொன்னாய். அதனால்தான் நினைவு வந்தது.''

ஆனந்தி சமாளித்து விளக்கம் கூறினாள்.

''ஆனால் அவனை நாங்கள் விடப் போறதில்லை. அவனை யூனியனிலிருந்து ஒழிக்கவும் வேறு திட்டம் போட்டிருக்கிறோம்''

''அது என்ன திட்டம்? எப்படிச் செய்யப் போகிறீர்கள்?''

மனோகரனின் கை விரல்களைப் பிடித்துக் கொண்டே ஆனந்தி கேட்டாள்.

வெஞ்சினம் குரலில் ஒலிக்க மனோகரன் சொன்னான்:

''அவனை ஒழித்துவிட்டுப் பின்னர் சொல்கிறேனே''

# 8

''சந்திரன், ஆனந்தி பேசுறேன். கொன்கிராயுலேசன்ஸ்'

''மீண்டும் இங்கே நான் வேலை செய்வது உனக்கு எப்படித் தெரிந்தது? இன்றைக்கும் வீட்டுக்குப் போனியா?''

ஆனந்தி, தீபா டெக்ஸ்டைல்ஸ் 'மில்'லை டெலிபோனில் எடுத்தாள். பிரபல தொழிற் சங்கத்தலைவருக்கு டெலிபோன் வசதி நிட்சயம் கிடைக்கும் என்ற துணிவுடனேயே 'சந்திரனுடன் பேசவேண்டும்' என்றாள். ஒரு சிரமமுமிருக்கவில்லை. டெலிபோனில் 'சந்திரன்' என்றான். ஆனந்தி குதூகலத்தோடு பேசினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வீட்டுக்குப் போகவில்லை.''

''பிரபல தொழிற்சங்கத் தலைவர் பற்றிய செய்தி எங்களுக்குத் தெரியாமலா போய்விடும். மாலையில் உன்னை கட்டாயம் நான் பார்க்க வேண்டும்''

''என்ன அப்படி அவசரம்?''

''அன்றைக்கு வீடுதேடி வந்தேனே, ஏன் வந்தாய் என்ருவது டெலிபோன் செய்து கேட்டாயா?''

''நீ ரொம்பக் கெட்டிக்காரி''

''உன் வாயால் கேட்கிறேனே அதுவே போதும். மாலை ஆறுமணி வரையில் கோல்பேஸில அன்று சந்தித்த அதே இடத்தில் காத்திருப்பேன். பிறகு ஒய்வாகப் பேசலாம்.''

சந்திரன் பதில் கூறுமுன் அவள் டெலிபோனை வைத்துவிட்டாள்.

மாலையில் கோல்பேஸ் சென்று காற்று வாங்கிக் கொண்டு அங்கும் இங்கும் உலாவியபடி நின்ருள். பிள்ளைகளை அழைத்து வரவில்லை. சுவர்ச்சியாக உடுத்திருந்த நைலெக்ஸ் சேலை கடற்காற்றில் பறந்து கொண்டிருந்தது. அவன் நிட்சயம் வருவான் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

சந்திரன் டயரியில் தன்னைப் பற்றி எழுதியதை முற்ருக அன்று படிக்காது விட்டது அவள் ஆவலைத் தூண்டிக் கொண்டிருந்தது. என்ன எழுதியிருப்பான்? மாலதி அதைப் படிக்க மாட்டாளா? அந்தப் பக்கங்களைக் கிழித்துக்கொண்டு வந்திருக்க வேண்டும். பின்னர் டயரி கிழிந்திருப்பதை சந்திரன் கண்டிருந்தாலும் மாலதி அல்லது குழந்தை கிழித்தது என்று விட்டிருப்பான். மற்ருெரு தடவை செல்லும் போது நிட்சயம் டயரியையே திருடிக் கொண்டு வரவேண்டும்!



சந்திரன் களைத்திருந்த போதும் முகத்தில் களையிருந்தது. சென்ற தடவை பார்த்த சோர்ந்த முகமல்ல. கடற்காற்று அவன் களைப்பை ஆற்றிக் கொண்டிருந்தது.

''மாலதி என்னைப் பற்றி என்ன சொன்ஞள்.''

ஆனந்தி சந்திரனைக் கண்டதும் கேட்டாள். வீட்டுக்குச் சென்றது அங்கு எவ்வித சலனத்தை ஏற்படுத்தியது என்பதை அறியும் ஆவலுடனேயே கேட்டாள்.

''உன்னை அவளுக்கு நல்லாய் பிடித்து விட்டது. உன் நாடகம் வெற்றிதான். ஆனுல் அவள் உன்னைச் சாதாரண குடும்பப் பெண்ணுகவே நினைத்துப் பழகிஞள். காரைக் கண்டதும் பயந்துவிட்டாள்.''

''அப்படித்தான் நினைத்தேன். நீ என்ன சொன்ஞய்?''

''புருஷன் ஒரு டாக்டர். ஞாயிற்றுக்கிழமை. அவன் காரை எடுத்துக் கொண்டு வந்திருப்பாள். இந்தக் காலத்திலே அரசாங்க டாக்டரென்ருல் பெரியகொம்போ, என்று சமாளித்தேன்.''

''நான் சொன்ன கதைகள் பற்றி சந்தேகம் ஏற்படாத விதமாகப் பேசிஞயா?''

''நீ சொன்ன விபரங்களை முதலில் கேட்டுவிட்டு ஒத்து ஊதினேன்.''

''மாலதிக்கு என்மேல் சந்தேகம் எதுவும் ஏற்படவில்லைத்தானே''

''பெண்களின் அடிமனதில் என்ன இருக்குமென்று தெரியாது. அவள் அப்படி எதையும் வெளியே காட்டிக்கொள்ளவில்லை.''

''என்னையும் சேர்த்தா பொதுமைப் படுத்திப் பேசுகிருய்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆமாம், நீ என்னை வரும்படி ஏன் வற்புறுத்தினாய் என்று எனக்குத் தெரியாது.''

''அன்று வீட்டுக்கு வந்தேன். பார்க்க முடியவில்லை. ஏதோ பார்த்துப் பேச வேண்டும் போல இருந்தது. உன்னைப் பற்றி விசாரிக்க தொழிற்சாலைக்கு டெலிபோன் செய்தேன். நீயே வந்தாய். மீண்டும் வேலையில் சேர்ந்தது சந்தோசமே. நான் வந்தபோது மாலதி மிகவும் துக்கப்பட்டாள். குடும்பத்தை நடத்துகிற அவளுக்குத்தான் விலையேற்றத்தால் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் எல்லாம் தெரியும்.''

''உனக்குத் தெரியுமா?''

''எனக்கு பெற்றோல், எலக்றிக் அடுப்பு, துணி விலைகள் எப்படி ஏறி இருக்கிற தென்றெல்லாம் தெரியும் மாலதிக்கு அரிசி, மாவு, சீனி, மண்ணெண்ணெய் விலையெல்லாம் தெரியுமே''

''மாலதிக்குத் தெரிந்தது, தொழிலாளர்களது வீட்டார் எல்லோருக்கும் தெரியும். உன்னைப் போலவே தொழிலதிபர்கள் முதலாளிகள் எவருக்கும் இந்த விலை ஏற்றங்கள் பற்றித் தெரியாது. நாங்கள் சொன்னாலும் அவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்வதில்லை. தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மூலப் பொருட்கள், பெற்றோல், டீசல், டை, கெமிக்கல்ஸ் விலை ஏற்றத்தை மட்டுந்தான் ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிக் கொள்வார்கள்,''

''யார் உங்கள் முதலாளிகள்?''

''தரகு முதலாளிகள்''

ஆனந்தி எதிர்பார்த்த பதில் வரவில்லை. மனோகரனை அல்லது அப்பனைச் சொல்லுவான் என எண்ணியே கேட்டாள்.

''அப்படியென்றால் இப்பொழுது தான் முதன் முதலாக இப்படி ஒரு சொல்லைக் கேள்விப்படுகிறேன்.''



''இந்த முதலாளிகள் வெளிநாட்டவர்கள். எங்கள் நாட்டவரின் உழைப்பையும் மூலப்பொருட்களையும் கொள்ளையடித்துக் கொண்டுபோக உதவுபவர்கள். அதற்காக தரகை கமிஷனாக அல்லது லாபத்தில் ஒரு பங்காகப் பெறுபவர்கள், அவர்களது அரசுதான் இங்கே நடைபெறுகிறது''

''என்னவோ நீ சொல்லுறது ஒன்றும் எனக்குச்சரியாய் புரியவில்லை.கட்டு நாயகாவிலுள்ள காமென்ட் ஃபக்டரியில் ஆயிரக்கணக்கான பெண்கள் வேலை செய்யவில்லையா? வெளிநாட்டுக்கம்பனிகளின் உதவியால்தானே இத்தனை பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது''

''அங்கே வேலை செய்யும் பெண்களுக்கு ஒரு நாளைக்கு என்ன சம்பளம் கொடுக்கிறார்கள் தெரியுமா? நாளுக்கு 20 ரூபா. அதாவது ஒரு அமெரிக்க டாலர். அமெரிக்காவில் ஒரு பெண் தையல் வேலை செய்தால் நாளொன்றிற்கு குறைந்தது 30 டாலர் கொடுக்க வேண்டும். எங்கள் நாட்டுத் தொழிலாளரது உழைப்பை மலிவாக ஏற்றுமதி செய்கிறார்கள். லாபமான 29 டாலரில் ஒரு பகுதியை இங்குள்ள தரகு முதலாளிகளுக்குக் கொடுத்து விட்டு லாபத்தில் பெரும் பகுதியை அமெரிக்க முதலாளிகள் பெற்று விடுகிறார்கள். அதனால்தான் எங்கள் முதலாளிகளை அமெரிக்க முதலாளிகளின் தரகர்கள் என்கிறோம்''

சந்திரன் ஆத்திர உணர்வோடு கூறினான்.

''இத்தனை கொள்ளை நடைபெறுகிறதா?''

ஆனந்தி வியப்போடு கேட்டாள். தன் அறியாமையை ஒப்புக்கொள்வதாக குரல் ஒலித்தது.

''இந்த நிலையில் வாழ்க்கைச் செலவு ஏறிவிட்டது. 25 ரூபாவாக நாள் கூலியை உயர்த்து என்று கேட்டால் வேலை நீக்கம்,பொலிஸ்,அவசர காலச் சட்டம்,யூனியனை உடைக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் போடுவது...இவை தான் எங்கள் தரகு முதலாளி களது வேலையாயிருக்கிறது.''

ஆனந்தி வாழ்ந்த உலகத்தில் இப்படியான உண்மை களைக் கூறிய எவரையும் அவள் காணவில்லை. அவன் கூறுப வற்றிலுள்ள உண்மை அவளது நெஞ்சை நடுங்கச் செய்தது.

''இவற்றைக் கேட்டு எனக்கே கவலையாயிருக்கிறது. முதலாளிகள், பணக்காரார் சந்தோசமாக வாழ்கிறார்கள் என்று பார்த்து தொழிலாளர்கள் பொறாமைப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்லு வார்''

''தொழிலாளர்கள், ஏழைகள் இவர்களைப் பார்த்து பொறாமைப்படுவதென்ன ஆத்திரமடைகிறார்கள். தாம் உழையாது தொழிலாளரது உழைப்பில் வாழ்ந்து கொண்டு அவர்களையே இழிவாக நடத்துகிறார்கள். இந்த உண்மையை அறியும் போது எந்தத் தொழிலாளிதான் ஆத்திரமடையா மல் இருக்க முடியும். அதே வேளை கொடுமைகளைப் புரியும் முதலாளிகள், பணக்காரர் சந்தோசமாக வாழ்கிறார்கள் என்பதையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்''

''நாங்களெல்லாம் சந்தோசமாக வாழவில்லை என்று கூறுகிறாயா?''

ஆனந்தியின் குரல் உறுதியாக இருக்கவில்லை.

''நீங்களெல்லாம் எமக்குக் கிடைக்காத சில புற வசதிகளைப் பெறுகிறீர்கள் என்பது உண்மையே, நீங்கள் மகிழ்ச்சி, சந்தோசம் என்று கருதுபவையெல்லாம் வெறும் பொய்மையே. அவையெல்லாம் வெறும் சென்சேஷன். தற்கா லிக உணர்வு மயக்கம். உழைப்பதையே அறியாத முதலாளிகள் மேலதிக பணத்தை வைத்துக் கொண்டு மகிழ்ச்சியை, சந்தோசத்தைத்தேடி அலைகிறார்கள். செக்ஸ்ஸில் இன்பம் தேட விபசாரிகளைத் தேடுகிறார்கள். கணநேர சென்ஷேசன். ஓட்டல்களுக்குச் சென்று நாவிற்கு பல்வேறு சுவைதேடு கிறார்கள். உயர்ந்த மது, எல்.எஸ்.டி போன்றவற்றில் மயக்க சுகம் தேட முயல்கிறார்கள். இசையில், கலையில், ஆட்டத்தில் 'திறில், சென்சேஷன்' காண விரும்புகிறார்கள். அமைதியான, நிரந்தரமான சந்தோசம், மகிழ்ச்சியை அவர்கள் கண்டதில்லை. என்றும் காணமுடியாது.''



''ஏனப்படிச் சொல்லுகிறாய்?''

மேலும் அவனது கருத்துகளை அறியும் ஆவலில் ஆனந்தி கேட்டாள். அவன் கூறும் கருத்துகள் அவளுக்குப் புதுமை யாகத் தோன்றின. செக்ஸ் பற்றி அவள் அனுபவ பூர்வ மாகக் கொண்ட கருத்தையும் அவன் கூறுவது போலிருந்தது. டயரியில் எழுதிய குறிப்பிலெத்தனை உண்மை. முழுவதையும் படிக்க முடியவில்லையே. இதற்காகவாவது மறுதடவை செல்ல வேண்டும்.''

''உழைக்கும் தொழிலாளர்களது இரத்தத்தில் மிதந்து கொண்டு நிஜமான மகிழ்ச்சியை இவர்களால் காண முடியுமா? அனுபவிக்கமுடியுமா? ஏழ்மையிலிருந்து தோன் றும் நோய்கள், அசுத்தம், கிருமிகளிலிருந்து பணக்காரர்கள் தப்பிவிடமுடியாது. அதே சமூகத்திலேயே பணக்காரர் களும் வாழ வேண்டியவர்களாகின்றனர். சமூகத்தின் நலனை மறந்து லாபம் ஒன்றே நோக்காக உற்பத்தி செய்கிறார் கள். இதனால் மக்களின் நல்வாழ்விற்கு சுவாசிக்க வேண்டிய காற்று, குடிக்க வேண்டிய தண்ணீர், வாழவேண்டிய சுற்று டலையே யந்திர உற்பத்தி கெடுத்து வருகிறது. திட்டமான கொள்கையோ, கோட்பாடோ இந்த முதலாளிகளிடம் கிடையாது. அதை விட அவர்களெல்லாம் வெறும் கோழைகள்''

''அப்படியா சொல்லுகிறாய்?''

ஆனந்தி வியப்போடு கேட்டாள்.

''தொழிற்சங்கத் தலைவர்களைக் கண்டால் நடுங்குகிறார் கள். பேச்சு வார்த்தை நடத்தச் செல்லும் போதெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் முகத்திலேயே பயத்தைப் பார்க்கலாம். எங்க மில்லுக்கு அப்பாவும் மகனுமாக இரண்டு அயோக்கியர்கள் டைரக்டராக இருக்கிறார்கள். கான்பரன்ஸ் நடக்கும் போது மகனைப் பார்க்க வேண்டும். என்னைக் கண்டாலே அவன் நடுங்குவான்.''

''அவன் பெயரென்ன?''

''மனோகரன்''

# 9

''உன் முதலாளிகளையே எதிர்த்து நிற்கிறாயே உனக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டார்களா?'' என்று ஆனந்தி கவலையோடு சந்திரனைப் பார்த்துக் கேட்டாள்.

''தொழிலாளர்கள் என் பக்கம் நிற்கும் வரை ஒன்றும் செய்ய முடியாது. வேலையிலிருந்து நீக்கிப் பார்த்தார்கள். முடியவில்லை. அரசாங்க சார்பாக வேறோர் தொழிற் சங்கத்தை ஏற்படுத்திப் பார்த்தார்கள். முடியவில்லை. தற்போது என்னைக் கொலை செய்யக்கூட முயற்சிக்கிறார்கள்''

சந்திரன் சாவதனமாகச் சொன்னான். ஆனந்தி அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தாள். அன்று மனோகரன் கூறிய வார்த்தைகளை ஒரு தடவை எண்ணிப் பார்த்தாள். இந்த வழியைத்தான் அவன் நினைத்துக் கூறியிருப்பான்.

''எப்படி அவர்களால் உன்னைக்கொலை செய்ய முடியும்?

''மெஷின் ஓடிக் கொண்டிருக்கும்போது எவனுக்காவது லஞ்சம் கொடுத்து தள்ளி விடுவார்கள். பின்னர் ஆக்ஸிடன்



—விபத்து என்று பொலிசுக்குச் சொல்லி பணத்தை வீசி சமாளித்து விடுவார்கள். இப்படியெல்லாம் முன்னர் நடந்திருக்கிறது''

''சந்திரன், எனக்குப் பயமாயிருக்கு. ஏன் நீ இந்தத் தொல்லைகளுக்குள் போய் மாட்டிக் கொள்கிறாய். இப்படி ஏதாவது நடந்தால்...நினைக்கவே முடியவில்லை. மாலதி, குழந்தையின் நிலை என்ன?''

''இதற்கெல்லாம் பயந்து யூனியனை விட்டு ஒளிந்து விட முடியாது. அக்கிரமம், அநீதி எங்கு நடந்தாலும் எதிர்த்து நிற்பது என் சுபாவம். அதற்காக என்ன நடந்தாலும் பயப்படப் போவதில்லை. தொழிற்சங்கத்தை அழிக்க மனோகரன் நிட்சயம் ஏதாவது திட்டம் போடுவான். அகப்படும் போது அவன் எங்களிடம் ஒரு நாளைக்கு உதை வாங்கியே தீருவான்.

இருகையிலும் இரண்டு எதிரிகளை, தான் வைத்திருப்பது போல ஆனந்தி உணர்ந்தாள். தான் மனோகரனின் வகுப்பைச்சேர்ந்திருந்த போதும் சந்திரனின் பக்கமாக நீதி இருப்பதை அவளால் உணர முடிந்தது.

கால்களை நீட்டியபடி உட்கார்ந்திருந்த சந்திரன் கோர்த்த கைகளை தலையணையாகக் கொடுத்து மல்லாந்தபடி படுத்திருந்தான். வானத்தைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

பொழுது மங்கிக் கொண்டு வந்தது. மங்கிய தெரு வெளிச்சம் இருந்த போதும் நவமிப் பிறை உச்சியில் தெரிந்தது.

கல்லூரி நாட்களில் இருண்ட கடற்கரைகளில், சினிமா தியேட்டர்களில் அவனது கரத்தை எடுத்து உரிமையோடு விளையாடியது, முத்தமிட்டது எல்லாம் ஆனந்தியின் நினைவில் வந்தது. தற்போது அவனைத் தொடவே தயக்கமாக இருந்தது. இவன் எவ்வளவு மாறிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பு. ஆனால் என் அடி நெஞ்சில் இவன் மூட்டிய நெருப்பு!

''நீ டீ சாப்பிடவும் வர மாட்டாய். ஐஸ் கிரீம் வாங்கி வருகிறேன்''

ஆனந்தி எழுந்து சென்று அண்மையில் நின்ற 'வானி' லிருந்து இரண்டு 'கோன்' ஐஸ் கிரீம் வாங்கி வந்தாள்.

''அந்த நாட்களில் நீ ஐஸ் கிரீம் வாங்கித் தருவதை நான் இன்னும் மறக்கவில்லை.'' என்று சொல்லிக்கொண்டே ஒன்றை அவனிடம் கொடுத்தாள். மறுக்க முடியாதவனாக சந்திரன் எழுந்து வாங்கிக் கொண்டான். வரண்ட அவன் நாவிற்கு அது சுவையாயிருந்தது.

சந்திரனும் மௌனமாகவே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இருவரும் அந்தப் பழைய நாளைய நினைவுகளில் மிதப்பது போல இருந்தது.

''சந்திரா, நீ தான் அந்தப் பழைய நாட்களையெல்லாம் மறந்துவிடவேண்டுமென்று நிற்கிறாய்; என்னால் இன்னும் முடியவில்லை.''

''நாங்கள் முந்திய கல்லூரி மாணவரா இப்பொழுதும். வளர்ந்து விட்டோம். இருவரும் இரு துருவங்களில் நிற்கிறோம்.''

''உன் புத்தகங்களை யெல்லாம் பார்த்தேன். நான் அறியாத புத்தகங்கள். சும்மா தட்டிப் படித்துப் பார்த்தேன். எனக்கு எதுவுமே புரியவில்லை.''

''நீ இன்னும் காதல், செக்ஸ் நாவல்கள், துப்பறியும் நாவல்களே படித்துக் கொண்டிருப்பாய், இல்லையா?''

''பொழுது போக வேறு எவற்றைப் படிப்பது?''

''எங்களைப் போல உழைக்காததால், பொழுதைப் போக்குவதே உங்கள் வாழ்க்கையாகி விட்டது.''



''வேறு நல்ல புத்தகங்கள் இருந்தால் கொடு. நான் படிப்பதற்கு. உன் மார்க்சிய புத்தகங்களைப் பார்த்தேன். எதுவுமே புரியவில்லை. ஏதோ குறிப்பில் 'அந்நியமாதல்' என்று எழுதி வைத்திருந்தாய். அப்படியானால் என்ன?

''உனக்கு மார்க்சிய வகுப்பு நடத்தவா நான் வந்தேன். அதைப் படிப்பதால் உனக்கு எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. ஏன் என்னை இங்கு வரச் சொன்னாய் என்பதை முதலில் சொல்லு?''

''எனக்கு இந்த வார்த்தை புரியவில்லை. கேட்டு அறியவுந்தான் வரச் சொன்னேன். கல்லூரியில் படிக்கும்போது நீ எனக்குப் புரியாதவற்றைச் சொல்லித்தருவதில்லையா? உன் நோட்டு புத்தகத்தை இரவல் தருவதில்லையா? அது தான் கேட்கிறேன். என் பிடிவாதம் உனக்குத் தெரியாது'' பழைய குழந்தைத் தனத்தை அவளின் பேச்சில் கேட்டான்.

''அந்தக் காலத்தில் அந்த வயதில் என்னை ஆட்டிப் படைத்துவிட்டு ஓடினாய். இப்பவும் அப்படிச் செய்ய முடியுமா? நான் எழுந்து போனால் நீ என்ன செய்வாய்''

''அழுவேன்''

ஆனந்தியின் பதிலைக்கேட்டு உள்ளூறச் சிரித்தான்.

''இன்றைய சமுதாய அமைப்பில் நிரந்தர சந்தோசம், மகிழ்ச்சி என்பவை குதிரைக் கொம்பாகவே இருக்க முடியும்''

''ஏன்?''

''உங்களுக்கு மகிழ்வு தரக்கூடியவற்றைச் செய்யக்கூடிய சுதந்திரமே கிடையாது. காதல் திருமணம் செய்து கொள்ள நீ விரும்பினாய். செய்ய முடியவில்லை. இதை நாம் காதல் திருமணத்திற்கு அந்நியமாகி விட்டாய் என்று கூறுவோம்.''

''இதற்கும் மார்க்சியத்திற்கும் என்ன தொடர்பு?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கள் 'மில்லை' எடுத்துக் கொள். யந்திரங்கள் மூலப்பொருட்களெல்லாம் முதலாளிக்குச் சொந்தம். தொழிலாளர்களாகிய நாங்கள் நாள்தோறும் சென்று எமது உழைப்புச் சக்தியையும் வேலைத் திறமையையும் அவர்களுக்கு விற்கவேண்டியவர்கள் ஆகிறோம். இந்த நிலை நான்குவித உறவுகளை ஏற்படுத்துகிறது என்று மார்க்ஸ் கூறினார். உற்பத்திச் செயற்பாட்டிற்கு நாம் அந்நிய மாகிறோம். அதாவது தொழிற்சாலையில் என்ன செய்வது, எப்படிச் செய்வது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை எமக்கில்லை. முதலாளி இட்ட வேலையைச் செய்ய வேண்டும். இரண்டாவது நாம் உற்பத்தி செய்த பண்டத்திற்கு நாம் அந்நிய மாகிறோம். லட்சக்கணக்கான மீட்டர் துணியை மாதந் தோறும் நெய்கிறோம். வேலை செய்யும் தொழிலாளர்களுக்கோ அவர்களது குடும்பத் தவருக்கோ உடுப்பதற்குப் போதிய துணி கிடையாது. தொழிற்சாலையில் எவ்வித துணி உற்பத்தி செய்வது? அதனால் எவ்வளவு லாபம் கிடைக்கிறது என்பதைக்கூட நாம்அறிய முடியாது. உற்பத்தியில்ஒற்றுமை, கூட்டுறவு, திட்டம் இல்லாததினால் போட்டா போட்டி உற்பத்தி நடைபெறுகிறது. இதனால் மற்ற மனிதர்களுக்கே அந்நியமாக வேண்டியுள்ளது. போட்டி, பொறாமை, கழுத்தறுப்பு யாவும் மனிதர்களிடையே ஏற்பட்டு விடுகிறது. இவற்றால் இயல்பாக மனிதனிடமுள்ள உயர்ந்த உணர்வுகளிலிருந்து—மனிதன் என்ற தனித்துவ உள்ளுணர்விலிருந்து தொழிலாளி அந்நியமாகிறான். இந்தச் சித்தாந்தங்களையெல்லாம் ஐந்து நிமிஷத்தில் புரிந்து விடலாம் என்று நீ நினைக்கிறாய்''

''வகுப்பு நடத்தி நீ தொழிலாளர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறாய் இல்லையா! இப்பொழுது கொஞ்சமாவது எனக்கும் சொன்னால் உன் அறிவு குறைந்து போய்விடுமா. நீ பேசுவது, சொல்வதெல்லாம் எனக்குப் புதுமையாயிருக்கிறது''



''மார்க்சியம் என்பது சமூகவிஞ்ஞானம், சமூக வளர்ச்சியை விஞ்ஞான பூர்வமாக ஆழ்ந்து கற்பது. இதை கல்லூரிகளில் சொல்லிக் கொடுத்தால் தமது அமைப்பிற்கே ஆபத்து வந்துவிடலாம் என்று முதலாளிகள் தடுத்து வருகிறார்கள். இதெல்லாம் உனக்கு எதற்கு? உன்னிடம் போதிய பணம் இருக்கிறது. உலகத்து இன்பங்களை எப்படி அனுபவிக்கலாம் என்று ஏங்கித் திரிகிறாய். ஆனால் ஒன்றை நீங்கள் மறந்துவிடப்படாது. சமுதாயத்தில் இத்தகைய அநீதிகளும் வேறுபாடுகளும் இருக்கும் வரை முதலாளிகள், பணக்காரர் கூட அமைதியாக, சந்தோஷமாக வாழ முடியாது''

சந்திரன் கூறிக் கொண்டே எழுந்தான். 'நேரமாகிறது போகவேண்டும்' என்றான்

''மிச்சப் பாடம் எப்பொழுது?''

''நீ எதற்காக வற்புறுத்தி வரச் சொன்னாய் என்பதைச் சொல்லேன்''

''ஏதோ உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஆவலாயிருந்தது. உன்னோடு எவ்வளவு நேரமும் பேசிக்கொண்டேயிருக்கலாம். நான் அதற்குக் கொடுத்து வைக்கவில்லை''

சந்திரன் சிரித்தான்.

''என் வீட்டையும் மாலதியையும் பார்த்த பிறகும் உனக்கு இந்த எண்ணம் வருகிறது ஆச்சரியந்தான்''

''நானும் படித்து, வேலை செய்து உழைத்திருப்பேன். எனக்கும் வேலை செய்து உழைக்க வேண்டும் போலத் தோன்றுகிறது''

''இந்தச் சமுதாய அமைப்பில் நீங்கள் விரும்பும் கல்வியைக் கற்க முடியாது. விரும்பிய தொழிலைச் செய்ய முடியாது. எங்கள் ஆத்மாவிற்கே அந்நியமாகி விடுகிறோம். வீட்டு வேலைகளையே வேலையாட்களை வைத்துச் செய்து கொண்டு நீ வேலை செய்து உழைக்க வேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்படுகிருய். வேலை என்ருல் தெருவிலே போட்டுக் கிடக்கா. எங்க நாட்டிலேயே படித்து விட்டு இருபது லட்சம் பேர் வரையில் வேலையில்லாமல் திரிகிருர்கள். தொழிலாளர் களின் ஆட்சி வரட்டும், இவர்களுக்கு மட்டுமல்ல உன்னைப் போன்ற பணக்காரருக்கும் முதலாளிகளுக்குமே வேலை கொடுப்போம்.''

''அது என்ன ஆட்சி?''

''அதுதான் சோஷலிசம்''

''அது எப்பாழுது வரும்?''

''எந்த வேளையும் வரலாம்''

## 10

ஆனந்திக்கு மனோகரன் மேல் மேலும் வெறுப்பு ஏற் படத் தொடங்கியது. சிறிது சிறிதாக அவனை ஒதுக்கிவரத் தொடங்கினுள்.

டெலிபோன் செய்யும் வேளைகளில் நேரமில்லை, பிஸி, அப்போயின்மென்ட் இருக்கிறது என்று சாட்டுச் சொல்லி வந்தாள்.

வேலைக்காரனைக் கொண்டு 'அம்மா வீட்டிலில்லை, வெளியே போய் விட்டா' என்றும் சில வேளைகளில் சொல்லச் செய்தாள்.

ஒரு தடவை, சென் மைக்கல் நர்சிங் ஹோமில் மனோ கரன் இருப்பதாகவும் பார்க்க விரும்புவதாவும் டெலிபோன் வந்தது. விபரம் எதுவும் தெரியவில்லை.



ஆனந்தி அங்கு சென்ருள்.

நெற்றியிலும் உடலிலும் சிறு காயங்கள். ஊமைக் காய நோவு, ஆனந்தியைக் கண்டதும் நோவை மறைத்து, சிரித்து வரவேற்ருன்.

''மனோ, என்ன நடந்தது?''

வியப்போடு கேட்டாள்.

''ஆக்ஸிடென்ட்''

''காரிலா''

''இல்லை. படிக்கட்டிலிருந்து விழுந்து விட்டேன். பெரிதாக எதுவுமில்லை. டாக்டர் இரண்டுநாட்கள் இங்கு தங்கச் சொன்னுர். நாளைக்கு வீட்டுக்குப் போய் விடுவேன்''

காயங்களையோ, நோவினுல் ஏற்படும் வேதனையையோ பெரிதாகக் காட்டாது மனோகரன் கூறினுன்.

தான் வேண்டுமென்று அவனை வெறுக்கவில்லை என்பதை நடித்துக் காட்ட தலைமயிரைத் தடவி விட்டாள். மனோகரன் அவளது கையைப் பற்றிக் கொண்டான்.

''ஆனந்தி...''

அவன் கண்கள் பரிதாபமாகப் பேசின.

''அப்பா, அம்மா வருவதில்லையா?''

அவன் பேச முனைந்த விஷயத்தை மாற்றுவதற்காக ஆனந்தி கேட்டாள்.

''காலையும் மாலையும் வந்துபோவார்கள்''

தனியாகக் கவனிக்க எவருமில்லையா?''

''ஸ்பெஷல் நர்ஸ் ஏற்பாடு செய்திருக்கிருர்கள்''

''பிறகென்ன கவலை. ஒரு கிழமையாதல் தங்குவது தானே''

ஆனந்தி கேலியாகச் சிரித்துக்கொண்டே கூறினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உனக்குக் கேலிதான்''

''அம்மா இப்பொழுது வருவாரா''

''இனி மாலையில் தான் வருவார்''

''நான் ஒரு தடவை அம்மாவைப் பார்க்க வேண்டும்''

''திடீரென என்ன விஷயம்?''

''பையன் குழப்படி செய்கிறான். கெதியாகக் கலியாணம் கட்டி வைக்கும்படி சொல்லப் போகிறேன்''

''ஆனந்தி நீ முன் போலில்லை. நான் முதலில் கண்ட ஆனந்தியல்ல நீ''

''ஏனப்படிச் சொல்லுகிறாய்?''

''என்னை நீ தட்டிக் கழிக்கப் பார்க்கிறாய்''

''ஏனப்படிச் சொல்கிறாய்?''

''இப்ப நீ என்னை மறக்கப் பார்க்கிறாய்''

''உனக்கு நன்மை செய்யவே பார்க்கிறேன். கலியாணம் கட்டி விடு. அதன் பின்னர் பார்ப்போம். உனக்குப் பெண் தர நூறுபேர் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள்.''

''அந்த நூறில் ஒன்றும் உன்னைப்போல் வராது''

''ஆண்களின் இப்படியான பேச்செல்லாம் எனக்கு நல்ல பழக்கம். இவற்றில் நான் எடுபடுபவளல்ல. என் அழகு பற்றி எனக்குத் தெரியும். நான் ஸ்கூலுக்குப் போக நேரமாகி விட்டது. பிள்ளைகள் பார்த்துக் கொண்டு நிற்பார்கள்''

''ஆனந்தியை இப்போதுதான், நான் படித்துக் கொண்டிருக்கிறேன்''

கூறியபடியே தன் உதட்டை விரல்களால் பிடித்தான்.

ஆனந்தி அவனைச் சமாளிப்பதற்காக சுற்றிவரப் பார்த்து விட்டு குனிந்து, கீழ் உதட்டை மென்மையாகக் கடித்து விட்டு தன் கையை பலமாக இழுத்து விடுவித்துக் கொண்டு புறப்பட்டாள். அவள் அந்த அறையைத் தாண்டும் வரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான், மனோகரன்.



ஆனந்தி வேண்டா வெறுப்பாகத் தந்த முத்தமாக மனோகரன் உணர்ந்தான். உடல் நோவிலும் பார்க்க அவள் தன்னை வேண்டுமென்றே ஒதுக்கி வருவது அதிக வேதனை தருவதாக உள்ளூற உணர்ந்தான். இவள் ஏன் இப்படிச் செய்கிறாள்? பரிசு கொடுத்தாலும் வேண்டா வெறுப்பாகவே பெறுகிறாள். அன்று ஓட்டலிலிருந்து திரும்பும் போது அந்தக் கடையில் அவள் வாங்கிய பொருட்களுக்கு பணத்தை நான் கொடுக்கச் சென்றபோது 'மனோ, ஸ்ரொப் தற் நொன் சென்ஸ்' என்று ஆட்களின் முன்னேயே என் கையைத் தள்ளி அவமதித்து விட்டு எப்படிப் 'பார்த்தாள். இவளிடமிருந்து என்னால் விடுபடவும் முடியவில்லை. சொய்சாவைக் கலியாணம் கட்டும்படியும் இவள்தான் வற்புறுத்திச் சம்மதிக்கச் செய்தாளோ. இவள் எத்தனை விசித்திரமான பெண்...

# 11

ஞாயிறு காலை எட்டரை மணி. ஆனந்தி சந்திரன் வீட்டுக்குள் நுழைந்தாள். அதிகாலை. விடுமுறை நாள். வீட்டில் நிட்சயம் இருப்பான் என்ற எண்ணத்திலேயே சென்றாள். ஆனால் அவன் அங்கு இல்லை. சிறிது ஏமாற்றமாகவேயிருந்தது.

மாலதி வந்து வரவேற்றாள். முன்னர் வரவேற்றதிலும் பார்க்க முகத்தில் காட்டிய மதிப்பு உயர்ந்திருந்தது. சந்தேகம், வெறுப்பு எதுவும் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம் ஒன்றைப் புரட்டி விளையாடிக் கொண்டிருந்த மாதவனைத் தூக்கி, கன்னத்தில் முத்தங்கொடுத்தாள். பின்னர் கீழே விட்டு ஒரு சாக்லெட்டைக் கொடுத்தாள். அவன் பிய்க்க முயன்ற சாக்லெட்டை மீண்டும் பெற்று உடைத்துக் கொடுத்தாள்.

''எனக்கு ஒன்று'' என்று கூறிக் கையை நீட்டினாள். அவன் ஒரு துண்டைக் கொடுத்தான். அதைப் பெற்று அவனது வாயில் திணித்தாள்.

''ம்மா'' என்று கூறிக்கொண்டு தாயிடம் சென்று ஒரு துண்டைக் கொடுத்தான். மாலதி வாங்கிக் கொண்டாள்.

''அவர் கிட்டத்தான் போய் விட்டார். இன்னும் காலையில் சாப்பிடவில்லை. வந்து விடுவார், உட்காருங்கோ''

மாலதி நாற்காலி ஒன்றை எடுத்து ஆனந்தியின் பக்கமாக நகர்த்தினாள்.

''உங்களுக்கு எவராவது ஏதாவது பொருள் தந்தால் 'தாங்யு' சொல்வீர்களா?''

ஆனந்தி நயமாக இவ் விசித்திரமான வினாவை எழுப்பினாள். மாலதி ஒன்றும் புரியாதவளாக 'மம்'' என்றாள்.

''அப்படியானால் 'தாங்யு' சொல்லுங்கள்''என்று கூறியபடி மாலதியிடம் ஒரு பார்சலை நீட்டினாள். 'தாங்யூ' சொன்னபடி. மாலதி தயக்கத்தோடு, மறுக்க முடியாதவளாகப் பார்சலைப் பெற்றுப் பிரித்தாள். ஆரஞ்சு கலரில் ஒரு வூலி நைலெக்ஸ் சேலை.

''இதெல்லாம் எதற்கு.அவர் என்னசொல்லுவாரோ!''

முகத்தில் அச்சம்.

''அவர் ஒரு கம்யூனிஸ்டு. மனைவிக்குச் சுதந்திரம் தருவதில்லையா? நான் பரிசு தருகிறேன். நீங்கள் வாங்குகிறீர்கள். வாங்கவேண்டாம் என்று தடுக்க அவர் யார்''



மாலதி மௌனமாயிருந்தாள். ஆனந்தி மீண்டும் தொடர்ந்தாள்.

''என் கலியாணத்திற்குப் பரிசு அனுப்பியவர். உங்கள் கலியாணத்தை அவர் அறிவிக்கவேயில்லை. பிந்தியென்றாலும் கடனைக் கொடுத்து விடுவது நல்லதல்லவா?''

மாலதி ஒன்றும் பேசவில்லை. சேலை அவளுக்கு நன்கு பிடித்துக் கொண்டது. ஒருவித தயக்கத்தோடு அதை எடுத்துச் சென்று படுக்கை அறையில் வைத்து விட்டு வந்தாள்.

''டீ போட்டுக் கொண்டு வருகிறேன்''

மாலதி குசினிப் பக்கமாகச் சென்றாள்.

வாயில் பக்கத்தைப்பார்த்துக்கொண்டேமேசையடிக்குச் சென்று சந்திரனின் டயரியை எடுத்துப் பிரித்தாள். தன்னைப் பற்றிக் குறிப்பு எழுதியிருந்த தாளை மீண்டும் சுற்றுமுற்றும் ஒருதடவை பார்த்துவிட்டு கிழித்தெடுத்தாள். கொண்டு வந்த 'கான்ட் பாக்'கைத் திறந்து வைத்துக்கொண்டாள்.

மேசைமேல், புத்தகங்களிடை வைக்கப்பட்டிருந்த குறிப்புகளை எடுத்துப் பார்த்தாள். ஒன்றைப் படித்தாள்.

''உபரி மதிப்பு முதலாளித்துவத்தின் மிகப் பெரிய குறைபாடாகும். ஏனெனில் உற்பத்தியின் ஒரு பகுதியே கூலியாக தொழிலாளருக்குக் கிடைக்கிறது. இதனால் தொழிலாளர்கள் நுகர்வோராக உற்பத்தியின் பெரும் பகுதியை வாங்க முடியாதவராகின்றனர். இதனால் உற்பத்தியை தொடர்ந்து பெருக்க, புதிய சந்தை முதலாளிக்குக் கிடையாது போகிறது. அளவுக்கு மீறிய உற்பத்தி என்ற கூக்குரலுக்கு இது இட்டுச் செல்கிறது. இதுவே முதலாளித்துவத்தின் மிகப் பெரிய முரண்பாடாகும். தொழிலாளர்கள் அதிக உற்பத்தி செய்ததால் சிறுமையாக வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தாம் உற்பத்தி செய்த பண்டங்களுக்கே அவர்கள் அந்நியமாகின்றனர்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விலைமதிப்புக் கோட்பாடு' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருந்த குறிப்பின் ஒரு பகுதியைப் படித்துப் பார்த்தாள். இவற்றையெல்லாம் தொழிலாளருக்குக் கற்பிக்கிறாரு? அவர்களுக்கு இவை புரியுமா? அவளுக்கு வியப்பாயிருந்தது. வேறு சில எழுத்துப் பிரதிகளை எடுத்துப் பையுள் வைத்துக் கொண்டாள்.

சிறுவன் குறுநடைபோட்டுவந்து ஆனந்தியின் கால்களைப் பிடித்துக் கொண்டான். அவனை நடத்தி வந்து நாற்காலியில் உட்கார்ந்து மடியில் வைத்துக் கொண்டாள்.

மாலதி டீ கொண்டு வந்தாள்.

''சீ இவன் உங்கள் சேலையை அழுக்காக்கி விட்டானே''

''பரவாயில்லை. குழந்தைதானே''

டீயை கொடுத்துவிட்டு அவனைத் தூக்கிக் கொண்டாள்.

''இந்த வீட்டுக்கு எவ்வளவு வாடகை கொடுக்கிறீர்கள்?''

''இருநூறு ரூபா. தண்ணீர் கிணற்றிலிருந்துதான் எடுக்கிறோம்''

''ஊரிலே வீடு இல்லையா''

''இல்லை.''

''இங்கேயாவது ஒரு நிலத்தை வாங்கி வீடொன்றைக் கட்டிவது தானே''

''எங்கே முடியும்? அவர் சம்பளம் வீட்டுச் செலவிற்கே போதாது. இடையில் வேலை நிறுத்தம் செய்து மூன்று மாதம் வேலையில்லாமல் இருந்தார்''

''மில்லிலே நிலம் வாங்க, வீடு கட்ட கடன் கொடுக்க மாட்டார்களா?''

''கடன் என்றால் வட்டி என்று மேலும் சுரண்டுவார்கள் என்பார். மற்றது,ஒரு சொத்தும் வாங்கப் படாது என்பார்''



''ஏனப்படி?''

''சொத்து வந்துவிட்டால் பட்டாளி என்ற தன்மை இல்லாது போய் விடும் என்று சொல்லுவார். என் கலியாணத்தின் போதும் சீதனம் எதுவும் வாங்க மறுத்து விட்டார். அப்பாவிடம் கிராமத்தில் இரண்டு பரப்பு நிலமிருந்தது. கலியாணத்தின் பின் அதை எழுதித் தர முன் வந்தார். இவர் வேண்டாம் என மறுத்து விட்டார்''

மாலதி மூலம் மேலும் அவனைப் பற்றி ஆனந்தி அறிந்து ஆச்சரியமடைந்தாள். உழைத்து சொத்து வாங்குவதில் தன் கணவருக்கிருக்கும் வெறி உணர்வோடு அவனை ஒப்பிட்டுப் பார்த்தாள்.

கையில் கீரை, காய்கறி, பழம் கொண்ட கூடையுடன் சந்திரன் உள்ளே வந்தான். ஆனந்தியைக் கண்டதும் 'வந்து ரொம்ப நேரமா?' என்று கேட்டான்.

மாதவன் மாலதியின் மடியிலிருந்து இறங்கி ஓடிச் சென்று 'அப்பா அப்பா' என்று கூறியபடி ஒரு வாழைப் பழத்தை எடுத்தான்.

''இரண்டு பேரும் தோழிகளாகி விட்டீர்கள் போலிருக்கிறது.''

சந்திரன் சொன்னான். இருவரும் சிரித்தனர்.

சந்திரன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

''நீங்க சாப்பிடவில்லையா?''

ஆனந்தி நினைவூட்டினாள்.

''நீ சாப்பிட்டாயா? மாலதி இரண்டு பேருக்கும் தட்டில் பிட்டு எடுத்தவா.''

''நான் சாப்பிட்டு விட்டே வந்தேன். டீ குடித்து விட்டேன். மறுதடவை வரும் போது சாப்பிடாமலே வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறேனே. மாலதியின் சமையலையும் சுவைத்துப் பார்க்க வேண்டும்.''

மாலதி சிரித்தபடி தலை குனிந்தாள்.

ஆனந்தி சமாளித்துப் பேசி விட்டு மாலதி குசினிப்பக்கம் சென்றதும் மேலும் பேச்சைத் தொடர்ந்தாள்.

''மில்லில் இப்பொழுது பிரச்சனை எதுவும் இல்லைத் தானே.''

''அங்கே ஏதாவது பிரச்சனை நடந்து கொண்டேயிருக் கும். டைரக்டரில் ஒருவனுன மனேகரனை மில்லுக்கு வெளியே விட்டு அடித்து உதைத்து விட்டோம்''

''அப்படியா, என்ன நடந்தது. அவன் பொலிசுக்குப் போயிருப்பானே''

''வெட்கத்தில் அவன் போகமாட்டான். மில்லுக்கு உள்ளே என்றால்தான் சாட்சி தேடி அடித்தவர்களை வேலை நீக்கம் செய்யலாம். வெளியே காரை மறித்தோம். என்னை விபத்துக்குள்ளாக்கி கொலை செய்ய ஒரு மெஷின் 'போர்ம னுக்கு' இரண்டாயிரம் ரூபா லஞ்சம் கொடுத்திருந்தான். அந்த 'போமனை'யும் பணத்தையும் அவனுக்குக் காட்டி விட்டே தோழர்கள் உதைத்தார்கள். 'நாங்கள் உன் சதியை அம்பலப் படுத்தப் பொலிசுக்குப் போகவில்லை. நீ போனுயோ அம்பலப் படுத்துவதல்ல உன்னைக் கொலை செய் வோம்' என்று வெருட்டினுர்கள். அவன் நடுங்கி தன்னை விடும்படி மன்றாடினான். இனிமேல் மில் பக்கமே வரமாட் டான். மாலதிக்கு இது ஒன்றும் தெரியாது.''

ஆனந்தி ஆவலோடும் ஆத்திரத்தோடும் அந்தக் கதையைக் கேட்டாள். படியிலிருந்து விழுந்ததான மனே கரனின் பொய்க் கதையை நினைத்து உள்ளூறச் சிரித்தாள். சிறிது நேரம் அவளால் எதுவும் சிந்திக்க முடியவில்லை. பேச முடியவில்லை.



இவன் பள்ளியில் படிக்கும் போது பழகிய சந்திரனில்லை புதிய சந்திரனின் செயல்களையும் பேச்சுகளையும் எதிர்நோக் கும் விபத்துகளையும் எண்ணிப் பார்க்கும்போது தன்னிட மிருந்து அவன் தூரத்தூரப் போய்க் கொண்டிருப்பது போலத் தெரிந்தது. அவனிடமிருந்து மேலும் கற்று நெருங்கிப் போக முடியுமா. இவனுக்கு ஏதாவது விபத்து நடை பெறின் மாலதி, மாதவனின் கதி என்ன? அவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப் படுபவனுகத் தெரியவில்லை.

''சொந்தமாக ஒரு வீடே இல்லை. வீடு கட்டும் நோக் கமே இல்லை. சொத்தே வேண்டாம் என்று சொல்வதாக மாலதி சொன்னுள். அவளுக்கும் பிள்ளைக்கும் கூட ஒரு பாதுகாப்பு வேண்டாமா? எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் பணம், சொத்து, நகை, புடவை வாங்குவதிலேயே கண்ணு யிருக்கிறுள். மாலதி மட்டும் ஒரு ஆசையும் இல்லாத துறவியாக வாழவேணுமோ''- மாலதிக்குப் பரிந்து ஆனந்தி கூறினுள்.

''தனிச் சொத்துடைமையை அழிக்க வேண்டும் என்ற கோட்பாடு கொண்டவன் நான். அதுவே இன்றைய சமுதாயத்தின் துன்பங்கள் அனைத்திற்கும் காரணம். தனிச் சொத்துடைமைச் சமுதாயத்தில் சொத்துச் சேர்ப்பதற்கு எல்லையே இல்லை. ஒரு பரப்பு நிலமுள்ளவன் நாலுபரப்புச் சொத்துசேர்க்க ஆசைப்படுகிறுன். நாலு பரப்புள்ளவன் நாலு ஏக்கர் வேணு மென்கிறுன். நாலு ஏக்கர் உள்ளவன் 40 ஏக்கர் தேடப் பார்க்கிறுன். பணத்திலும் இப்படியே. இதில் போட்டி, பொறுமை, கழுத்தறுப்பு,சிறிய மீன் பெரிய மீனை விழுங்க பெரிய மீனை சுறு விழுங்குகிறது. கொலை செய்தும் மற்றவனது உழைப்பைத் திருடியும், பட்டினியைக் காட்டிப் பய முறுத்தியும் சொத்தையும்பணத்தையும்சேர்க்க லாம். சேர்த்தால்தான் சமுதாய அந்தஸ்து கிடைக்கும் என்ற நடை முறை கொண்ட சமுதாயம் இது. இப்போட்டி யில் பெரும்பான்மையினர் பாட்டாளிகளாகி வாழ்க்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைத் தேவைகளுக்காக அல்லலுறமற்றொரு சிறுபான்மையினர் சாகும் வரை கொள்ளையடித்துச் சொத்துச் சேர்ப்பதே வாழ்க்கையின் நோக்கமென அலைகின்றனர். பணத்தால் கிடைக்கக்கூடிய இன்பங்களைத் தேடி ஓடுகின்றனர். பொய்மைகளில் மயங்கி தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளுகின்றனர். எலும்பைக் கடித்துத் தன் இரத்தத்தையே சுவைத்து மகிழும் நாய்போல ஏமாறுகின்றனர். தனிச் சொத்துடைமையை அனுமதிக்கும் இச் சமூகத்தை உடைத்தெறிந்து சொத்துடைமையற்ற சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோட்பாடு கொண்டவன் நான். தனிச் சொத்தற்ற பாட்டாளிகளுடன் சேர்ந்துதான் இதைச் சாதிக்க முடியும்...''

சந்திரனின் நீண்ட பேச்சை அமைதியாக ஆனந்தி கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் சொன்னவை யாவும் தர்க்க ரீதியாக இருப்பது போலத் தோன்றியது. ஆயினும் தனிச் சொத்தாக வீடு, பணம் இல்லாத நிலையை அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

''குடும்பங்களில் ஒற்றுமையில்லா திருப்பதற்கும் சண்டை சச்சரவுகளுக்கும் கூட தனிச் சொத்துத்தான் காரணம் என்று சொல்லுகிறாயா?''

''இன்றைய சமூக அமைப்பில் குடும்பங்களில் கூட ஒற்றுமை இருக்கவே முடியாது. சமூக அமைப்பிலுள்ள குறைபாடுகள் யாவும் அதன் சிறு கூறான குடும்பங்களிலும், குடும்பங்களிடையேயும் ஏற்பட்டுவிடுகின்றன. உன்னைப் போன்ற விருப்பமில்லாத அந்நியப்பட்ட கலியாணங்கள், அடுத்த வீட்டாரின் சொத்து, பணம், நகைகளை, சேலைகளைப் பார்த்துப் பெண்கள் பொறாமைப்படுவது, ஆண் பெண்களின் சமனற்ற நிலைமை, ஆண் பெண்ணைத் தன் சொத்தாகக் கருதுவது, பெண் தன் கணவனைத் தன் சொத்தாக எண்ணுவது, ஆண் தலையெடுத்த சமூக அமைப்பைப் பேணுவது, பெண்கள் குடும்பத்தின் அடிமைகளாக அதிக நேரம் உழைப்பது இப்படியாகப் பல காரணங்கள் உள்ளன. சண்டைகள், முரண்பாடுகள் இல்லாத குடும்பங்களையே இச் சமூக அமைப்பில் காண முடியாது...''



சந்திரன் தன் சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது மாலதி ஒரு தட்டில் பிட்டுக்கு மேல் குழம்பை விட்டுக் கொண்டுவந்து மேசைமேல் வைத்தாள்.

''சாப்பிட்டபடி பேசலாமே.''

மாதவன் ஓடிவந்து சந்திரனின் மடியில் ஏறிக் கொண்டான். குழம்பு படாத பிட்டில் சிறு துண்டை அவனுக்கு ஊட்டினான்.

''உங்கள் குடும்பத்திலும் சண்டை போடுவீர்களா?''

மாலதியைப் பார்த்துச் சிரித்தபடி ஆனந்தி கேட்டாள்.

''இருவரும் இரு வேறு தொழில்களில் வெவ்வேறு வாழ் நிலைகளில் உள்ளோம். சிந்தனை வேறுபடுகிறது. கருத்துகள் முரண்படவே செய்யும். சண்டை தவிர்க்க முடியாதது. குழந்தையை வளர்ப்பதிலேயே சண்டைவரும். உன் வீட்டில் முரண்பாடு, சண்டை இல்லையா. அதற்கும் இதற்கும் இடையில் சிறு வேறுபாடிருக்கும், அவ்வளவே.''

எல்லோரும் சிரித்தனர்.

''பெண்கள் அதிக நேரம் உழைப்பதும் சண்டைக்குக் காரணம் என்று சொன்னீர்கள். அது எப்படி?''

''உன்னைப் போல பணக்காரப் பெண்கள் ஒரு சிறு பகுதியினரைத் தவிர பெரும்பான்மையான பெண்கள் அதிகாலையில் எழுந்து, இரவு நேரம்கழித்து தூங்கும் வரை வேலை செய்து கொண்டேயிருக்கின்றனர். பின் தூங்கி முன் எழுபவள் என்ற பாராட்டுப் பெற்றவள் பெண். பகலில் கூலி உழைப்பிற்குப் போகும் பெண்கள் கூட அதிகாலையிலும், வேலையால் திரும்பிய பின்னரும், வீட்டில் உழைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர். வீட்டைப் பெருக்கி துப்பரவாகவைத்திருத்தல், சமைத்தல், துணி தோய்த்தல், குழந்தைகளைப் பராமரித்தல் ஆகிய வேலைகளெல்லாம் பெண்கள் தலையிலேயே சுமத்தப் பட்டுள்ளன. கணவனுக்கும், குடும்பத்திலுள்ள பெரியவர்களுக்கும், மதத்திற்கும், சமூக கட்டுப்பாடுகளுக்கும் அடிமையாக வாழவேண்டியவளாகிறாள்.''

''சரிதான். ஆனால் அதற்கும் குடும்பச் சண்டைகளுக்கும் என்ன தொடர்பு?''

ஆனந்தி கேட்டாள்.

''ஒருவரது உழைப்பு சுரண்டப்படும்போது, அங்கு தோன்றும் உறவை பகைமை உறவு என்று நாம் கொள்கிறோம். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் தோன்றும் உறவு பகைமை உறவு.''

''பகைமை உறவு என்றால்...''

''தொழிலாளியும் முதலாளியும் என்றும் ஒற்றுமையாக இருக்க முடியாது. ஒரு வர்க்கத்தை மற்றவர்க்கம் அழிப்பதன் மூலமே பகைமை தீர்க்கப்படும் இதே போலவே உழைப்பு அத்துமீறிச் சுரண்டப்படும் பெண்கள் உழைப்பைச் சுரண்டும் கணவருக்கோ, குடும்பத்திற்கோ எதிராகப் போராடுகின்றனர். இதனாலேயே இன்றைய சமுதாய அமைப்பில் குடும்பங்களிடை ஒற்றுமையையோ, சந்தோசத்தையோ காணமுடியாது. பெண்கள் தனித்தனி குடும்பங்களில் இயங்குவதால் ஒன்று திரண்டு தமது அடிமை நிலைக்கு எதிராகப் போராட முடியாதவர்களாகவும் உள்ளனர். தொழிலாளர்கள் ஒரே இடத்தில் கூட்டாக உழைப்பதால் ஒன்று திரண்டு போராட முடிகிறது. அவர்கள் நடாத்தப்போகும் சோஷலிசப் புரட்சியின் மூலம் தான் பெண்களும் விடுதலையடைய முடியும். பெண்கள் ஆண்களைப் போல் சமநிலை அடையும் போதே யதார்த்தமான மகிழ்ச்சியைக் குடும்பங்களில் காண முடியும்.''

''மாலதி, இங்கும் நீ அடிமைதானா. இவர் வீட்டு வேலையெல்லாம் செய்வாரா?''

''இங்கு இருக்கும் வேளைகளில் எல்லாவற்றிலும் உதவுவார்''

''சமையலில் கூட''

''ம்ம்''

மாலதியின் தலையாட்டலைப் பார்த்து ஆனந்தி சிரித்தாள்.

''நீ அதிர்ஷ்டக்காரிதான்''

சந்திரன் சாப்பிட்டுக் கை கழுவும்வரை காத்திருந்தாள். பின்னர் எழுந்து மாலதிக்கும் குழந்தைக்கும் 'டட்டா' சொல்லி விட்டு காரை நோக்கி நடந்தாள். அவள் எதிர்பார்த்தபடியே சந்திரன் குழந்தையோடு பின் தொடர்ந்தான்.

''என்ன அலுவல்? மீண்டும் இங்கே?''

''ஏன் நான் வரக்கூடாதா? நீ வரவேண்டாம் என்றாலும் இனிமேல் நான் வருவேன், மாலதி இப்ப என் தோழி. நானே ஏதோ உன்னைப் பார்க்கவேண்டும் போலே இருந்தது. வந்தேன்.''

''இன்னும் கல்லூரி நாட்களையே நினைத்துக் கொண்டிருக்கிறாயோ''

''முதல் காதல் மறக்க முடியாது. உனக்கே தெரிய வேண்டும். அப்பொழுது நான் தவற விட்டது ஒன்றை மீண்டும் பெற வேண்டும் என்று என் அடி நெஞ்சு அடித்துக் கொண்டேயிருக்கிறது.''

காரில் இருந்து சுவிச்சைப் போட்டுக் கொண்டே சொன்னாள். அவ்வேளை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் ஏதோ பேசின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ ரொம்பப் படித்திருக்கிறுய். அவற்றிலும் கொஞ்சமாவது படிக்கவும் விருப்பமாயிருக்கிறது. மறுதடவை மில்லுக்குப் போன் செய்கிறேன்.''

ஆனந்தி சொல்லிவிட்டு, சந்திரன் ஏதோ கூற வாய் திறக்கு முன் காரை ஓட்டத் தொடங்கி விட்டாள்.

## 12

வீடு செல்லும் வரை ஆனந்தியால் பொறுமையாக இருக்க முடியவில்லை. இடையிடை உலாவ வரும் மவுன்லெவினியா கடற்கரையை நோக்கிக் காரை ஓட்டிஞள். வெய்யில் ஏறிய போதும் கடற்காற்று இதமாக வீசியது. திருடி வந்த டயரி ஒற்றையை எடுத்துப் படிக்கத் தொடங்கிஞள்.

''ஆனந்('தி'யை காணவில்லை. எழுத்துத்தவறு. மனைவி படித்தாலும் என்று வேண்டுமென்றே எழுதிஞு!) அப்படியே இருக்கிருள்.

பத்து வருடங்கள். இரு பிள்ளைகளின் தாய். உடலமைப்பில் அதிக மாற்றமில்லை. பேச்சிலும் நடையிலும் மட்டும் எத்தனை மாற்றம். பணத்தால் கிடைக்கக் கூடிய துணிச்சல், அதிகாரம் யாவிலும் தொனிக்கிறது. பணத்தைக் கொண்டு உலக இன்பங்கள் யாவையும் அடைந்து விடலாம் என ஏங்குகிருள். சமுதாய அமைப்பிலுள்ள சிக்கல்களை, கிடைக்கும் பணத்தின் பின்புறத்தில் மறைந்திருக்கும் அநீதிகளை அவள் அறியாள். கட்டுப்பாடற்ற செக்ஸ், ஸ்ரார் ஓட்டல்களில் கிடைக்கக் கூடிய உணவு, திறில் நடனங்கள், புதிய புதிய உடைகள், இவற்றில் கிடைக்கக் கூடிய தற்காலிக சென்சேஷன்களை மற்றைய பணக்காரர்போல 'மகிழ்ச்சி' என்று எண்ணி ஏமாறுகிருள். மறுபுறத்தில் இவை எதுவுமே கிடையாத மக்கள் படும் துன்பங்களை இவர்கள் மறந்துவிட முடியாது. பாவ புண்ணியம், தலைவிதி என்று மதச் சார்பாக வெளியே கூறிஞலும் சமுதாயத்தில் அவர்கள் வாழும் வரை அடிமனதில் தோன்றி பயமுறுத்தக் கூடிய ஏழைகளின், தொழிலாளர்களின் துன்பங்களிலிருந்து இவர்கள் விடுபட்டு விட முடியாது. இவர்கள் அமைதியான, உண்மையான சந்தோசத்தையா அனுபவிக்கிருர்கள். டாக்டர் சுந்தரம் திறமைசாலியே. ஆஞல் அவன் ஒவ்வொரு ஆபரேஷனுக்கும் ஆயிரம்ரூபாவிற்குக் குறையாது லஞ்சம் பெற்று அரசாங்க ஆஸ்பத்திரியிலேயே ஆபரேஷன் செய்வதை அவள் அறியாள். பணக்காரரிடம் லஞ்சம் பெறலாம். ஏழைகள்...! மில் தொழிலாளி முனிதாச பணம் இல்லாததாலேயே ஆபரேசன் தாமதமாகி இறந்தான். இவனை ஒரு நாளைக்கு உதைத்துத் திருத்தவேண்டும்.''

கடற்காற்றின் குளுமை அவள் கழுத்தில் ஊறிக்கொண்டிருந்த வியர்வைத் துளிகளைத் துடைக்கவில்லை. கடலைப் பார்த்தபடி சிறிது நேரம் அப்படியே இருந்துவிட்டாள். அலைகடல் சூனியமாகத் தெரிந்தது.

திருடிவந்த மற்றைய குறிப்புகள் எதையும் படிக்க முடியவில்லை. காரையே நிதானமாக ஓட்ட முடியவில்லை. வழியில் ''தெருவெல்லாம் கூட உங்களுக்கா போட்டிருக்கிருர்கள்'' என்று சயிக்கிளில் வந்த ஒரு தொழிலாளி திட்டிஞன்.

வேகமின்றிக் காரை ஓட்டி வீடு சேர்ந்தாள். அறையைத் தாளிட்டு கட்டிலில் படுத்துக்கொண்டாள். பஞ்சு மெத்தை, உடைகள், நிலைக்கண்ணுடி, அழகு சாதனங்கள், வாசனை சென்ட் யாவும் கண்ணையும் நெஞ்சையும் குத்தின. சிந்தித்துச் சிந்தித்து மூளையும் களைப்படைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை நாலு மணி வரையில் மூத்த பெண் வந்து கதவைத் தட்டியபோதே எழுந்தாள். குளித்துவிட்டு உணவருந்தினாள்.

''அப்பா வந்தாரா?''

''வந்து சாப்பிட்டு விட்டு ஏதோ ஆபரேசன் என்று போய் விட்டார். ஏனம்மா, உனக்கு ஏதாவது சுகயீனமா?''

மூத்த பெண் நெற்றியைத் தொட்டுப் பார்த்துக் கேட்டாள்.

''இல்லையே''

''அம்மா கோல்பேஸ்...''

எங்கும் புறப்பட விரும்பாத போதும் பிள்ளைகளின் வற்புறுத்தலுக்கு இணங்கி அவர்களை கடற்கரைக்கு அழைத்துச் சென்றாள். அவர்களது பழக்கமும் கடற்காற்றும் மனநிலையை மாற்றிவிடலாம் என நினைத்தாள்.

அன்று இரவும் மறுநாட்காலையும் சுந்தரத்துடன் ஆனந்தி எதுவுமே பேசவில்லை. அவனாக பேச்சு ஆரம்பித்த போதும் அவள் மௌனம் சாதித்தாள். ஒரே வீட்டில் இத்தகைய அந்நியமனிதர்கள் போன்ற வாழ்வு அங்கு பழமையே.

சுந்தரம் அவளது செயலைச் சிறிதும் பொருட் படுத்தாது ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டான்.

'என் கணவன் கொலைகாரனா? கொள்ளையடிப்பவா?' அடிக்கடி ஆனந்தி தன்னையே கேட்டுக் கொண்டாள்.

சிந்தித்து மூளை குழம்பிய வேளை சிந்தனையைத் திருப்ப சந்திரனது பேச்சுக் குறிப்புகளை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

''3 வரலாற்றுப் போக்கு—இன்று வரையுள்ள மனித வரலாறு யாவும் வர்க்கப் போராட்டவரலாறாகும் என்று



மார்க்சும் ஏங்கெல்சும் கூறினர். நிலமானிய உரிமை, கடமையை அடிப்படையாகக் கொண்ட நிலப்பிரபு-பண்ணையடிமை உறவுகள் உற்பத்திச் சாதனங்களின் வளர்ச்சிக்குத் தடையாயிருந்தன. அது உடைந்து தொழிலாளி முதலாளிக்கிடையில் ஒப்பந்த உறவு ஏற்பட்டது. முதலாளிகள் லாபம் சேர்க்க 'சுதந்திரம்' அடைந்தனர். முதலாளி விரும்பியபடி தொழிலாளி உழைக்க 'சுதந்திரம்' அடைந்தான். உற்பத்திக்கு உள்ளீடாக இருந்த விஞ்ஞானம், தொழில் நுட்பமாகிய உற்பத்திச் சக்திகளும் சுதந்திரம் பெற்றன. உயர்ந்த லாபம் விரைவாக வளர்ச்சி தர, விரைவான வளர்ச்சி உயர்ந்த லாபம் தந்தது. ஆயினும் உயர்ந்த லாபம் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது. உற்பத்தியில் ஏற்றமும் வீழ்ச்சியும் தொடர்ந்தன... முதலாளிகளின் நலன் ஆதிக்கத்தையும் லாபத்தையும் விரிவாக்குவதிலேயே அடங்கியுள்ளது. மறுபுறத்தில் தொழிலாளர்களின் நலன் கூடிய ஊதியம், தொழில் பாதுகாப்பு, குறைந்த நேர வேலை ஆகியவற்றில் நாட்டம் கொண்டது. இவ்விருவர்க்கங்களும் மற்றவர் நலனைப் பறித்தெடுக்க முயலுகின்றன. இவ்வர்க்கப் போராட்டம் சமுதாயம் முழுவதும் பரந்துள்ளது.

''முதலாளிகள் பண ஆதிக்கத்துடன் அரசு ஆதிக்கமும் பெற்று கல்வி, மதம், கலை இலக்கியம், பிற தொடர்பு சாதன நிறுவனங்களுடன் மக்கள் சிந்தனையை தமக்குவேண்டியவாறு வழி நடத்தவும் குழப்பவும் முடிகிறது. மறுபுறத்தில், எண்ணிக்கையில் கூடிய தொழிலாளர் ஒன்றுபட்டு, வர்க்க உணர்வு பெற்று தொழிற் சங்கம்' அரசியல் கட்சி அமைத்து முதலாளித்துவ அநீதியை எதிர்த்துப்போராடி அவ்வமைப்பைத் தூக்கி எறிவர். தனிச் சொத்துடைமையை ஒழித்து, சமூக தேவையை ஒட்டிய உற்பத்தியை ஏற்படுத்துவர். கூலி அடிமையை...அந்நியமாதலை ஒழிப்பர். சோஷலிச சமுதாயத்தைக் கட்டி எழுப்பி அதன் உயர்நிலையான கம்யூனிசத்திற்கு இட்டுச் செல்வர்.''

ஆனந்திக்கு எதுவும் முற்றாகப் புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனின் விரைவான எழுத்து முன்பே பழக்கமாகியிருந்ததால் படித்து முடித்தாள். அவனது நோட்டுப் புத்தகத்தை முன்னர் பிரதி பண்ணுவது அவள் நினைவில் வந்தது. ஆசிரியர் நோட்ஸ் தரும்போது அவள் குனிந்து எழுதுவது போல் பாசாங்கு செய்து, வேறு ஏதாவது எழுதி, கீறிக் கொண்டிருப்பாள். ஒரு முறை சந்திரனைப் பார்த்து அவனது உருவைக் கீறிக் கொண்டிருந்தாள். தாடியும் மீசையும் வைத்துக் கீறி மாலையில் அவனுக்குக் காட்டவேண்டும் என்று நினைத்தாள். பின்புறமாக வந்த ஆசிரியர், 'நல்லாயிருக்கே, யாரை வரைகிறாய்' என்று கேட்டார். 'சந்திரன்' என்று உதட்டில் வந்ததை மழுப்பி தடுமாற்றத்துடன் 'அர்ச்சுனனை சேர்' என்றாள். 'நாடியையும் தாடியையும் பார்த்தால் லெனின் போல இருக்கிறது. படத்தின் கீழே அர்ச்சுனன் என்றும் எழுதி விடு' என்று சொன்னதை நினைத்துத் தன்னுள்ளே சிரித்துக் கொண்டாள்.

சந்திரனை விரைவில் மீண்டும் காண வேண்டும் என அவள் மனம் உந்திக் கொண்டிருந்தது.

## 13

இரண்டு நாட்கள் பொறுமையாக இருந்தாள். மறு நாட் காலையில் மில்லுக்குப் போன் செய்தாள். அப்போது அவன் அங்கு இல்லை. மாலையில் மீண்டும் போன் செய்தாள்.

'சந்திரன், மாலையில் கட்டாயம் பார்க்க வேண்டும். கோல் பேசிலல்ல. கல்கிசை கடற்கரையில் ஆறுமணிக்கு மேறிஸ் தெரு முடியும் முனைக்கு எதிரே. முன்னர் ஒரு தடவை சண்டை போட்டோமே, நினைவிருக்கா...''



''இன்றைக்கு வசதியில்லை. யூனியன் மீட்டிங் இருக்கு'

'ஏழு, எட்டுமணியென்றாலும் பரவாயில்லை.''

'மீட்டிங் முடியும் நேரத்தைச் சொல்ல முடியாது. ஆனந்தி''

''நாளைக்கு மாலை ஆறுமணி''

சிறிது நேர மௌனம்.

''சரி''

மறு நாள் வரை பொழுது போவதே ஆனந்திக்குக் கஷ்டமாக இருந்தது.

அன்று மனோகரன் மூன்று தடவை போன் செய்து விட்டான். 'சந்திக்க நேரமில்லை' என்று கூறி மறுத்துவிட்டாள். அவனைத் தட்டிக் கழிப்பது போலக் காட்டிய போதும் அவன் ஆனந்தியை விடுவதாயில்லை. வீட்டுக்கே வந்துவிட்டான். பிள்ளைகள் பாடசாலையில். கணவன் ஆஸ்பத்திரியில்.

''வீட்டுக்கு வருவது நல்லதல்ல என்று சொன்னேனே. எனக்கு மட்டுமல்ல உனக்குக் கூடத்தான்'' கண்டிப்பாகவே கூறினாள்.

''உனக்காக இந்த வைரத் தோட்டைச் செய்வித்தேன். இந்தப் பரிசைத் தரவே வந்தேன்''

மனோகரன் தணிவாகச் சொல்லி பரிசை நீட்டினான்.

''நான் என்ன வேசையா?''

அடி நெஞ்சிலிருந்த வெறுப்பு யாவும் வார்த்தையாக வெளிப்பட்டது. மனோகரன் அதிர்ந்து விட்டான். எதுவும் பேசமுடியாது ஒரு கணம் நின்றான்.

''நான்தானே பரிசுகள் வேண்டாம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொறி ஆனந்தி, இனிமேல் தரமாட்டேன். இதை மட்டும் பெற்றுக்கொள்''

''வேண்டாம் வேண்டாம்''

இத்தனை விலையான பரிசை வேண்டாம் என்கிறளே. இவள் யார்?—மனோகரனின் மனம் குறுகுறுத்தது.

''இதை என்ன செய்வது?''

மனோகரனின் பரிதாபக்குரல்.

''நீ கட்டப் போகும் மனைவிக்காக வைத்திருக்கலாம். அல்லது இந்தப் பரிசுக்காக உன்னோடு படுக்க வரத்தக்க எவளுக்காவது கொடுக்கலாம்''

ஆனந்தி கூறிய வார்த்தைகள் அவனை அம்பு போல் தாக்கின. இந் நிலையிலும் அவளை விட்டு விட விரும்பாத வனாக பேச்சை மாற்றிக் கொண்டான். தோல்வியோடு திரும்பினன்.

'இன்றோடு தொலைந்தான்' என ஆனந்தி எண்ணிக் கொண்டாள். ஆயினும் அடி மனம் இவன் ஒரு அழுங்கு. ரோசமில்லாத கோழைகள் தோல்வியை ஏற்றுக் கொள்வ தில்லை.' என்றும் மறுமனம் சொன்னது.

## 14

ஆனந்திக்கு அன்று மாலை இருப்புக் கொள்ளவில்லை. ஐந்தரை மணிக்கே கடற்கரைக்குச் சென்று விட்டாள். மாலை வெய்யில் கண்களைக் கூசச் செய்தது.

மாலை நாலு மணிக்கே மாலைத் தூக்கம் விட்டு எழுந்து விட்டாள். ஷவர் எடுத்து விட்டு, சேலையா, சட்டையா



அணிவது என்பதில் மனப் போராட்டம். தன் இளமைத் தோற்றத்தையும் பழைய பசுமை நினைவுகளையும் காப்பாற்ற சட்டையே அணிவதாக முடிவு செய்தாள். உதட்டில் சாயம் பூசவில்லை. நறுமணம் 'ஸ்பிரே' செய்யவில்லை. 'சிம்பி' ளாகச் செல்ல வேண்டும் என்று அடிமனம் நினைவூட்டிக் கொண்டிருந்தது. அவ்வாறே வந்திருந்தாள்.

கைக்கடிகாரம் மெதுவாகவே ஓடுவதாகத் தெரிந்தது. கடற்கரையில் அங்குமிங்குமாக குடும்பத்தவர், காதலர்கள் உலாவிக் கொண்டிருந்தனர். குழந்தைகள் கடலில் இறங்கி யும் அலை துரத்தும் போது ஓடியும் விளையாடிக் கொண்டிருந் தனர்.

காரிலிருந்து இவற்றைப் பார்த்த படியே பழைய நினைவுகளில் மிதந்து கொண்டிருந்தாள்.

என் காதலில் கட்டுண்டு கிடந்த சந்திரன் இப்பொழுது எப்படி மாறிவிட்டான்? நான் தான் அவனை கம்யூனிஸ்டு ஆக ஆக்கினேனு? என்னைக் கட்டியிருந்தால் இப்படி மாறி யிருப்பானு? விட்டிருப்பேனு? எப்படியாயினும் அவன் சரி யான வழியிலேயே போய்க் கொண்டிருக்கிறன். என் வாழ்க்கையில் எதைக் கண்டேன்? கார், பங்களா, ஸ்ரார் ஓட்டல்கள், செக்ஸ்,பணக்காரக் குடும்பங்களின் பழக்கங்கள் இவற்றிலெல்லாம் அமைதி கிட்டியதா?

வீட்டிலே சுந்தரமும் நானும் அந்நிய மனிதராகவே வாழ்கிறோம். இடையிடை சிறிதுநேரம் செக்ஸால் ஏற் படும் உறவு தவிர வேறு எவ்வகையில் நாம் ஐக்கியப்படு கிறோம். அதுகூட நான் கவனியாவிட்டால், இவர் வேறு நர்ஸ், லேடி டாக்டரை நாடலாம் என்பதற்காகவே 'டாலிங்' என்று கூறிக் கொண்டு செல்கிறேன். அவர்கூட இதை ஒரு கடமையாகவே எந்த நர்ஸை நினைத்துக்கொண்டு உறவு கொள்கிறரோ தெரியவில்லை.

'உன்னை நினைத்துக் கொண்டுதான் என் மனைவியைத் திருப்திப் படுத்துகிறேன்' என்று பாலன் சொன்னன். நடராசா சொன்னன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இதை உன் மனைவியிடம்' சொன்னயா' என்று கேட்டேன். ஒரே பதிலே இருவரிடமும் கிடைத்தது. மௌனம்.

'இதே போல உங்கள் மனைவியும் இருக்கலாமல்லவா' என்றேன். மீண்டும் ஒரே பதில். மௌனம்.

குடும்பங்களெல்லாம் இந்த ஏமாற்று விளையாட்டில்தான் நிலைக்கின்றனவா? மீண்டும் மீண்டும் இவ்வினு அலைபோல் எழுந்து கடற்கரை மணலை கடலலைகள் அரிப்பது போல அவளின் சிந்தனையை அரித்துக் கொண்டிருந்தது.

குழந்தைகள்—இவைதான் குடும்பங்களை உடையாது காப்பாற்றி வைத்திருக்கின்றனவா? அல்லது முதுமைப் பயமா? சமுதாயத்தின் இறுக்கமா? சந்திரனுல்தான் இதற்கு சரியான பதில் கூற முடியும்.

எல்லாக் குடும்பங்களும் பணமின்றியே துன்பப்படுகின்றன. சந்தோஷத்தை இழக்கின்றன. எங்கள் குடும்பத்தில் அந்நிலை இருக்கவில்லை. பணத்தால் கிடைக்கக்கூடிய வசதிகளைப் பெற்றேன். ஆனல் அப்பணம் எப்படி வருகிறது என்பதைப் பற்றி நான் முன்னர் கவலையே படவில்லை. தற்போது உண்மையை அறிந்த போது எத்தனை பயங்கரமாக இருக்கிறது.

பணத்தைச் சேர்ப்பதிலும் சொத்து வாங்குவதிலும் அவர் எவ்வளவு ஆர்வமாக இருக்கிருர். மனேகரனுக்கும் இவருக்கும் இந்தச் சொத்து வெறியில் எவ்வித வேறுபாடு மில்லை. பணத்தைச் சேர்ப்பதானுல் எப்படியும் சேர்க்கலாமா? சமுதாயத்தைக் காப்பவர்கள் இவர்கள் தானு?

சூரியன் கடலில் மறைந்து கொண்டிருந்தான். நேரம் 6.10. திரும்பித் திரும்பி பார்த்தாள். பொறுமையிழந்து, காரிலிருந்து இறங்கி அங்கும் இங்கும் நடந்தாள். சந்திரன் வராது விட்டுவிடுவானே?



ஒளியை இருள் விழுங்கிக் கொண்டிருந்தது.

இருளிலே அவன் வந்தால் அவனைக்கட்டித் தழுவலாமா? காதலித்த இரண்டு வருடங்களிலும் கடற்கரை, பூங்கா, தியேட்டர்களில் கட்டித்தழுவி, முத்தமிட்டதைத் தானே கண்டோம். அப்போதும் அதன் பின்னர் பத்து வருடங்களும் அவனேடு ஓர் இரவையாவது கழிக்க வேண்டும் என்று என் நெஞ்சு தீயாக எரிந்து கொண்டிருந்தது. என்ன விசித்திரம். அவனேடு பழகப்பழக அந்த எண்ணங்களெல்லாம் மறைந்து வருகின்றன. முதல் தடவை கண்ட போது என் நெஞ்சில் எரியும் தீ பற்றிச் சொன்னேன். சந்திரன் என்னதான் எண்ணினனே தெரியவில்லை. அத்தீ இப்போது எழுவதேயில்லை. இது விசித்திரமே. சென்ற தடவை கடற்கரையில் தயங்கித் தயங்கியே என் கைகள் அவனைத் தொட்டன. அவனிடமும் எவ்வித சலனமும் ஏற்படவில்லை.

# 15

மணி 6.30. சந்திரனின் உருவம் தூரத்தில் தெரிந்தது. அவன் நடையை அவள் கண்டு கொண்டாள்.

மனதில் ஒரு பூரிப்பு. அச்சம்.

''பிரிட்டிஷ் ராணி வந்திருக்கிருள். அவள் போவதற்காக பஸ்களையெல்லாம் நிறுத்தி வைத்திருந்தார்கள். ஏகாதிபத்தியப் பிடியும் அதன் மிச்ச சொச்சங்களும் இன்னும் போகவில்லை''

சந்திரன் தானகவே காரணம் கூறினன். இருவரும் கடற்கரையில் சிறிது தூரம் நடந்தனர்.

ஆனந்தி எதுவுமே பேசவில்லை. ஏதோ பிரச்சனை இருப்பதாக எண்ணி கால்களை மணலில் நீட்டியபடி ஒரு பிட்டியில் உட்கார்ந்தான். அவளையும் உட்காரச் செய்தான்.

''பார்த்து ஒரு வாரம் கூட ஆகவில்லை, அதற்கிடையில் என்ன அவசரம்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அவள் எதுவும் பேசவில்லை.

''என்ன ஆனந்தி சொல்லு''

முதுகில் தட்டிவிட்டுக் கேட்டான்.

ஆனந்தி விம்மினாள். வாயில் கைக்குட்டையை வைத்துக் கொண்டு விம்மலைத் தடுக்க முயன்றாள்.

சந்திரனுக்கு ஒரே வியப்பாயிருந்தது. ஆனந்தியா அழுவது! இவளுக்கு என்ன துன்பம்?

''என்ன வென்று சொல்லு?''

சந்திரன் வற்புறுத்தினான்.

கையில் கசங்கியபடி இருந்த டயரித்தாளைக் கொடுத்தாள். சந்திரன் விரித்துப் பார்த்தான். மங்கல் ஒளியில் எழுத்துகள் தெளிவாகத் தெரியவில்லை.

''மாலதிதான் கிழித்து எடுத்தாளோ என்று சந்தேகப்பட்டேன். இதற்கு என்ன? உன்னைப் பற்றி ஏதாவது குறைவாக எழுதிவிட்டேன் என்று கோபமா? அல்லது உன் கணவனைக் கொலைகாரன் என்று எழுதி விட்டேன் என்ற ஆத்திரமா? என் நெஞ்சில் தோன்றிய உண்மையை எழுத எனக்கு உரிமை இருக்கிறது...''

உண்மைக் காரணம் அறியா நிலையில் சந்திரன் மனதில் பட்டதைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆனந்தியின் விம்மல் அடங்கியதும் சொன்னாள்:

''அவர் லஞ்சம் வாங்கிப் பணம் சேர்க்கிறார் என்று எனக்கு இதுவரை நாளும் தெரியவில்லை. அந்தப் பணத்தை அனுபவித்துக் கொண்டிருப்பது இப்பொழுது அருவருப்பாக இருக்கிறது.''

''அட இதற்கா இத்தனை அழுகை. ஒவ்வொரு பணக்காரனும் இப்படியாகத்தான் பணத்தைத் தேடி நீ கண்டது போன்ற சுகம் அனுபவிக்கிறான். இன்றைய சமுகத்தில் நேர்மையாக, நாணயமாக உழைப்பவன்தான் கஷ்டப்படு



கிறான். ஏதோ உன் மனதில் இப்படியான நல்ல எண்ணம் தோன்றியது பெரிய வியப்பே.''

சந்திரன் கூறி அவளது முதுகில் தட்டிக் கொடுத்தான்.

''உன்னை காதலித்த நாட்களில் இருந்த மகிழ்ச்சி, இந்தப் பத்து ஆண்டுத் திருமண காலத்தில் கிடைக்கவில்லை. எல்லோரும் நாங்கள் சந்தோசமாக வாழ்கிறோம் என்று நினைக்கிறார்கள். எத்தனை பொய். வீட்டில் அந்நியர்கள் போலவே வாழ்கிறோம். இது ஒருவருக்கும் தெரியாது. அவரோடு தற்போது நான் பேசுவதேயில்லை''

''இது உன் குடும்பத்தில் மட்டுமல்ல எல்லாப் பணக்காரக் குடும்பங்களிலும் இதே நிலையே யாவையும் மூடி மறைத்து நடிக்கிறார்கள். பணத்தையும் சொத்தையும் தேடுவதில் அவர்கள் நினைவெல்லாம் கழிகிறது. பின்னர் அப் பணத்தால் கிடைக்கக் கூடிய இன்பங்களைத் தேடி அலைகின்றனர். உண்மையில் அவர்கள் காணும் மகிழ்ச்சியெல்லாம் அதோ கடலலையின் மேல் தோன்றும் நுரை போன்றதே. உண்மையான மகிழ்வையும் அமைதியையும் அவர்கள் இன்றைய சமுக அமைப்பில் காண முடியாது. உன்னைப் போன்ற நிலையில்தான் எல்லோரும். உன் வீட்டு விஷயம் எனக்கு வியப்பாகத் தெரியவில்லை.''

''அப்போழுது ஏழைகள் சந்தோசமாக வாழ்கிறார்கள் என்று சொல்லுகிறீர்களா?''

''அவர்கள் துன்பம் வேறு. அடிப்படைத் தேவைகளுக்காக உழைப்பதிலும் போராடுவதிலும் அவர்கள் பொழுது கழிகிறது. அடிப்படைத் தேவைகளைப் பெறும் நடுத்தர வகுப்பினர் உங்களைப் போன்றவரைப் பார்த்து ஏங்குகின்றனர். அதே போன்று வாழ முனைந்து அல்லற்படுகின்றனர். அயல் வீட்டாரோடு போட்டி போடுகின்றனர். கீழ் நிலையில் உள்ளவர்களின் துன்பங்களைப் பார்க்க அஞ்சுகின்றனர். சமுதாயத்தில் சமத்துவமேற்படுவதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலந்தான் குடும்பங்களில், சமுதாயத்தில் சந்தோசத்தை ஏற்படுத்த முடியும்.

''ஏனெனில் அவ்வேளையே எல்லோரும் தாம் விரும்பிய உற்பத்தியில் ஈடுபடமுடியும். இன்று கணவன் உழைக்கும் போது அவனது வாழ்நிலை, சிந்தனை வேறுபடுகிறது. மனைவியின் வேலைகள் வீட்டில். அதையொட்டியே அவள் சிந்தனையிருக்கும். இதனால் இருவர் சிந்தனையுமே வேறுபடுகிறது. அதனாலும் குடும்பங்களில் முரண்பாடுகள், சண்டைகள் ஏற்படுவது வியப்பல்ல.''

''உங்களுக்கு மட்டும் இப்படியான சிந்தனைகள் எப்படி வந்தது? நாங்கள் காதலித்து சுற்றித்திரிந்த காலத்தில் இப்படியான விஷயங்கள் பற்றி நீ பேசவில்லை''

ஆனந்தி கேட்டுவிட்டு பதிலை ஆவலோடு எதிர்பார்த்தாள். அவளது விம்மலெல்லாம் நின்று நிதான நிலைக்கு வந்து விட்டாள்.

''வாழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்ற கோட்பாட்டில் நான் முழு நம்பிக்கை கொண்டவன். 'மில்'லில் வேலைக்குச் சேர்ந்தது, யூனியன் வேலைகள் ஆகிய நடைமுறை. மார்க்சிய நூல்கள் தந்த சித்தாந்தம். இவையே சமூக வாழ்க்கையை ஆழ்ந்து காண வழிவகுத்தது. உன் போன்றவர்களின் வாழ்நிலை வேறு. தொழிலாளர்களின் உபரி உழைப்பைப் பறித்தெடுக்கலாம், பணம் சொத்துச் சேர்க்கலாம், எப்படியும் இன்பம் அனுபவிக்கலாம் என்பவை நீதியாகி, சிந்தனையாகிறது. நீ ஏதோ என்னைக்கண்ட தோஷமோ என்னவோ விசித்திரமாகப் பேசுகிறாய்.''

''எனக்கு ஏதோ நீ சொல்வது, செய்வது தான் சரியாகத் தெரிகிறது. உன்னோடு சேர்ந்து சமுதாயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும். அது எனக்குச் சந்தோஷம் தரும் என்று நினைக்கிறேன். நீ என்னைத் திட்டுவாயோ என்று பயம்...''

ஆனந்தி கூறி முடிக்குமுன் சந்திரன் சிரித்தான்.



''ஆனந்தி, நீ வளர்ந்து பெரிய குடும்பப் பெண்ணாகி விட்டாய் என்று நினைத்தேன். நீ இன்னும் பழைய குழந்தையாகவே இருக்கிறாய். நீயும் இந்தச் சமுதாயத்தில் வாழ்வதால் ஏற்படும் தற்காலிக உணர்வுகள் இவை. நீர்க்குமிழி போன்றவை வாழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்று சொன்னேனே. நீ எங்கள் மில்லிலே வந்து வியர்வை நாற்றம் எடுக்கும் மற்றப் பெண்களோடு வேலைசெய்வாயா? அதன் பின்னர்தான் உன்னை எங்களோடு சேர்த்துக் கொள்ள முடியும். ஏதோ நீ இப்படியாக எண்ணுவதே ஒரு வளர்ச்சிதான். என் பாராட்டுகள். நீ போய் பழைய வாழ்க்கையிலே உனக்குச் கிடைக்கும் சுகங்களை தற்போது அனுபவி. நாங்கள் அவற்றை அழித்தொழிக்கும் வரை நீ அப்படி வாழலாம். இந்த எண்ணம் ஏற்பட்டிருப்பதால் நாம் தனிச் சொத்துடைமையை அழிக்கும் போது மற்றவர்கள் போல் நீ துன்பப் படமாட்டாய். நேரமாகிறது. போகலாமா.''

''முடியாது. எனக்கு உன்னோடுபேசிக் கொண்டே இருக்க வேண்டும் போலத் தோன்றுகிறது''

''அதற்கு இந்த நேரமும் இந்த இடமுமா வேண்டும்?''

''ம்ம். உன்னோடு வாழ்ந்து வாழ்நாளா ளெல்லாம் பேசிக்கொண்டிருக்கும் உரிமையைத் தானே இழந்து விட்டேனே என் குடும்பம் போலத்தான் எல்லாக் குடும்பங்களும் நிஜமான சந்தோசத்தைக் காணாது வாழ்கின்றன என்று சொல்லுகிறாய். அப்போதும் குடும்பங்கள் எல்லாம் உடையாது இருக்கின்றனவே. அதற்குக் காரணம் செக்ஸா, குழந்தைகளா?''

ஆனந்தி கேட்ட கேள்வி சந்திரனுக்கே ஆச்சரியமூட்டியது. இவை பற்றி அவள் சிந்திக்கத் தொடங்கியதையிட்டு மகிழ்ச்சியு மடைந்தான்.

''தனிச்சொத்துடமைதான் அடிப்படைக் காரணம். அத்தகைய சமுதாய அமைப்பை நிலை நிறுத்துவதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பப்பட்ட மேல்மட்ட அமைப்புகளான மதம், கல்வி, சட்டங்கள், கலை இலக்கியங்கள் யாவும் குடும்ப அமைப்பு உடைந்து விடாதபடி காப்பாற்றுகின்றன. நீ கூறும் செக்ஸ், குழந்தைகளைப் பேணுவதற்குக் கூட சட்டங்கள், மதங்கள் மூலம் கட்டுப்பாடுகள் உள்ளன. எவரும் அவற்றை மீறிவிட முடியாது. இதனாலேயே எத்தனை பிணக்குகள், சண்டைகள் இருந்தபோதும் ஒரு சிலராலேயே அவற்றை உடைத்துக் கொண்டு வெளியேற முடிகிறது.''

''சொத்தில்லாத ஏழைக் குடும்பங்களும் உடையாது இருக்கின்றனவே''

சந்திரன் உடனே தொடர்ந்து கூற இருந்த விஷயத்தை அவளாகவே கேட்டு விட்டாள்.

''ஏழைகளிடம் நான் கூறிய மேல்மட்ட அமைப்பு மிக வலிமையாக உள்ளது. கணவன் எஜமானாகவும் மனைவி அடிமையாகவும் உள்ளனர். கணவன் மனைவியை தன் சொத்தாகக் கருதுகிறான். மனைவியும் ஏற்று நடக்கிறாள். என்னோடு இவ்வேளையில் நீ தனிமையில் பேசுவது போல ஒரு ஏழைப் பெண் வந்து பேச முடியுமா? எமது சமுதாயம் வளர்ச்சியடைந்து விட்டதாக எண்ணாதே. அடிமைச் சமுதாயத்தின் மிச்ச சொச்சங்கள் இன்னும் நிலவுகின்றன. இதன் முதல் தூமாக உள்ளவர்கள் பெண்கள். இதிலிருந்து ஓரளவு விடுதலை பெற்ற நிலையில் நீ உள்ளாய் என்பதில் சந்தோஷப்படவேண்டும். தனிமனிதரால் சமுதாயத்தைத் திருத்தி அமைத்து விட முடியாது. அது பாட்டாளிகளால் மட்டுந்தான் முடியும். அதற்காகவே நானும் ஒரு பாட்டாளியாக வாழ விரும்புகிறேன். உனக்கு ஏழைகளிலும் பார்க்க ஓரளவு சந்தோஷமாக வாழ எல்லா வாய்ப்புகளும் உள்ளன. போய் வாழ முயலு.''

சந்திரன் எழுந்தான். அவளது கையைப் பிடித்துக் கொண்டு ஆனந்தியும் எழுந்தாள். அவள் கற்பனையில் எண்ணிய செக்ஸ் உணர்வு எதுவும் அவ்வேளை ஏற்படாதது



அவளுக்கே வியப்பாயிருந்தது. 'இன்ரெலக்சுவல் பார்ட்னஷிப்' என்பது இதுதானா? அத்தகைய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டேனா? அவர் தன் ஆபரேஷன் திறமையைப் பற்றி, சொத்துப் பற்றி, கம்பனிப் பங்குகளின் ஏற்ற இறக்கத்தைப் பற்றியே பேசுவார். சந்திரனைப் போல சமுதாயத்தைப் பற்றிச் சிந்திப்பவரா? விளக்கம் கூறுவாரா?

கடற்கரை வழியே காரை நோக்கி நடந்து கொண்டிருந்த போது ஆனந்தி ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தாள். கடலலையின் ஓசை மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. தான் ஏதோ ஒரு வகைத் தெளிவும் தெம்பும் பெற்றிருப்பதாக ஆனந்தி உணர்ந்தாள்.

சந்திரனும் ஆழ்ந்த சிந்தனையுடனேயே நடந்தான். திடீரென தன் சிந்தனையில் விடுபட்டவனாக காரை நெருங்கியதும் சந்திரன் கூறினான்:

''ஆனந்தி, இச்சமூக முரண்பாடுகள் பற்றி அறிய நீ ஆர்வம் கொண்டிருப்பதனால் உனக்கு முன்னர் கூறிய ஒரு விஷயத்தை நான் மீண்டும் கூறுகிறேன். உற்பத்திச் சாதனங்கள் முதலாளிகளின் ஆதிக்கத்தில் உள்ளன. இன்றைய சமூக அமைப்பில் உற்பத்தியில் ஈடுபடும் மனிதர்கள் என்ன செய்வது, எப்படிச் செய்வது என்பதைத் தீர்மானிக்க முடியாதவர்களாயுள்ளனர். உற்பத்தி செய்த பண்டமே அவர்களுக்குக் கிடைப்பதில்லை. மனிதர்களிடையே கூட்டுறவின்றி போட்டா போட்டி, பொறாமை, கழுத்தறுப்பு நடைபெறுகிறது. இவ்வாறு அந்நியப் பட்டுள்ள நிலையில் மனிதர்கள் என்ற உயர்ந்த பூரணத்துவ நிலை எய்தமுடியாது. மனிதர்களே தம் உள்ளுணர்விலிருந்து அந்நியமாகின்றனர். இந்நிலையில் எல்லாக் குடும்பங்களிலும் அந்நிய மனிதர்களையே நாம் காணலாம். இன்றைய சமுக அமைப்பு உடைத்தெறியப்படாது சுதந்திரம், மகிழ்ச்சி, அமைதி, அன்பு, காதல் எதுவும் எக்குடும்பத்திலோ அல்லது தனிமனிதர்களிடையோ நிலை பெற முடியாது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இன்றைய சமுதாய அமைப்பை எப்பொழுது உடைத்தெறியப் போகிறீர்கள்?''

ஆனந்தி புதுமையைக் காண விரும்பும் குழந்தை போலவே கேட்டாள்.

''அதற்காகவே நாம் முயன்று கொண்டிருக்கிறோம். இன்றைய சமூக அமைப்பு என்றோ உடைத்தெறியப் படுவது நிட்சயம். அதை விரைவு படுத்தவே நாம் நினைவுபூர்வமாக கட்சி அமைத்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். அது அடுத்த ஆண்டும் நடைபெறலாம். ஐந்து, பத்து ஆண்டுகள் கழித்தும் நடை பெறலாம். ஏகாதிபததியத் தாக்கங்கள் வளர்ந்து முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. புறநிலை வாய்ப்பாக உள்ளது. அகநிலையை ஒருமைப் படுத்துவதுதான் பிரச்சனையாக உள்ளது. மனித வரலாற்றில் பத்து, இருபது ஆண்டுகளே குறுகிய காலமே. நாம் இப்புரட்சியை நடாத்தத் தவறினால் எமது பிள்ளைகள் செயலாற்றி விடுவார்கள்.''

சந்திரனின் குரலில் உண்மை உணர்வும் நம்பிக்கையும் ஒலித்தது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நிய மனிதர்கள்

மனிதன் பிறக்கும்போது நல்லவன். இரக்கம் அன்பு உடையவன்...என்று கூறுபவர் பின் சமுதாயத் துன்பங்களைப் பார்த்துவிட்டுத் தலைவிதி, விலங்குச் சுபாவம், அறியாமை என்று விளக்கம் கூற முனைகின்[illegible]ர்... அடிப்படைக் காரணங்களைச் சமூக விஞ்ஞான[illegible] ஆராய்ந்து பார்ப்பவர், தீர்வு காண முயல்ப[illegible].

உடலுழைப்பில் ஈடுபடாத முதலாளிகள் பணத்தையும் ஆதிக்கத்தையும் வைத்துக் கொண்டு இன்பத்தைத் தேடி அலைகின்றனர். அவர்கள் நிரந்தர மகிழ்ச்சியையோ, அமைதியையோ தம் வாழ்விலும் காண்பதில்லை. அவர்கள் இன்பமென்று காண்பதெல்லாம் ஒருவித சென்சேஷனே—உணர்வுக் கிளர்ச்சியே...ஒரே சமூகத்தில் வாழ வேண்டிய நிலையில் ஏழைகளது அசுத்தம், நோய்கள், துன்பங்களிலிருந்தும் தாம் அசுத்தப்படுத்தும் காற்று, தண்ணீரிலிருந்தும் அவர்களும் தப்பிவிட முடியாது.

போட்டா போட்டி, பகைமை, பொறாமை, பேராசை... இன்றைய சமூகத்தில் நிலவுகின்றன. இந் நிலைகளினால் மனித வாழ்வின் நிறைவை, பூரண மகிழ்ச்சியை, மனித சாரத்தை உழைப்பவர் மட்டுமல்ல; உழைக்காத முதலாளிகளும் காண முடியாதவர்களாகின்றனர்.

பரதன் பதிப்பகம்

63 தையப்பன் தெரு

சென்னை 600 001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org